திருச்செந்தூர்

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்

அஷ்டபந்தன கும்பாபிஷேக மலர்

பொருளடக்கம்

எண்		பக்கம்
	அணிந்துரை கனம் அமைச்சரவர்கள்	
1.	செந்திலாண்டவன் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் திரு. அ. உத்தண்டராமன் அவர்கள்	1
2.	திருச்செந்தில் முருகன் கருணை வெள்ளமும் துலைக்கோலும் ஸ்ரீலஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள்	7
3.	அலைவாய் அமர்ந்த பெருமாள் திரு. பி. ஸ்ரீ	10
4.	சங்கரர் செந்திற் காட்சி திரு. கே. நடேச கவுண்டர்	16
5.	திருச்செந்தில் வெற்றிக் கொடிமரம் குகஸ்ரீ ரசபதி	23
6.	ஏன்? ஏன்? திரு. ச. தண்டபாணி தேசிகர்	32
7.	யானைக்கும் கலங்கார் திரு. கி. வா. ஜகந்நாதன்	37
8.	முருகன் வழிபாட்டின் தொன்மை திரு. பி. கே. சண்முகநாதன்	42
9.	இடும்பன் கோவில் திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை	47
10.	வாழ வைப்போன் திருமதி காமாட்சி குமாரசாமி	50
11.	கந்தபுராண உண்மை விளக்கம் திரு. ச. முத்துக்குமாரசாமி பிள்ளை	54
12.	செந்தி வாழ்வு பேராசிரியர், கோ. சுப்பிரமணிய பிள்ளை ... ... எம். ஏ., பி. எல்.	59

M. Bhaktavatsalam
HOME MINISTER

FORT ST. GEORGE, MADRAS
7—8—59

அணிந்துரை

நம்முடைய நாடு கோயில்கள் நிறைந்தது. அவைகளில் தேவாரப் பாடல் பெற்ற சிவத் தலங்களும், ஆழ்வார்களால் மங்கள சாசனம் பெற்ற திருமால் எழுந்தருளியுள்ள திவ்விய க்ஷேத்திரங்களும், திருப்புகழ் பாடல் பெற்ற முருகன் கோயில்களும் சிறந்தவை. முருகன் கோயில் கொண்டுள்ள பதிகளில் மிகவும் பழமையும், பெருமையும் வாய்ந்தவை ஆறு படைவீடுகள். திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலே என்பன அவ்வாறும். திருச்செந்தூர் என்ற படைவீடு கடற்கரைத் தலம். ஆதலின் அதை அலைவாய், திருச்சீரலைவாய் என்றும் கூறுவர். சேந்தன் என்பது முருகனுக்கு ஒரு பெயர். அவன் இல் (இருக்குமிடம்) சேந்தன் இல், சேந்து இல், செந்தில் என்ருயிற்றென்பர். முருகன் சூரனைக் கொல்வதற்கு முன்பு பாடி வீடு கொண்டதும், பிறகு வெற்றியைக் கொண்டாடியதும் இப்பதியாதல் பற்றி ஜெயந்தி என்ற பெயர் செந்தி, செந்தில், செந்தூர் என்று வழங்கலாயிற்று என்று கூறுவாரும் உளர். சங்க இலக்கியங்களில் செந்தில், அலைவாய் என்றும், தேவாரத்தில் செந்தில் என்றும், திருப்புகழில் திருச்செந்தூர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. திரு முருகாற்றுப்படை, சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு முதலிய நூல்களில் இத் தலத்தைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதால் நம் நாட்டிலுள்ள மிகப் பழைய பதிகளில் ஒன்று என்று அறியக் கிடக்கின்றது. இத் தலத்தைப் பற்றி மிகப் பல நூல்கள் எழுந்துள்ளன. ஐந்து வயது வரை ஊமையாக இருந்து இம் முருகன் திருமுன் வந்ததும் குமரகுருபரர் பாடிய கந்தர் கலிவெண்பாவும், முருகன் அருளால் வயிற்றுவலித் துன்பம் நீங்கப்பெற்ற வைணவ அந்தணரான பகழிக்கூத்தர் பாடிய திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ் என்ற நூலும் மிகவும் சிறப்புடையன; பக்திச் சுவையுடையன.

இத்தகைய மகிமை வாய்ந்த திருச்செந்தூர்ச் செந்திலாண்டவன் கோயிலுக்கு 8—7—59ல் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதையொட்டி தலபுராணம், திருமுருகாற்றுப்படை, திருச்செந்திற் கலம்பகம், திருச்செந்தூர்த் திருப்புகழ்ப் பாடல்கள், திருச்செந்தில் நீரோட்டவயமக அந்தாதி என்ற நூல்கள் கும்பாபிஷேகத்தின்போது வெளியிடப் பெற்றன. இப்போது கும்பாபிஷேக மலர் ஒன்றும் தேவஸ்தானத்தாரால் வெளியிடப்பெறுவது மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய செயலாகும். இம் மலரில் திருவாளர்கள் பி. ஸ்ரீ ஆச்சார்யா, "கலைமகள்" ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன், குகஸ்ரீ இரசபதி, ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை முதலிய பேரறிஞர்களின் கட்டுரைகள் திகழ்கின்றன. கும்பாபிஷேக மலரை வெளியிட்ட திருச்செந்தூர்க் கோயில் தேவஸ்தானத்தாரின் முயற்சி மிகவும் பாராட்டுதற்குரியது.

எம். பக்தவத்ஸலம்

உ
முருகன் துணை

செந்திலாண்டவன் அஷ்டபந்தன கும்பாபிஷேகம்

அ. உத்தண்டராமன்
ஆணையாளர், அறநிலையப் பாதுகாப்புத்துறை, சென்னை.

'பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பு ஆறாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச்சேறலும் நிலைஇய பண்பே' — நக்கீரர்

'வெண்டலைப்புணரி அலைக்கும் செந்தில்' — புறநானூறு

'திருமணி விளக்கின் அலைவாய்' — அகநானூறு

'சீர் கெழு செந்தில்' — சிலப்பதிகாரம்

'செந்திலை யுணர்ந்துணர்ந்துணர்வுறக்
கந்தனை யறிந்தறிந்தறிவினிற்
சென்று செருகுந்தடந் தெளிதரத் தணியாத
சிந்தையு மவிழ்ந்தவிழ் ந்துரையொழித்
தென்செயல ழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர என்றுநின தெரிசனைப் படுவேனோ' — அருணகிரியார்

'சகலமு முதலாகிய அறுதிநிலை மேவிய தடமயில் தனிலேறிய பெருமாள்'
'ஆறு திருப்பதியில்வளர் பெருமாளே'

என்பன அருணகிரியார் திருவாக்கு. கலியுக வரதனாகிய முருகப்பெருமான் திருக்கோயில் கொண்டருளிய திருத்தலங்கள் பல. அவற்றுள் முதன்மையாக உள்ளவை திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்னும் ஆறுபடை வீடுகள். அவற்றுள் சூரசம்மாரம் செய்து தேவர்களை மீட்ட படைவீடு திருச்செந்தூர்.

"சிக்கலில் வேல் வாங்கிச் செந்தூரில் சம்மாரம்" என்ருெரு பழமொழி வழங்குகிறது. இன்னும் சிக்கல் சிங்கார வடிவேலன் அன்னை வேல்நெடுங்கண்ணியிடம் வேல்வாங்கும் காட்சி ஒரு கண் கொள்ளாக் காட்சியாக சஷ்டி உத்சவத்தில் நடைபெறுகிறது. இதற்குக் கந்தபுராணம் முதலிய நூல்களில் ஆதாரமிருப்பதாகத் தெரியவில்லை. ஆனுல் திருச்செந்தூர்த் திருப்புகழில் ஓரிடத்தில்

'பம்பரமே போலாடிய சங்கரி வேதாளநாயகி பங்கய சீபாதநூபுரி கரசூலி
பங்கமிலா நீலி மோடி பயங்கரி மாகாளி யோகினி
பண்டு சுராபானசூர ரொடெதிர் போர்கண்டெம்புதல் வாவாழி வாழியெனும்படி வீருன வேல்தர
என்று முளானே மனேகர வயலூ ரா
இன்சொல்வி சாகாக்ருபாகர செந்திலில் வாழ்வாகியேயடி
யென்றனையீடேற வாழ்வருள் பெருமாளே'

என்று பாடுகிருர்.

முருகன் தமிழில் வைதாரையும் வாழ்விக்கும் செந்தமிழ்க் கடவுள். திருப்பரங்குன்றத்திலும் பழநியிலும் மகம்மதியர் வழிபாடியற்றுவதும் இலங்கையிலுள்ள கதிர்காமத்தில் சிங்களவரும் புத்தரும் ஏனையோரும் வழிபடுவதும் யாவரும் அறிந்ததே. முருகு என்ற சொல்லுக்கே அழகு, இளமை, மணம், இனிமை, தெய்வத் தன்மை எனப் பல பொருள்கள் உள. இத்தகையப் பல்வேறு நற்பண்புகளுடன் விளங்கும் பரம்பொருளே முருகன்.

கந்தன் என்ற சொல் ஸ்கந்தன் என்ற வடமொழிப் பதத்திலிருந்து வந்தது. அதன் பொருள் இணைப்பு, பற்றுக்கோடு, கம்பம், தோள் வலிமை எனப் பல வகைப்படும். 'பற்றுக பற்றற்ருன் பற்றினை' என்றபடி அவனே உண்மையான பற்றுக்கோடு. 'தன் கடன் அடியேனையும் தாங்குதல்' என்ருர் அப்பர். தூண் போல் அசைவின்றி இருப்பதாலும் கம்பம் போன்றவன் முருகன். வில்லேந்திய முருகன் வலிமிக்க பன்னிரண்டு தோள்களை யுடையவன். உமாதேவியார் "சேயவன் வடிவம் ஆறும் திரட்டி ஒன்ருய்ச் செய்தாள் ஆயதனுலே கந்தனும் நாமம் பெற்ருன் முருகன்".

'கொலைப்பால் விளங்கும் பரசுதரன்
குன்றிலவரைக் கொடுசெல்லக்
கூட்டியணைத்துச் சேரவொரு
கோலமாக்கிக் கவுரி திரு
முலைப்பால் குடித்த கனிவாயன்

முருகன் என்ருர் பகழிக்கூத்தர். வைகாசி விசாகத்தில் தோன்றியதாலும், (வி—பட்சி, சாகன்—சஞ்சரிப்பவன்) மயிலாகிய பட்சியை வாகனமாகக் கொண்டு சஞ்சரிப்பவன் ஆதலால் முருகனுக்கு விசாகனென்ற பெயரும் உண்டு.

வைகாசி விசாகத் திருவிழா இந்தத் தலத்தில்தான் வேறெங்கும் காணுத தனிச் சிறப்புடன் கொண்டாடப் பெறுகிறது. அதிகாலையிலேயே அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மக்கள் பெருந்திரளாக சமுத்திர ஸ்நானம் மற்றும் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து இடை விடாமல் கோயிலுக்குச் சென்று வழிபட்டுக் கொண்டே யிருப்பது ஒரு தனிப் பெருங் காட்சி. இந்த விழா வைகாசி வசந்தோற்சவமாக விசாக தினத்தை இறுதியாகக் கொண்டு பத்து நாட்கள் நடைபெறுகிறதென்ருலும் விசாக தினத்தன்றுதான் மக்கள் அயலூரிலிருந்து பெருந்திரளாக வந்து வழிபடுகிருர்கள். பத்து நாட்களும் விசேஷ அபிஷேகங்கள் நடந்தாலும் விசாகத்தன்று நாகர்கோயில் வெள்ளித் தாம்பாளக் கட்டளைக்காரர் சிறந்த முறையில் உச்சிக்காலத்தில் ஜயந்திநாதர்க்கு அபிஷேகங்கள் செய்கிருர்கள். அதுவரையில் இந்த மகாபிஷேகம் ஜயந்திநாதர் இருக்கும் இடமாகிய சிறு அறையில்தான் நடந்து வந்திருக்கிறது. இது ஒருவருக்கும் புரியாமலே இருந்தது. இந்த ஆண்டில் இந்த அபிஷேகத்தைக் கோயில் பிரகாரத்தில் வைத்து எல்லோரும் பார்க்கும்படியாக நடத்தியதால் பல மக்கள் கண்டு களித்தார்கள். இனி இந்த அபிஷேகத்தை சஷ்டி மண்டபத்தில் வைத்து நடத்த வேண்டுமென்று ஆலய நிர்வாகக் குழுவினர் திட்டமிட்டிருக்கின்றனர். அன்று இரவு முருகப்பெருமான் ஸ்ரீவள்ளி தேவயானை சமேதராய் வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளி அங்கே பன்னிரண்டு முறை மத்ய மண்டபத்தைப் பிரதட்சணம் செய்வது வழக்கம். இந்த வைபவம் இதுவரை இரவு 10, 11 மணிக்குத் தொடங்கப்பெறுவது வழக்கமாக இருந்ததால் பெரும்பாலான மக்கள் சுவாமி சண்முக விலாசத்துக்கு வந்தவுடனேயே தரிசனம் செய்துவிட்டுப் போய்விடுவார்கள். இந்த ஆண்டு இரவு சுமார் 8 மணிக்கு சுவாமியை எழுந்தருளச் செய்து ஒன்பது மணிக்கெல்லாம் வசந்தமண்டபத்தை அடைந்து கீழே காணும் பதினெரு விதமான பாராயண சங்கீத வாத்தியங்களுடன் பிரதட்சணம் நடைபெற்றதைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு மகிழ்ந்தார்கள் :–

1. வேத பாராயணம் 2. தேவாரம் (திருமுறைகள்) 3. திருப்புகழ் 4. பிள்ளைத்தமிழ் 5. நாதசுரம் 6. பிரமதாளம் 7. நந்தி மத்தளம் 8. திருச்சின்னம் 9. வேல் வகுப்பு 10. வாள் வகுப்பு 11. கப்பல் பாட்டு.

முருகப்பெருமான் மத்திய மண்டபத்தில் எழுந்தருளியவுடன் வசந்த மண்டபத்தின் நடுவேயுள்ள ஒரு நீர்த்தொட்டியில் ஆறு மீன்கள் மனித உருப்பெற்றதாக மீன் விளையாட்டு என்ற ஒரு காட்சி நடைபெறுகிறது. இதன் தத்துவம் என்னவென்ருல் பராசர முனிவர் வெளியூர் சென்று தன் இல்லத்துக்குத் திரும்பியபோது தன்னுடைய ஆறு குமாரர்களும் மீன்களை எடுத்துப் போட்டு விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டு கோபங் கொண்டு 'மீன்களாய்ப் பிறந்து அவற்றின் துன்பத்தை அனுபவிக்கக் கடவீர்' என்று சாபமிட்டார். அந்தப் பிள்ளைகள் தங்கள் தவறை உணர்ந்து சாப விமோசனம் வேண்டியபோது "நீங்கள் சரவணப் பொய்கையில் மீன்களாக இருங்கள். முருகப் பெருமான் அவதார காலத்தில் உமாதேவியார் அங்கு வந்து

அவரை எடுத்துப் பாலூட்டும்போது சரவணப் பொய்கையில் கலக்கும் பாலின் மகிமையால் நீங்கள் மீண்டும் மனித உருப்பெறுவீர்கள் " என்று அருள் செய்தார். அதன் பயனாக வைகாசி விசாகத்தன்று முருகன் ஆறு குழந்தைகளாகத் தோன்றி உமாதேவியரால் கூட்டியணைத்துச் சேர ஒரு கோலமாக்கிப் பால்கொடுத்த போது அந்தப் பொய்கையில் மீன்களாக இருந்த அறுவரும் சுய உருப் பெற்றனர் என்ற வரலாறுதான் 'மீன் விளையாட்டு' என்று காட்டப்பெறுகிறது. இனி இந்தத் திருவிளையாடலை ஆறு பொம்மை மீன்களை யும் ஆறு ரிஷி குமாரர் உருவங்களையும் வைத்துக் காட்ட வேண்டுமென்று ஆலய நிர்வாகக் குழுவினர் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

முருகன் ஆறுபடை வீடுகளில் தனிச் சிறப்பு வாய்ந்த இந்தத் திருப்பதியில் உள்ள திருக்கோயிலில் மூல ஸ்தானத்திலுள்ள முருகன் நின்ற திருக்கோலமாக ஒரு திரு முகத்துடனும், அபயவரத ஜபமாலை புஷ்பம் ஏந்திய திருக்கரங்களுடனும் கிழக்கு முகமாகக் காட்சியளிக்கிறார். இந்த மூல மூர்த்தியின் பின்புறம் உள்ள சிவலிங்க மூர்த்தியை முருகப் பெருமான் வழிபட்டு வந்ததாக வரலாறு. மூல ஸ்தானத்தை ஒட்டிய பாம்புப் பிரகாரம் என வழங்கும் உட் பிரகாரத்தில் கன்னி மூலையில் பஞ்சலிங்க மூர்த்திகள் எழுந்தருளி யுள்ளார்கள். செந்திலாண்டவனின் ஆறுமுகநயினாராகிய உத்சவ மூர்த்தி தெற்கு முகம் நோக்கி எழுந்தருளி யுள்ளார். இவருக்கு நேர் எதிராகத்தான் சண்முக விலாசம் என்ற பிரதான வாயில் மண்டபம் அமைந் திருக்கிறது. கோயில் பிரகாரத்தில் தென்மேற்கு, வடமேற்குப் பக்கங்களில் வள்ளியம்மை, தெய்வயானை தனிக் கோயில்கள் அமைந்துள்ளன. ஈசானியத்தில் நடராஜரும், பைரவரும் கோயில் கொண்டுள்ளனர். வெளிப் பிரகாரத்தில் வடபுறம் மகாவிஷ்ணுவுக்கும் ஒரு தனிக் கோயில் அமைந்திருக்கிறது. திருக்கோயிலுக்கு முன்னுள்ள சமுத்திர தீர்த்த கட்டம் வதனாரம்ப தீர்த்தம் என வழங்குகின்றது. குதிரை முகம் பெற்ற அரசி இத்தலத்தில் மூழ்கிச் சுய முகம் பெற்றாள் என்பது வரலாறு. இதற்கு வடக்கேயும் தெற்கேயும் பல தீர்த்தங்கள் உள்ளன. கோயிலுக்குத் தெற்கே நாழிக்கிணறு இருக்கிறது.

இந்தக் கோயிலில் வழிபாட்டு முறை பின்வருமாறு:- ஸ்கந்த புஷ்கரணியென்ற குளத்தில் முத லில் நீராடி, பின்னர் நல்ல தண்ணீர்க் கிணறான நாழிக்கிணற்றில் நீராடி அதன் பின் கடல் நீராடுதல் உத்தமம். வழிபடுவோர் தூண்டு கை விநாயகர் கோயிலுக்குச் சென்று வழிபட்டு, கோயில் வெளிப் பிர காரத்தைச் சுற்றி வந்து சண்முக விலாசத்தில் நடு மண்டபத்தை வலம் வந்து கோயிலுக்குட் செல்ல வேண்டும்.

மூலஸ்தானத்தின் முன்பு வலது பக்கம் இருக்கும் விநாயகரை வழிபட்டு மூலஸ்தானத் திருவாயில் இருபாலராகிய வீரபாகு தேவர், வீரமகேந்திர தேவரை வணங்கி மூலவரை வழிபடவேண்டும். அதன்

பின்பு ஆறுமுகநயினரை வழிபட்டு உட்பிரகாரம் சென்று முதல் பிரகாரம் சுற்றவேண்டும். பிறகு அடுத்துள்ள பிரகாரத்தில் வள்ளியம்மை, தெய்வயானை இருவரையும் வணங்கிச் சண்டீசரிடம் அனுமதி பெற்று நடராஜப் பெருமானையும் பைரவரையும் வணங்கி அருள் பெற்றுக் கொடிமரம் சுற்றி வெளிப்பிரகாரம் வந்து தெற்குவாயில் அருகேயுள்ள குமர விடங்கப்பெருமானை வணங்கி வழிபட்டு ஐராவத மண்டபம் உள்ள இரண்டாவது பிரகாரத்தில் கன்னி மூலையிலுள்ள 108 இலிங்கங்களை வழிபட்டு, மேற்குப் பிரகாரத்திலுள்ள முக்குறுணிப் பிள்ளையார் என வழங்கும் கற்பக விநாயகரையும் வணங்கி, வடக்குப் பிரகாரத்திலுள்ள திருமாலை வழிபட்டு மீண்டும் ஆறுமுகநயினருக்கு எதிரிலுள்ள பிரதான வாயிலின் வழியே வெளியே சண்முக விலாசத்துக்கு வந்து அங்கே கிழக்கு நோக்கி இருந்து பஞ்சாட்சரம், சடாட்சர மந்திரங்களை ஜபிக்க வேண்டும்.

8—7—59-ல் செந்திலாண்டவன் திருக்கோயிலில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. முந்திய அஷ்டபந்தன கும்பாபிஷேகம் 18 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றது. சாதாரணமாக சுமார் 12 ஆண்டுக்கொரு முறை அஷ்டபந்தன மருந்து சாத்தப் பெறல் வேண்டும். இப்போது நடக்கும் இந்தக் கும்பாபிஷேக விழாவில் பல அரிய நூல்கள் வெளிவர இருப்பது ஒரு தனிச் சிறப்பு. ஆலய நிதியிலிருந்து தல புராணமும், திருமுருகாற்றுப்படை விளக்கமும் பதிப்பிக்கப் பெறுகின்றன. திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து அந்த ஆதீனத்தைச் சேர்ந்த முன்னைட் புலவர் சாமிநாத தேசிகர் இயற்றிய திருச்செந்திற் கலம்பகம் வெளியிடப்பெறும். திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின் வெளியீடாக அருணகிரிநாரியார் அருளிய திருச்செந்தூர்த் திருப்புகழ்ப் பாடல்கள் உரையுடன் வழங்கப்பெறும். செந்திலாண்டவன் திருப்பணியில் மிகவும் ஈடுபட்ட சென்னை ஸ்ரீ பால சுப்ரமணியம் டிரஸ்டார், சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய திருச்செந்தில் நீரோட்டகயமக அந்தாதி 30 பாடல்களையும் குகஸ்ரீ ரசபதி யவர்களின் உரையுடன் வெளியிடப்பெறும்.

இந்தத் திருக்கோயிலில் மூலவர் சந்நிதியில் போற்றிகள் என்ற மந்திர விதிப்படி பூஜை செய்கிறவர்களுடைய தந்திரப் பிரகாரம் பூஜை நடைபெறுகிறது. இதற்குரிய அஷ்டபந்தன மருந்தும், கும்பாபிஷேக முறையும் தனிப்பட்டது. திருவனந்தபுரத்திலிருந்து இதற்குரிய தந்திரி வந்து கிரியைகளை நடத்தி வைக்கிறார். ஆறுமுகநயினர், வள்ளி, தெய்வயானை முதலிய விக்கிரகங்களுக்கு குமாரதந்திரம், சிவாகமங்கள் விதிப்படி கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இவ்வாறு செய்யும் கும்பாபிஷேகங்களால் மூர்த்திகளின் சாந்நித்யம் விளக்கம் பெறுகிறது. இந்தப் பெருஞ் சாந்தி விழாவில் எல்லா மக்களும் கலந்துகொண்டு

கலியுகவரதனாகிய முருகப்பெருமானுடைய திருவருளைப் பூரணமாகப் பெற்று இம்மையிலும் மறுமையிலும் எல்லா இன்பங்களையும் துய்த்துப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றுய்வார்களாக.

— ஒழுக்கமுடன்

இம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கண் மோசித்துத்—தம்மைவிடுத்
தாயும் பழைய வடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய
கடியேற்கும் பூங்கமலக் கால் காட்டியாட் கொண்
டடியேற்கு முன்னின் றருள். — கந்தர் கலி வெண்பா

திருந்தப் புவனங்கள் ஈன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டில் ஏறி அறுவர்கொங்கை
விரும்பிக் கடல்அழக் குன்றழச் சூரழ விம்மிஅழுங்
குழந்தைக் குறிஞ்சி கிழவன்என் றோதும் குவலயமே. — கந்தரலங்காரம்

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன் மாமயிலாய் போற்றி
முன்னிய கருணை யாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி. — திருச்செந்தூர் தல புராணம்

உ
சிவமயம்

திருச்செந்தில் முருகன் கருணை வெள்ளமும் துலைக்கோலும்

(ஸ்ரீலஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள்)

திருச் செந்திலில் முருகன் "கருணைவெள்ள மெனத்தவிசில் வீற்றிருந்தான்." என்பது கந்தர் கலி வெண்பா. கந்தன் ஒருருவமாயினான் ஆதலினாற் கந்தன் எனப் பெயர் பெற்றான் என்று பெரியோர் கூறுவர். "அந்தமில்லதோர் மூவிருவடிவு மொன்றாகிக் கந்தன் என்று பேர் பெற்றனன் கவுரி தன் குமரன்" (சரவணப் படலம் 21). சரவணப் பொய்கையிலே திருவவதாரத்தின் பின் இறைவன் அருளினாலே இருந்தான் குமரன். ஒரு கமல மலரிலே ஆறு திருமுகங்களும் கொண்டு அழகாக எழுந்தருளியிருந்தனன். அப்போது புடையில் யாருமின்றித் தனித்திருந்தனன். அதுகண்டு திருமால் முதலிய தேவர்கள் கூடி கார்த்திகைப் பெண்கள் அறுவரையும் "நீங்கள் உங்கள் முலைப்பாலை இக்குமரமூர்த்திக்கு ஊட்டி வளர்த்துங்கள்" என்று சொன்னார்கள். அவர்களும் அவ்வண்ணமே செய்ய முற்பட்டார்கள். இளம் பெண்களுக்குக் குழந்தைகளின் பேரில் தனிப்பிரியம். தங்கள் வீடுகளிலிருந்து வேறு வீடுகளுக்குப் போனபொழுது அங்கு ஒரு குழந்தையைக் கண்டால் அதனை எடுத்துக் கொஞ்சுவார்கள். இக் குழந்தையைப் பார்த்தார்கள். அதன் மேல் ஓர் ஆசை வந்தது. குழந்தையைப் பாலூட்டி வளர்க்க விரும்பினார்கள். ஒரு குழந்தைதான் அங்கிருந்தது. ஒவ்வொருவரும் அவ்வாறே ஆசை கொண்டார்கள். அந்த ஆசையை அறிந்தான் முருகன். அவ்வவர் உள்ளம் தோறும் இருப்பவனல்லவா? இவன் உயிர்கள் தோறும் இருப்பவன் என்று வேதங்கள் முழங்குகின்றன. "உறுநர்கள் தமக்கு வேண்டிற் றுதவுகோ னாதலாலே" என்று இங்கு எடுத்துக் கூறுவது புராணம்.

துயிலவோ ருருவம்; துஞ்சித் துண்ணென வெழுந்து மென்சொற்
பயிலவோ ருருவம்; பாய்தன் பயோதரம் பவளவாய் வைத்
தயிலவோ ருருவம்; நக்காங் கமரவோ ருருவம்; ஆடல்
இயலவோ ருருவம்; வாளா இரங்கவோ ருருவஞ் செய்தான் (119)

ஒருருத் தவழமெல்ல; ஒருருத் தளர்ந்து செல்ல;
ஒருரு நிற்றல் செய்யா தொய்யென வெழுந்து வீழ;
ஒருரு இருக்கப் பொய்கை ஒருரு வுழக்கி ஆடி
ஒருருத் தாய்கண் வைக வொருவனே புரிதனுற்றான் (120)

ஆடவோ ருருவம் செங்கை அறையவோ ருருவம் நின்று
பாடவோ ருருவம் நாடிப் பார்க்கவோ ருருவம் ஆங்கண்
ஓடவோ ருருவம் ஓர்பால் ஒளிக்கவோ ருருவம் யாண்டும்
தேடவோ ருருவ மாகச் சிவன்மகன் புரிதலுற்ருன் (121)

இத்தன்மைகளைக் கண்டுகொண்டிருந்த கார்த்திகைப் பெண்கள் மனங்களில் அற்புதம் கொண்டு இவ்விதம் ஆடல் செய்கின்றவன் குழவிகள் அல்ல என்ற எண்ணம் தோன்றவே அவரை வழிபடு கடவுளோரில் வைத்துப் போற்றினர்.

இவர் இவ்வாறு நிற்க இதன் தலைப்பிற் கண்ட முருகன் கையில் கொண்ட துலைக்கோல் பற்றிச் சில செய்திகள் சொல்லி இதனை முடிப்போம்.

முருகனுக்குச் "செட்டி" என்ற ஒரு பெயர் உண்டு. அதனுல் அவர் தராசுக்கோல் பிடித்து வியாபாரம் செய்பவர் என்பர். இவர் செய்யும் வியாபாரமொன்றிலும் கோல் கோணுது சரியாய்ப் பிடிப்பார். இவர் வியாபாரமெல்லாம் நேர்மையாயிருக்கும். தேவாசுரர் இருபுறமும் தம்முட் பகைத்துப் போர் புரிவர். இந்தப் பூசல் எந்நாளும் ஒழியாது. மூண்டு கொண்டே நிற்கும். இருதிறத்தார்களும் முருகனருளை நாடுவர். 'சீரகத்தைத் தந்தீரேற் றேடேன் பெருங்காயம்; ஏரகத்துச் செட்டியாரே" என்று வேடிக்கையாகப் பாடினர் ஒரு புலவர். (இதன் பொருள் – சீர் அகம்–உமது திருவடி; சீரகம் என்ற உணவுப் பண்டம். சீரகம், பெருங்காயம் இரண்டும் ஏறக்குறைய ஒரே குணமுடையன. சீரகம் பித்தசாந்தி செய்வது. பெருங்காயம் – பித்தத்தை விருத்தி செய்வது. பெருங்காயம் - பெரிய உடல் - இனி உடல் வேண்டுவதில்லை. உமது திருவடி தரின் இனிப் பிறவி வேண்டேன்.)

தேவர்கள் வலியிழந்தவர்கள்; அசுரர்கள் வலிமை மிகுந்தவர்கள். தங்கள் ஆதிக்கம் வந்த காலத்தில் தேவர்களை ஏவல் கொண்டு செய்யத் தகாத கொடுமைகளை எல்லாம் செய்தனர். இதன் விளைவுதான் கந்த புராணம்–முருகன் இருவருக்கும் ஒப்ப நிகழ்கின்ருன். தனது முழுமுதற் றன்மைக்கு இழுக்கில்லாத வகையில் நடக்கின்ருன்.

கைலாயத்தில் ஒரு காலம் முருகன் காவல் புரிந்தான். அவனை இன்னுன் என்று தேவர்களில் ஒருவரும் அறிந்துகொள்ளவில்லை. அவனேடு போர் செய்தார்கள். தேவர்கள் எல்லோரும் தனித்தனியே மாண்டு போயினர். இந்நிலையைத் தேவ குருவாகிய வியாழன் அறிந்து வந்து முருகனை வேண்டினுன். முருகன் கருணை செய்தான். இறந்துபட்ட தேவர்கள் எல்லாரும் மீள உயிர் பெற்று எழுந்து வந்து

முருகனை வணங்கினர். முருகன் அவர்களுக்கு ஒரு முறை தனது பெருவடிவம் (விசுவரூபம்) காட்டி யருளினன்.

அதுபோலவே சூரனும் போரில் இளைத்து நின்றான். பற்பல மாய உருவங்களை எடுத்துக் கொடும் போர் செய்தான். அவற்றை எல்லாம் முருகன் அம்புகளினால் அழித்தான்.

வெம்புய லிடையிற் றோன்றி விளிந்திடு மின்னு மென்ன
விம்பரி லெமது முன்ன மெல்லையி லுருவங் கொண்டாய்
அம்பினி லவற்றை யெல்லா மட்டன மழிவில் லாத
நம்பெரு வடிவங் கொள்வ நன்றுகண் டிடுதி யென்றான்

"இம்பரிலெமது முன்னம் எல்லையில்லாத பல மாய வடிவங்களையெல்லாம் எடுத்து வந்தனை! அவை யெல்லாம் வெவ்விய புயலிடையிற் றோன்றிக் கணத்தில் மறைந்திடு மின்னலைப் போன்றவையாய் மறைந்தன. அவற்றை யெல்லாம் நமது அஸ்திரங்களாலே அழித்தனம். இனி அது போலல்லாது அழிவில்லாத நமது பெருவடிவத்தைக் கொள்வோம்! நன்கு கண்டிடுக!" என்று அருளி அதனைப் பார்க்கும் பேராற்றலுடைய கண்களையும் அனுபவிக்கும் அறிவையும் கொடுத்தருளினான். அங்ஙனமே முருகன் தான் கொண்ட பெருவடிவத்தைக் காட்டினான். அதனுள் அண்டங்கள் எல்லாம் அடங்கி நின்றன. பேரழகும் பெருமையும் நிறைந்திருந்தன. அதனைச் சூரன் கண்டு விம்மிதமடைந்து போற்றினான்

"கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தே னன்னுட் பரிசிவை யுணர்ந்திலேன் யான்
மாலயன் றனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி யன்றோ!"

என்று பலவாறும் துதித்து நின்றான். இவ்வாறு சிலபோது காட்சி தந்து நின்று பின்பு பண்டு போலாகச் செய்து அவன் போதத்தை மாற்றி யருளினான். அதன் பின்னே சூரன் "ஆ! இவன் என்னையும் ஏமாற்றினனே!" என்ன ஆரவாரித் தெழுந்தான்.

இவ்வாறு இரு திறத்தார்களுக்கும் ஒன்றுபோலவே முருகன் தனது பெருவடிவத்தைக் காட்டி யருளினான். இதன் பின்னர் திருச்செந்தூரில் போந்து கடைசி முறையாகத் தூது அனுப்பியும் வீரவாகு மூலம் புத்தி சொல்லியும் விடுத்தான். அதன் பின்னர் போரிலும் தானே நேரிலும் புத்தி வரத் தக்கபடி செய்திகளைச் சொன்னான். அவன் கேடுகாலம் அவற்றை யெல்லாம் மனங்கொள்ளாமற் செய்தது.

அலைவாய் அமர்ந்த பெருமாள்

(அடிமலர்களில் சில அன்புமலர்கள்)

பி. ஸ்ரீ

திருச்செந்தூருக்கு மிகவும் பழமையான பெயர் அலைவாய். திருச்சீர் அலைவாய் என்று சிறப்பித்துப் பேசுவதுண்டு. கடற்கரையில் முருகக் கடவுள் கோயில் கொண்டிருக்கும் சிறப்பை உடையது இத்தலம். 'விழுச் சீர் அலைவாய்' — அதாவது, மேலான சிறப்பை உடைய அலைவாய் — என்கிறது திருமுருகாற்றுப் படை. இச் சிறப்பை 'ஓங்குயர் விழுச்சீர்' என்றும், 'உலகம் புகழ்ந்த சீர்' என்றும் சுட்டிக் காட்டுகிறார் ஆற்றுப்படை ஆசிரியர். திருமுருகாற்றுப்படை தோன்றுவதற்கு முன்பே திருச்செந்தூர் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த முருகன் தலமாகத் திகழ்ந்தது என்பது திண்ணம்.

இயற்கையழகிலும் இறையழகிலும் ஒருங்கே ஈடுபடும் உள்ளத்திற்குத் திருச்செந்தூர்க் கடற்கரையும் கோயிலும் 'என்றும் அழகனாகிய முருகவேளுக்கு இசைந்ததோர் உறைவிடம் இது' என்று தோன்றக்கூடும். இந்தக் கடற்கரைப் பகுதியை 'ஒரு கோடி முத்தம் தெள்ளிக் கொழிக்கும் கடற்செந்தில்' என்று அருணகிரி நாதர் கண்ணாரக்கண்டு — அகக் கண்ணாலும் தான்—களிப்புற்றுப் பாடியிருக்கிறார்.

முன்னாளில் பல மணற்குன்றுகள் அக்காலத்துச் சிறிய சந்நிதியைச் சூழ்ந்திருக்க வேண்டும். அவற்றுள் பெரிய மணற்குன்று ஒன்றைக் 'கந்தமாதன பர்வதம்' என்ற பெயரால் குறித்திருக்க வேண்டும். மணற்குன்றுகள் நாளடைவில் தேய்ந்து பிராகாரங்களாகி யிருக்கவேண்டும். மணற்குன்றே ஒரு மதிலாக வடக்குப் பக்கத்தில் அமைந்திருப்பதையும், அக் குன்றின் தாழ்வரையில் அரங்கநாதப் பெருமாள் பள்ளி கொண்டிருப்பதையும் இன்றும் காண்கிறோம்.

மயன் என்ற சிற்பி முதல்முதல் முருகவேளுக்குக் கோயிலை உருவாக்கியதாகப் புராணம் சொல்லுகிறது. பண்டைக் காலத்திலே செங்கல் என்ற சுடு மண்ணால் செய்த கோயில்கள் குன்று போல் உயரமாகவும் கம்பீரமாகவும் அமைக்கப் பெற்றிருந்தன என்பதற்கு 'குன்று கண்டன்ன சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்' என்ற மணிமேகலை ஆசிரியரின் வாக்கும் ஒரு சான்றாகும். அக் காலத்திலே அலைவாய் அமர்ந்த பெருமாளின் கோயிலும் அழகான சிற்ப வேலைப்பாடுகளுடன் மணற் குன்றுகளுக்கிடையே கம்பீரமாய் அமைந்திருந்ததென்று கருதலாம். அந்தக் கோயில் கடலாலும் கால வெள்ளத்தாலும் ஏற்பட்டு வந்த சேதங்களுக்கு உட்பட்டிருக்கவேண்டும்.

அதே இடத்தில், மகேந்திரவர்ம பல்லவன் காலத்தை ஒட்டி அக்காலத்திற்கு இசைந்த முறையில் மணற்பாறைகளைக் குடைந்து செய்த கோயில் தோன்றியிருக்கக் கூடும். இப்போதுள்ள திருக்கோயில் பிற்காலப் பாண்டிய சேர மன்னர்களால் தொடங்கிய திருப்பணியை நாளடைவில் பொது மக்கள் பூர்த்தி செய்து வைத்திருப்பதுதான்.

கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டிலிருந்து தொடர்ந்து வளர்ந்து வந்திருக்கும் இந்தக் கோயில்—திருப்பணி வேலை, தமிழ் நாகரிகத்தின் மகோன்னத காலம் மறைந்த பின்பும் செந்தில்நாயகர் வழிபாடு என்ற திருவிளக்கு எந்தக் காரிருளிலும் கடும் புயலிலும் அணைந்து போகாமல் நந்தாமணி விளக்காக ஒளி வீசி வந்திருக்கிறது என்பதை மெய்ப்பிக்கிறது.

எனினும் இந்த அறுமுகத் திருவிளக்கு ஒரு சமயம் — ஒரே ஒரு சமயம்தான் — மறைந்ததும் உண்டு என்று சரித்திரம் தெரிவிக்கிறது. திருமலை நாயக்கரின் ஆட்சிக்காலம் — பதினேழாம் நூற்ருண்டின் இடைப் பகுதி. உலாந்தர்கள் (ஹாலண்டு வாசிகளான டச்சுக்காரர்கள்) 1,649 — மார்ச்சு மாதம் முதல் தேதி மூலஸ்தானம் உள்ளிட்ட விக்கிரகங்களை யெல்லாம் எடுத்துக் கொண்டு இலங்கைத் தீவுக்குப் போய்விட்டார்கள். திருமலை நாயக்கரின் திருநெல்வேலிக் காரியகர்த்தரான வடமலையப்ப பிள்ளையன் என்பவரின் முயற்சியால், 1,653–ம் ஆண்டில் உலாந்தர்கள் விக்கிரகங்களைக் காயல்பட்டினம் என்ற துறைமுகத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

செந்திலாண்டவரை மறுபடியும் கோலாகலமாய்ப் பிரதிஷ்டை செய்து மக்கள் பெரு மகிழ்வெய்தினர். திருச்செந்தூர்த் தலபுராண ஆசிரியராகிய வென்றிமாலைக் கவிராயர் வாயிலாக அந்தப் பெருமகிழ்ச்சி ஓர் இசைக் கவிதையாகிப் பிறந்திருக்கிறது. 1,649 மார்ச்சு முதல் தேதி முதல் 1,653 தை 23–ம் தேதி வெள்ளிக்கிழமை செந்தில்நாயகர் மறுபடியும் கோயில்கொண்டது வரை

சந்திரன் இல்லாத
வானம் போலவும்,
சைவநெறி இல்லாத
வையகம் போலவும்

இருந்தது திருச்செந்தூர் என்பதைப் புலப்படுத்துகிறது வென்றிமாலைக் கவிராயரின் இசைப் பாட்டு. இந்த நிகழ்ச்சியைக் குறித்துக் கற்பனைக் கதைகளும் வழங்குகின்றன.

* * * * * * *

கந்தபுராணம் திருச்செந்துருக்கு மிகவும் சிறப்பான ஸ்தானத்தை அளித்திருக்கிறது. தெய்வச் சிற்பி அமைத்த இவ்வூர்க் கோயிலிலிருந்து தான் முருகக்கடவுள் சூரபத்மன்மீது படையெடுத்துச் செல்லுகிறார். இந்தக் கடற்கரையிலிருந்து தான் வீரபாகு தேவர் தூது சென்று மீண்டு வந்து செய்தி சொல்லுகிறார். சூரபத்ம வதம் செய்து வெற்றியுடன் முருகக்கடவுள் திரும்பி வந்து தங்கியதும் இங்கேதான். அந்த வெற்றியை முன்னிட்டுச் சூரசங்கார மூர்த்தியைத் தேவர்கள் பூசித்ததும், முருகவேள் சிவபூஜை செய்ததும் இங்கேதான்.

சூரபத்மனை முடித்து எல்லாருக்கும் அருள் செய்த பெருமான் செந்திலாண்டவரே என்று கந்தபுராணமும் தலபுராணமும் கூறியிருப்பது மக்கள் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்து விட்டது என்பதில் ஐயமில்லை. மாமரமாகி நின்ற சூரனைக் கொன்ற இடம் இதுதான் என்று திருச்செந்தூருக்கு அருகிலுள்ள **மாப்பாடு** என்ற இடத்தைச் சுட்டிக் காட்டுகிறவர்களும் உண்டு. மா - மாமரம்; பாடு - படுத்த (பொருந்த) இடம். கந்தபுராணக் கதை திருச்செந்தூரின் சொந்தக் கதையாகி விடுவதைக் காண்கிறோம்.

* * * * * * *

அருணகிரிநாதர் காலத்தில் திருச்செந்தூர் தமிழர்களின் பக்தியுள்ளத்திற்கும் கலையுள்ளத்திற்கும் ஒருங்கே ஒரு தூண்டு கோலாக இருந்ததென்று ஊகிக்கலாம். 'மங்கல மகிமை மாநகர்' என்றும், 'மாமதிள் சூழ்தரு செந்தில் மாநகர்' என்றும் 'சுந்தரமான செந்தில்' என்றும், இவ்வூரை இப்பெரியார் பாராட்டிப் பாடி இருக்கிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, செந்தில்வாழ் பெருமான் செந்தமிழ்ப் பெருமாளாக அருணகிரியாருக்குக் காட்சி கொடுத்தார்.

சிவனைநிகர் பொதியவரை
முனிவன்அகம் மகிழஇரு
செவிகுளிர இனியதமிழ்
பகர்வோனே !

என்று செந்திலாண்டவரை அருணகிரியார் கூவியழைப்பது தமிழருள்ளத்தைக் குளிர்விக்கிறது – பக்தியில்லாத தமிழுள்ளத்தையும் தான்.

விண்ணவர்களுக்கும் அரிய வித்தகர் 'செஞ்சொல் அடியார்கள் எளிமைக்காரர்' என்று அருணகிரிநாதர் குறிப்பிடுவதும் சிந்திக்கத்தக்கது. கம்பனைப் போல் அருணகிரியாரும் தமிழைச் 'செஞ்சொல்' என்று குறிப்பிடுகிறார். அரனுருக்கும் அதீதப் பொருள் காட்டியவர் தமிழ் கொண்டு தோத்திரிக்கும் அடியாருக்கு எளிய பெருமாள் என்று கூறுவதில் அருணகிரியாருக்கு ஒரு விசேஷ திருப்தி.

திருச்செந்தூருக்கு வருவதற்கு முன்பே அருணகிரியார் பல திருப்புகழ்ப் பாடல்கள் பாடியிருக்க வேண்டும். திருச்செந்தூரில் இவ் வூரைப்பற்றிய பல பாடல்களையும் பாடியிருக்கக்கூடும். தாம் பாடிய பாடல்களையெல்லாம் சந்நிதானத்திற்கு முன்னின்று ஆண்டவனுக்கும் அன்பர்களுக்கும் இவர் பாடிக் காட்டினுரென்றும், தமிழ்க் கடவுள் திருமுடியை அசைத்து ரஸித்தாரென்றும் ஒரு கதை வழங்குகிறது. திருப்புகழ்ப் பாடல்களையெல்லாம் கிடைத்த அளவிற்குச் சேமித்துத் தொகுத்து வைத்துக்கொண்ட தலம் இது என்று கருதுவோரும் உண்டு.

* * * * * * *

திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் பாடிய பகழிக்கூத்தரும் செந்தமிழைச் செந்திலாண்டவரோடு சிறப்பாகத் தொடர்பு படுத்திப் பேசுகிருர்.

செந்தமிழ் மணக்கும்
திருச்செந்தில் வேலனே !

என்று கூவியழைத்துக் கோயில் இருக்கும் திசை நோக்கிக் கும்பிடும் புலவர் நம் அகக் கண்ணுக்கு இலக்காகிருர். ஊரைச்சுற்றிப் பார்க்கிருர்; வீதிகளில் உலவுகிருர்; கோவிலில் போய்த் தரிசனம் செய்கிருர். 'என்ன தெய்வ மணம் ! ஆ என்ன தமிழ் மணம் !' என்று வியக்கிருர். தமிழ்க் கடவுள் தமிழ் முனிவருக்கு உபதேசித்த தமிழ் இதுவோ !' என்கிருர். செந்தமிழ் மணக்கும் திருச்செந்தூரில் பகழிக்கூத்தர் தந்த தமிழ்ச் செல்வம் தான் 'திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்.'

இந்த மொழிக்கோயிலில் முருகவேளை 'என்றும் செல்லக் குழந்தை' யாகப் பார்க்கிருேம். தமிழ் முருகனைத் தாலாட்டுகிருர். 'சாய்ந்தாடம்மா, சாய்ந்தாடு' என்று கொஞ்சுகிருர். சிவ இளங்கன்று கை கொட்டும் அழகைப் பார்க்க ஆசைப்படுகிருர். 'முருகா ! முத்தம் தருகவே' என்கிருர். 'வருக வருக' என்று கூப்பிட்டு 'வாராதிருக்க வழக்குண்டோ ?' என்று கேட்கிருர். முருகனுேடு விளையாட 'அம்புலி மாமா'வைக் கூவியழைக்கிருர். கொட்டி முழக்கும் குழந்தைப் பெருமானைக் கண்டு 'சிற்றில் சிதைக்கலாமா ?' என்று கேட்கிருர். 'சிறுதேர் உருட்டுவாய்' என்று வேண்டுகிருர். இந்தச் செல்லக் குமரன் குமார கம்பீரனுகவும் இப் பிள்ளைத் தமிழில் காட்சி வழங்கக் காண்கிருேம்.

* * * * * * *

திருச்செந்தூரில் ஸ்ரீவைகுண்டத்து 'ஊமைப்பிள்ளை' தந்த தமிழ்ச் செல்வம்தான் 'கந்தர் கலி வெண்பா'. செந்தூர் ஆண்டவரின் சுந்தரக் கருணையில் பூத்த இரு மலர்கள் பிள்ளைத்தமிழும் கலிவெண்பாவும் என்பர். இவற்றில் கந்தர் கலிவெண்பா திருமுருகாற்றுப்படை போல் ஒரு பாராயண நூலாகிவிட்டது.

122 அடிகளையுடைய இந்தச் சிறிய துதி நூலில் சித்தாந்த ஞானப் பெருங் கடலையே அதிசயமாய்க் காண்கிறோம்.

'பேசாப்பிள்ளை பேசிவிட்டது! ஒரு பிரபந்தத்தைப் பேசிவிட்டது! இந்தக் கடற்கரையிலே சைவ சித்தாந்த ஞான சமுத்திரத்தையே காட்டிவிட்டது!' என்று பக்தர்கள் அன்றுபோல் இன்றும் பூரித்துப் போகும்படி பக்திப் பெருநெறியின் செய்திகளையும் மர்மங்களையும் எளிய தமிழ் கொண்டு தம் 'கந்தர் கலி வெண்பா'வில் வெளியிட்டிருக்கிறார் குமரகுருபர அடிகள்.

'திருமுருகாற்றுப்படை'க்கும் 'கந்தர் கலிவெண்பா'வுக்கும் கற்பனை வேறுபாடுகள் உண்டு. ஆனால் ஸாராம்சமான அனுபவம் ஒன்றே. திருமுருகாற்றுப்படையில் உயிர்கள் உய்யும் பொருட்டு முருகவேள் குறவள்ளியைக் காதலித்தார் என்ற செய்தி வலியுறுத்தப்படுகிறது. குமரகுருபரரோ வள்ளி யென்ற இச்சா சக்திக்கும் தெய்வயானை யென்ற கிரியா சக்திக்கும் ஒருங்கே மோகம் அளிக்கும் முக மண்டலத்தைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறார். ஆறு திருமுகங்களுடன் பன்னிரு கைகளும் இசைந்து தொழிற்பட்டு ஆண்டவனின் கருணையைப் புலப்படுத்துகின்றன என்பதைத் திருமுருகாற்றுப்படையில் காண்பதுபோல் கந்தர் கலிவெண்பாவிலும் காண்கிறோம்.

திருமுருகாற்றுப்படையில் வீரத்தமிழின் சொற் செட்டும் பொருட் செறிவும் காணப்படுகின்றன என்றால் கந்தர் கலிவெண்பாவில் ஈரத்தமிழின் குளிர்ச்சியும் இனிமையும் தெளிவும் காணப்படுகின்றன எனலாம்.

குமரகுருபர அடிகள் தமிழ்க் கடவுளிடம் தமக்குப் 'பழுத்த தமிழ்ப் புலமை' அருளவேண்டுமென்று பிரார்த்திக்கிறார். பிரார்த்தனை பலித்து விட்டது என்பதற்குக் கந்தர் கலிவெண்பாவே ஒரு சாட்சி தான்.

* * * * * * *

ஏறக்குறையக் கந்தர் கலிவெண்பாவின் காலத்தை ஒட்டித் தோன்றியது தான் 'திருச்செந்திற் கலம்பக'மும். இயற்றியவர் 'இலக்கணக் கொத்து' இயற்றிய சுவாமிநாத தேசிகர். இந்தப் பிரபந்தத்தில் குமார கம்பீரரான செந்திலாண்டவரின் ஊரை ஆசிரியரும் கம்பீரமாக,

மழைபோல் முழங்கி
அலையாழி சிந்து
வளைமேவு செந்தில்
நகரே

என்று வருணிப்பதைக் காணலாம்.

திருச்செந்தூர் விஷயமாக வேறு பிரபந்தங்களும் உண்டு. இவற்றுள் சரவணப் பெருமாள் கவிராயர் (மாதவச் சிவஞான யோகியாரின் மாணாக்கரின் மாணாக்கர்) தமது 'கந்தவருக்கச் சந்தவெண்பா' என்ற பிரபந்தத்தில் செந்திலாண்டவரை,

செந்தில்நகர் ஆள்பரம
தேசிகா!

என்று அழைத்துப் போற்றுவதைக் காண்கிறோம்.

இதை நினைவூட்டுவதுபோல் அண்ணாமலை ரெட்டியார் இசையுலகப் பிரசித்தி பெற்றிருக்கும் தம் காவடிச் சிந்தில்,

செந்தில் மாநக ரந்தனில் மேவிய
தேசிக னும்முரு கேசன் — மயில்
வாசியில் ஏறும்உல் லாசன்.........

என்று பாடியிருப்பதை நம்மில் பலரும் கேட்டிருப்பார்கள்.

* * * * * * *

இந்த உல்லாச மூர்த்தியை — ஆலவாய் அமர்ந்த அழகனை — எத்தனை நூற்றாண்டுகளாகத் தமிழ் மக்கள் போற்றி வந்திருக்கிறார்கள்! தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் புலவர்கள் திருச்செந்தூருக்கு வந்து வந்து தங்கள் பாடல்களை எவ்வளவு காலமாக அரங்கேற்றியிருக்கிறார்கள்! கடற்கரையிலும் வீதிகளிலும் பக்தர் குழாம் செவிகுளிரப் பாடிக் காட்டியும், கண்குளிரக் காவடி தூக்கி ஆடிக் காட்டியும் எவ்வளவு காலமாக நம் மக்கள் முருகன் தமிழைப் பரவச் செய்திருக்கிறார்கள்!

இந்த உல்லாசத் தமிழ்க் கடவுளை வீரமூர்த்தியாகவும் வெற்றிப் பெருமானாகவும் அழகிய மணவாள மூர்த்தியாகவும் குருநாதராகவும் வழிபட்டதுடன், குழந்தையாகவும் சிறுபிள்ளையாகவும் வழிபட்டுப் பாடியும் புலவர்கள் பெரும் பேறு பெற்றிருக்கிறார்கள். இத்தகையப் பாடல்களால் நம் தமிழும் பேறு பெற்றது; செந்திலும் செந்தமிழ் வளரும் பண்ணையாகப் பேரும் புகழும் பெற்றிருக்கிறது.

உ
திருச்சிற்றம்பலம்.

சங்கரர் செந்திற் காட்சி

கவியரசு : கு. நடேச கவுண்டர், கோயம்புத்தூர்

"அழகான செம்பொன் மயில் மேல் அமர்ந்து
அலைவாய் உகந்த பெருமாள்" ஆகிய நம் செந்தினுதன்

"அறிவால் அறிந்து தன் இருதாள் இறைஞ்சும் அடியார் இடைஞ்சல் களைபவன்"
"செந்தமிழ் சொல் நாலு கவிதைக் காரன்"
"செஞ்சொல் அடியார்கள் எளிமைக்காரன்"
"முடிமேலே அஞ்சலி செய்வோர்கள் நேயக்காரன்"
"அன்பர் இன்ப நண்ப உரவோன்"
"பத்திபுரிவோர்கள் பனுவற்காரன்...அடியார்கள் முத்திபெறவே சொல் வசனக்காரன்"
"சிவனுர் அருள் சுதன் என்ருர்க்கு நலமே யருள்பவன்"
"ஆரண சாரமந்த்ர வேதமெலாம் விளங்க,
ஆதிரை யானும்நின்று தாழ்வன் எனுவணங்கும்
ஆதரவால் விளங்கு பூரணஞானமிஞ்சும் உரவோன்".

செந்தமிழ் மொழியாலே – நக்கீரர் முதலிய பழுத்தமுது தமிழ்ப் புலவர்கள் சாத்திய பாமாலைகளைப் புனைந்தவன். ஆரிய மொழியிலும் பலர் புனைந்த பாமாலைகளை யணிந்தவன். ஆரிய மொழியிலே பல நூல்களையும் பிரம்ம சூத்ரபாஷ்யம் என்னும் பேருரையையும் அருளியவரும் உலக முழுதும் பரவிய புகழையுடையவரும் பிரம ஞானியுமான ஆதிசங்கரர் நம் செந்தமிழ்ச் செந்திற் கந்தப் பெருமானுரின் திருவடிகளைத் தெரிசித்துப் பெற்ற பேற்றினை ஈண்டுக் கூறிய எம்பெருமான் "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்றபடி இரு மொழிக்கும் – ஏன்?– எல்லா மொழிக்கும் இறைவன் என்று இசைத்து மகிழ்வதே இங்ஙன் எனது விழைவாகும்.

சங்கராசாரியர்பால் அழுக்காறு கொண்டான் அவிநவகுப்தன் என்பான் ஒரு புலவன். அபிசார மந்திரத்தால் காசநோயை அவர்பால் ஏவினுன். சங்கர் அந்நோயால் வருந்தினுர். பல தலங்களையும் தரிசித்துக் கோகர்ணம் சென்றபோது இறைவன் அவரது கனவில் எழுந்தருளி "நீ செந்தில் சென்று எம் மைந்தனை வந்திப்பின் இந்நோய் தீரும்" என்ருன். அங்ஙனமே சங்கரர் செந்திலின் திருவெல்லை சேர்ந்தார். செந்திற் திருப்பதியையும் செவ்வேட் பெருமானையும் துதிக்க எண்ணினுர்.

தம் குறிக்கோள் விக்கினம் இல்லாமல் ஈடேற முதலில் விநாயகனைச் சிந்திக்கின்றார். அப் பெருமான் என்றும் இளையான், வினையாகிய மலையைத் தாளாலும் கொம்பாலும் தகர்ப்பவன். யானை முகனாலும் பஞ்சாஸ்யத்தால் (சிங்கத்தால், சிவ பெருமானால்) மதிக்கப்படுபவன். பொன்னாகராலும் தேவராலும் நாடப்படுபவன்; அழியாத சிவப்பேறு வழங்குஞ் செல்வன் எனச் சிந்தித்து அவனருளைப் பேணித் துதிக்கின்றார். அவர் அருளிய வடமொழிப் பாடலின் மொழி பெயர்ப்பு ஈண்டுத் தருகின்றோம்.

"எந்நாளும் இளையோன் வினைக்குன்ற மிப்பான்
இபமாமுகன் பஞ்ச வதனன் மதிப்பான்
பொன்னாகர் சுரர்நாடு புனிதன் கணேசன்
பொன்றாத திருவாளன் அருள் பேணுவோமே" (௧)

[பொன் ஆகர் - பொன்மயமான மேனியை உடைய பிரமா, திருமகளை மார்பிலுடைய திருமால், அழகிய நாக லோகத்தவர். பஞ்சவதனன் - ஐந்து முகமுடைய சதாசிவ மூர்த்தி, பரந்தமுகமுள்ள சிங்கம்.]

பின்னர், 'அடியேன் சொல், பொருள், பா, உரை என்பனவற்றுள் எதனையும் பிழையின்றி அறியேன்; எனினும் அன்பர் சிந்தையில் ஊறும் தேனாகிய செந்திற்பெருமான் இனிய பாடலைப் பாடுவிப்பான் என்று துணிந்து,

"சொல்லேது பொருளேது கவியேது வசனம்
துகள்ஏதும் இல்லாதது ஏதென்பது அறியேன்
எல்ஏறும் அறுமாமுகச் சோதி இதயத்து
இருந்தே நறுந்தேன் எனும்பாடல் தருமே" (௨)

என்று பாடினார்.

அதன்பின் முருகனைத் தியானிக்கின்றார்—

முருகன் மயிலை ஊர்பவன். நான்கு வேதங்களால் புகழப்படுபவன். நான்கு மகா வாக்கியங்களால் இரகசியமாகச் சொல்லப்படுபவன். உள்ளங்கவர் கள்வன்; மஹான்களின் உள்ளக்கோயில் உறைபவன். அந்தணர் தெய்வம் என்று தியானித்தார்.

"மயிலூர்தி, சதுர்வேத மறைகின்ற பொருளோன்
மனந்தன் வசங்கொள் மகான்உள்ளம் உறைவோன்
பயிலும் மகாவாக் கிலக்கன் சிவன்சேய்
பனவர்க்கு மெய்த்தேவை நினைவில் வைத்தேன்" (௩)

[சதுர்வேதம் மறைகின்ற = நான்கு வேதத்துள் மறைந்து நின்ற, எனவும் – சதுர் வேதம் அறைகின்ற = நான்கு வேதங்களும் சொல்லுகின்ற எனவும், இரட்டுறக் கொள்க]

அந்தணர்க்குத் தெய்வம் என்றதால் முருகன் ஏனையோர்க்குத் தெய்வம் அல்லன் என்பது கருத்தன்று. அவனை வணங்காதவர் சாதி ஒன்றினால் மட்டும் அந்தணர் ஆகார் என்பது கருத்து.]

கடற்கரையை அணுகினுர் சங்கரர். 'பராசத்தி புதல்வன் இந்தக் கடலோரத்தில் வாழ்வது ஏன்?' என எண்ணினுர் - விடை கண்டார். விடையாவது:

"என்முன்னர் வந்தார் பிறப்புஎன்ற வேலை
யினைஏறினுர் என்று நிலமேல் விளக்கித்
துன்னும் கடற்செந்தில் உறைகின்ற தூயோன்
துங்கப் பராசத்தி அருள்சேயை நினைவாம்" (௪)

என்பது.

[பிறப்பு என்ற வேலையினை ஏறினுர் = பிறவியாகிய கடலினைக் கடந்தார்.]

இந்தக் கடலின் அலைகள் பெருகிச் சென்று இறுதியில் கரையை அடைந்து அழிகின்றன. வினைப் பெருங் கடலலையும் பெருகிச் சென்று செந்திற் கரையை அடைந்தால் அழியும் என்பது இக் காட்சியால் விளங்குகின்றது என்றே என வியந்து

" திரைபொன்று மாபோல வினைபொன்றும் இன்றே
திருமுன்பு வம்மின்கள் எனநின்ற வன்போல்
திரைபந்தி யாய்வந்த கரைநின்ற செந்தூர்ச்
சேயோனை இதயத் துளேவைத் துளேனே " என்ருர். (௫)

[திரை = அலை, பந்தி = வரிசை]

செந்திற் கந்தன் சந்தனமலை மேலன்றே நிற்கின்ருன். வடிவாற் சிறிதேனும் இம்மலை, தன்மேல் ஏறினுரைக் கைலை மலைமேல் ஏற்றும் பெருமை உடையது எனக் கருதி,

" இதில் ஏறினுர் கைலையதில் ஏறினுரே
என்பான் எனக்கந்த வரைமீது நின்ருேன்
மதிபோலும் அறுமா முகச்செந்தில் நாதன்
மலர்போலும் அடிவாழ்க யாம் வாழுமாறே " (௬)

கந்த சைலத்தையும் கந்தநாதனையும் இயைத்து வாழ்த்தினுர்.

இப்பெரிய கடலின் கரையில் உள்ள சந்தனமலை, தன்னைக் கண்டார் தம் பாவத்தை நீக்குவது. சித்தர்கள் வாழ்வது. உள்ளமாகிய குகையில் வாழும் குகன் இதன்கண் வாழ்கின்ருன் என்ற உணர்ச்சி மிக்கு,

" பெருவேலை ஓரத்திலே பாவ நீக்கும்
பிரசித்தி சேர்சித்தர் வாழ்கந்த வெற்பில்
ஒருசோதி வடிவோடு குகைமேவு செந்தூர்
உயிருக்கோர் உயிர்செம்பொ னடிபற்று வோமே " (௭)

என்ருர்.



கனம் M. பக்தவத்சலம், B. A., B. L.
அறநிலைய பாதுகாப்பு இலாகா அமைச்சர்
சென்னை



திரு. A. உத்தண்டராமன், B. A., B. L., I. A. S.
இந்துமத அறநிலைய ஆணையாளர்
சென்னை

திரு. ஈ. சக்கரை, B. A., B. L.
இந்துமத அறநிலைய துணை ஆணையாளர்
தஞ்சாவூர்



திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை, M. A.
தலைவர், தர்மகர்த்தர் குழு



திரு. கே. வி. சுப்பையா பிள்ளை, B. A.
நிர்வாக அதிகாரி

பொன்மயமான கோயில். மணிகள் இழைத்த பொன் ஆசனம். அதன்மேல் வீற்றிருக்கும் முருகனது திருமேனி ஒளி ஒரு கோடி சூரியர்களின் ஒளியையும் மங்கச் செய்வது கண்டு,

"பொற்கோயிலிற் பொன்மணிக் கட்டில் ஏறிப்
பொலிகின்ற ஒருகோடி ரவிமங்க வீசும்
விற்கோல நற்செந்தி விற்கார்த்தி கேயன்
விபுதேசனைச் சிந்தை விழைகின்ற தாலோ" (அ)

எனப் பாராட்டினார்.

முருகன் அருகிற் சென்றார். சோதியினுள்ளே சுப்பிரமணியன் திருவுருவம் திகழ்கின்றது. சங்கரரது கண்கள், அவிழ்த்து விடப்பட்ட கன்று தாயின் மடியில் வாய் வைத்தது போலப் பெருமான் திருவடியில் பதிந்தது. அதன்கண் உள்ள ஆனந்த வெள்ளத்தழுந்தி மனமாகிய வண்டு திளைத்தது.

"அஞ்சம் பொலிந்தே சிவந்தேர் நிறைந்தே
அமுதம் பொழிந்தே பிறப்பென்ற கோடை
வஞ்சம் தவிர்ந்தே விளங்குன் பதத்தா
மரைமேவும் அளிநெஞ்சம் அலைவாயின் முருகே" (சூ)

என வாய்மலர்ந்து பாடினார்.

[அஞ்சம் = அன்னப்பறவை, பரமஹம்ஸ சந்நியாசிகள், ஹம்சமந்திரம். அளிநெஞ்சம் = வண்டு போன்ற நெஞ்சம்]

பின், திருவடியிலிருந்து கண் மேல் நோக்கிச் சென்றது. திருவரையில் உடுத்த பீதாம்பரம், அதன்மேல் அசைத்த மேகலை முதலியவற்றின் அழகில் அழுந்தியது. (ம)

திருமார்பின் செவ்வொளியைக் கண்டார். ஓர் ஐயம் கொண்டார். வள்ளிநாயகியார் தழுவிய தாலே அவரது மார்பில் அணிந்த குங்குமக் குழம்பு பட்டதுவோ, அல்லது எம்பெருமான் தன் அடியார்கள் மீது வைத்த அநுராகம் உள்ளத்து அடங்காமல் பொங்கி மேல் வந்ததோ? யாதோ இந்தச் செவ்வொளி என மயங்கினார். (மக)

திருத்தோளிற் சிந்தை சென்றது. இப்பெருமான் திருக் கைகள் பிரமனைப் புடைத்தன. யானை யின் துதிக்கையினையும் அச்சுறுத்தி வென்றன. யமனைத் துரத்தின. இந்திரன் பகையை வென்றன. 'அபயம்' என்றன. எமக்கும் அருளுக என்றார்.

"அயனைப் புடைத்தண்ட நிரையைப் புரந்தே
ஆனைக்கை வென்றந்த கனையும் துரந்தே
துயர்இந்த்ரன் பகைவென்ற பயமென்ற நின்கை
துணை செய்கவே செந்திலிறைவா எமக்கே" (கஉ)

பெருமானது முகங்களை மதியமென்பேமோ? மதியம் குளிர்காலத்து மட்டும் அன்றே பேரொளியுடைய தாகும். அது ஒன்றே ஒன்றுதானே? களங்கம் உடையதன்றே? புறத்தே மட்டுமன்றே ஒளிர்வது? மறைந்து தோன்றுவதன்றே? ஆதலால் அது ஒப்பு ஆகாது.

“பனிஎன்றும் உளவாய் ஓர்பங்கம் படாமல்
பரிபூர்ண ஒளியோடு பலதிக்கு நிலவை
நனிவீசு மதிமூவி ரண்டென்றும் உளவேல்
நளிர்செந்தி லோன்ஆறு முகமொக்கு மாலோ” (கங)

என்றார்.

சிவன் மைந்தனே, உன் திருமுகங்கள் ஆறும் தாமரை மலர்கள். அவற்றுள் புன்முறுவலே அன்னப் பறவைகள்; கருணைக் கடைக்கண்களே வண்டுகள்; கொவ்வைப் பழம்போலும் செவ்விதழ்களில் ஊறும் இன்சொற்களே தேன்; இத்தகையத் திருமுகங்களைக் காணும் பேறு இன்றுதான் பெற்றேன்.

“சிவன்மைந்த நகைஎன்ற அனம்என்றும் மேவித்
திகழும் கடைக்கண்கள் எனும்வண் டுலாவித்
தவஇன்சொல் அமுதூறு கொவ்வைச்செவ் விதழ்சேர்
சலசங்கள் எனும்ஆறு முகம்இன்று கண்டேன்” (கச)

என்று மகிழ்ந்தார்.

“குறைவு என்கொலோ செந்திலாய்! காதலாவிக்
குறையாத அருள்வீசு விழிபன் னிரண்டில்
இறையே ஓர்விழியின் கடைப்பார்வை தொழும்இவ்
எளிநாயி னேன்மீதில் ஒருபோது விழுமேல்” (கரு)

என்று கடைக்கண் பார்வை விரும்பிக் கசிந்துருகினர்.

செந்தூரிலே அன்பர் காண நின்ற தெய்வமே! நின் சிரங்கள் ஆறும் சிவபெருமானலே முகந்து வாழ்த்தப் பெற்றவை; மணிமுடி ஒளி வீசுபவை; உலக மனைத்தையும் தாங்குபவை; அவற்றை நினைந்து வணங்குகின்றேன்.

“எனதங்கம் நீமைந்த வாழ்கென்று மோந்தே
ஈசன் களிக்கின்ற தேசொன்று முடிசேர்
நினதண்ட நிரைபேணு சிரமாறும் நினைவேன்
நிலைநின்ற செந்தூரில் வெளிநின்ற தேவே” (கசு)

என்று வணங்கினர். பின் பிரார்த்திக்கின்றார்.

"வரவேணும் அடியேன் முனேசெந்தி நுதன்
மணிமாலே கேயூரம் அசைகுண்ட லங்கள்
பிரகாச மிகமாடை யுடையோடு கையிற்
பிசகாத வடிவேலின் மிகுசோதி வீச" (கஎ)

[கேயூரம் = தோள்வளே; மாடையுடை = பீதாம்பரம்]

"குமரா எனச்சங்க ரன்கைகள் நீட்டக்
குதித்தம்மை மடிநின்று பரனேத் தழீஇக்கொண்
டமரா மகிழ்ந்தாடு செந்தூரில் எம்மான்
அழகான மழமேனி மறவாது நினேவேன் (கஅ)

"குமாரா சிவன்சேய் குறக்கன்னி நாதா
குகா கந்த சேனுபதி சத்திபாணி
எம்ஆர்வ ப்ரபோ தாரகாரீ மயூரா
இடு நீவுவோய் செந்திலாய் அஞ்சலென்னே" (கசு)

[இடு நீவுவோய் = துன்பந்துடைப்பவனே]

"ஐயுந்தி மெய்நொந்து பொறிஐந்தும் ஓய்ந்தே
அறிவின்றி உளம்அஞ்சி உயிர்மங்கு போதே,
நெய்நின்ற வடிவேல! செந்தூர! யாரே
நினேயன்றி எனே அஞ்சல் எனுமா வலாரே" (உ0)

[ஐ = கபம், கோழை]

"யமதூதர் சுடுவெட்டு பிளஎன் றதட்டி
எனேவெஞ்சி னத்தோ டொறுக்கென்று வந்தால்
நமதன்ப அஞ்சேல் அஞ்சேல்எனச் சத்திஏந்தி
நவிரத்தின் மிசைசெந்தி லாய்வந்து காவே" (உக)

[ஒறுக்க என்று = தண்டிக்கவேண்டி; நவிரம் = மயில். 20, 21-ஆம் செய்யுள்களில் இறப்புத் துன்பமும் காலதூதர் கொடுமையும் அவற்றினின்று காக்க வல்லவன் முருகனே என்பதும் ஓர்க]

இறக்கும் வேளேயில் புத்தி எதை எண்ணுகின்றதோ அதற்கேற்ற கதியே பின்னர் வாய்க்கும் என்று நூல்கள் கூறும். அப்போது என் புத்தி உன்னே நினேத்தல் அரிது. யான் நினேயாவிடினும் நீ என்னேக் கைவிடாமல் ஆண்டுகொள் என்று சங்கரர் விண்ணப்பித்துக் கொள்கின்ருர்.

"உயிர்மங்கு பொழுதின்கண் உனதாள்கள் நினேயேன்
ஓசெந்திலாய்! என்கிலேன்; கைகள் குவியேன்
அயர்கின்ற அவ்வேளே கைவிட்டிடேல்; என்
ஐயா உனக்கேகை அடையாகி னேனே" (உக)

இவ் வேண்டுகோள் ஆண்டவனிடத்தில் ஒவ்வொருவரும் செய்துகொள்ள வேண்டியதன்ருே?

இந்நிலையில் அருச்சகர் செந்திநாயகனது இலைவிபூதி கொண்டு வந்தார். சங்கரரது நோய் விண்டோடியது.

“ கண்டால்நின் இலைநீறு கைகால் வலிப்புக்
காசம் கயம் குட்டம் முதலானநோயும்
விண்டோடு மேபூத பைசாசம் யாவும்
விளையாவு மேசெந்தில் அமர்தேவ தேவே ” (உரு)

எனத் தாம் பெற்ற நன்மையை ஞாலம் அறிய ஓதினார்.

இன்ப துன்பங்கள் அவரவர் செய்த வினைவழியே இறைவன் ஆணையால் வருகின்றன. அவன் அருளினால் இருள்சேர் இருவினையும் சேராமல் உய்யலாம். ஆதலால் பாவமன்னிப்பு வேண்டி,

“ மகார்செய்த பிழைபெற்ற பேர்மன்னி யாரோ
மகன்அல்ல னோயான்; விண்மண் பெற்றதந்தாய்
மகாதேவ செந்தூரில் வாழ்கந்த வேளே
மன்னிக்க யான்செய்த புன்மைக் குழாமே ” (௩௰)

என்று பாடினார். பின்னர்,

“ மயில்போற்றி வேல்போற்றி மறியாடு போற்றி
வன்காற்படைச் சேவலும் போற்றி நந்தூர்
உயர்வெண் திரைச்சிந்து வும்போற்றி முருகோன்
உபயப் பதம்போற்றி உயர்செந்தில் போற்றி ” (௩௧)

எனப் போற்றிசைத்தார்.

“ ஜயஇன்ப வடிவா! ஜயச்சோதி ரூபா
ஜயப்பாவு புகழோய்! ஜயத்தாவில் இன்போய்
ஜயஇன்ப சிந்து ஜயச்சர்வ பந்து
ஜயஇன்ப வள்ளால்! ஜயச்செந்தில் வாழ்வே (௩௨)

என வாழ்த்தினார்.

பிரியாவிடை பெற்றுப் பின் தலயாத்திரை தொடங்கினார். சங்கரர் கண்ட செந்திற் காட்சியை யாமும் சிந்தித்து வாழ்வோமாக.

முருகன் துணை.

உ
திருச்செந்தில்

வெற்றிக் கொடிமரம்

(குகஸ்ரீ ரஸபதி)

வேத பாராயணம் ஒரு புறம்; புராணச் சொற்பொழிவு ஒரு புறம்; புனித ஆகமப் பயிற்சி ஒரு புறம்; பரமனைப் பாடிப் பரவுவார் ஒரு பக்கம், கந்தனை வந்திக்கும் செயல்கள், இப்படிக் கோயிலில் கம்பீரமாக நடைபெறுகின்றன.

திடீரென்று ஒரு அதிர்ச்சி. 'டடட ... ட ... டமால்' என்ற பேரோசை, எவரையும் திடுக்கிடச் செய்தது. என்ன அது? ஒலி வந்த திசைநோக்கி அனைவரும் ஓடிவந்தனர்.

அடடா! முன் இருந்த துவஜ ஸ்தம்பம் அல்லவா முறிந்து விழுந்திருக்கிறது. பல காலமாக கனத்த வெய்யிலில் காய்ந்து, மழையில் நனைந்து, உலுத்துப்போன நிலையில் எதுவும் விழுவது இயற்கை என்று எவர் மனமும் எண்ணவில்லை. கொடிமர முறிவு, ஏதோ அமங்கல அறிகுறி யென்றே அனைவரும் எண்ணினர்.

"ஆறுமுக அப்பா! அருள்முகத்து அரசே! வீறுமுக வேலோனே! நாங்கள் யாது பிழை செய்தோம்? தெரியவில்லையே தெய்வமே" என்று தேம்பித் தேம்பி ஆலயத்தில் இருப்பவர் அனைவரும் அழுதனர்.

இச்செய்தி, பரமன் செந்தில்பதி முழுதும் பரவியது. புனித மக்கள், இதை எண்ணி மனம் புண்ணுற்றனர். இதனைத் தொடர்ந்து இன்னம் என்ன என்ன விபத்து நேர இருக்கிறதோ என்று கனிந்த அன்பர்கள் கதறும் ஒலி கடலொலியையும் அடக்கியது.

அவ்வழியே ஒரு **பௌத்தர்** வந்தார். நடந்ததை யறிந்தார். இதுதான் சமயம் என்று துணிந்தார்.

"பொய்த் தேவு பேசிப் புலம்புகின்ற போலிக் கொள்கை போய்த் தொலைக! நமோ புத்தாய! சங்கம் சரணம் கச்சாமி! தர்மாங் சரணம் கச்சாமி" என்று, வீறிட்டுத் தன் சமய விளம்பரம் செய்யலாயினர். இச் செய்தி, அனல்பட்ட புண்ணில், அம்பு பாய்ச்சியதுபோல் இருந்தது அன்பர்கட்கு.

அதே சமயம், "மா ... மா ... அம் ... மா ..." என்று கத்திக்கொண்டே ஒரு எருமை, கடலை நோக்கிச் செல்கிறது. மோதும் அலைகளை முட்டி, சீறி நீருள் செல்கிறது; அதைத் தடுக்க எவராலும் முடிய வில்லை. வெறிகொண்ட எருமை யென்று, அனைவரும் வேதனை எய்தினர். கொடிமர வீழ்ச்சி; அதைத் தொடர்ந்து கடலில் எருமையின் வீழ்ச்சி; இந்த இரண்டிற்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது என்று எண்ணி இடிகிறது எவர் மனமும்.

கண்ணிற்கு எட்டிய தூரம் சென்று கடலில் மறைந்த எருமை, அரை நாளிகையளவில் மீண்டும் கண்ணிற்குப் புலப்படுகிறது.

"அதோ, அதோ திரும்புகிறது! எதையோ தள்ளிக்கொண்டே வருகிறதே" என்று, கண்ணிமை கொட்டாது நோக்கிக் கூவினர் கரை ஓரத்தவர்.

என்ன வியப்பு! முதிர்ந்த ஒரு சந்தன மரத்தையல்லவா முன் தள்ளி நீந்தி வருகிறது. அன்பர்கள் ஆரவாரித்தனர். கரை எய்தியது எருமை.

உவகை மிகுந்த அன்பர்கள் ஓடி வந்தனர். எவரையும் பொருட்படுத்தாமல் எருமை, புனித ஆலயத்துள் புகுந்தது. சண்முகன் சன்னிதி சார்ந்தது.

அது கொண்டுவந்த சந்தன மரத்தை, அடியவர்கள் ஆலயத்திற் சேர்த்தனர். அதன்பின், எருமை யிருக்குமிடம் எய்தினர்.

அர்ச்சகர் மேல் செந்திலாண்டவன் ஆவேசித்தான். "ம் ... ம் ... ம்" என்று குழறி முழங்கி ஆவேசகர் கொக்கரித்தார். நேரே எருமை அவரை நெருங்கி வந்தது.

"கொடி மரத்திற்கு மரம் கொணர்ந்த நீ, என்றும் இங்கு இரு" என்று கனிவோடு அதன் தலைக்கு நேரே கை நீட்டினர். அவ்வளவில் அது கல்லெருமையாய் மாறிக் காட்சி யளித்தது.

ஆவேசம் மலையேறியது. 'அரஹர' கோஷம் அளவின்றி எழுந்தது. பரவசம் எய்திய பக்தர்கள், கந்தப் பெருமான் ஆவேசித்து இட்ட கட்டளைப்படி, மாபெரும் சந்தன மரத்தைத் **துவஜ ஸ்தம்பமாக்கி** மகிழ்ந்தனர்.

கரையேறிய கரும்பகடு

இதோ வருகிறது மற்றொரு எருமை. என்ன வியப்பு! வரத கந்தன் ஆலயத்தை அது வலம் வருகிறது; வலம் வந்தபடியே இருக்கிறது. அர்த்த யாம வழிபாட்டின்பின், பரமன் ஆலய வாயிலில் படுத்தது.

மறுநாள் வைகறையில் எழுந்தது. பரமன் கோயிலை பழையபடி வலம் வருகிறது. மூன்று நாட்களாக இதே செய்தி. அதை முருகன் அடியவர் அறிந்தனர். அதைத் தேடி வந்த உரியவனும் கனிவுடைய அதன் செயலைக் கண்டான்.

முன்னைய ஞானத்தின் முதிர்வு இது என்று முருகபக்தர்கள் பேசுகின்றனர். அதன்பின் உரியவனும் அதை ஓட்டிச் செல்ல அஞ்சினன். அதற்கு வணக்கம் செலுத்தினன். வாளா சென்றான்.

செவ்வேள் பெருமானைச் சேவிக்க வரும் ஒவ்வொருவரும், பலபட அந்த எருமையின் செயலைப் பாராட்டுகின்றனர். ஆலயத்திருப்பணி அதிகாரிகள் அன்போடு அதற்குக் காலத்தில் உணவை அளித்தனர்.

ஊரில் ஒரு அப்பாவி இருந்தான். அவன் செல்வச் செருக்குடன், கல்வியால் மண்டைக் கர்வம் கொண்டவன். குருட்டுத் தனமான உலகாயதம் அவன் கொள்கை.

ஆறுமுகமாம்; அவன் அடிநிழலில் முத்தியாம்; கண்கண்டசுகம் உலக அனுபவம்; இதுவே கைகண்ட பலன்; இத்தெளிவு இவ்வூரவர்க்கு என்று வாய்க்குமோ என்று வாயாடுவது அவனுக்கு வாய்ப்பாய் இருந்தது.

ஒரு நாள், புனித கோயிலின் பக்கமாகப் போய்க்கொண்டே இருக்கிறான். கோயிலை வலம் வரும் எருமையைக் கும்பிடுகிறார் ஒரு அன்பர். அதைக் கண்டான்; அவனுக்கு ஆத்திரம் அதிகரித்தது.

"ஏய் தம்பி! என்ன இது! எருமையையா வணங்குகிறாய்?"

"ஐயா! இது முருக பக்தி முதிர்ந்தது. இதை வணங்கினால், வாழ்விக்கும் ஆன்ம லாபம் வாய்க்கும்."

சிறுமதியாளன் சிரித்தான். "மனித பக்தியை மாடு கவர்ந்தது; மாட்டுப் பக்தியை இப்பொழுது மனிதன் கவரப் பார்க்கிறான். அட பகுத்தறிவு இல்லாத பாமரமே! சோறு கண்ட இடம் சுகம் என்ற இனத்தைச் சேர்ந்தது இந்த எருமை. இதை உணராத ஏழை மதியால், எருமைக்குப் பெருமை! பேஷ்! நன்றாய் இருக்கிறது செய்தி."

"ஐயா! வீணான இந்த நாஸ்திக வாதம், எம்மிடத்தில் வேண்டாம். பன்னிருகண் பரமனுக்கு நாம் பதிலளிக்க ஒரு காலம் வரும். விதியின் அளவிற்கு உரியது மதி; மதியை மதிப்பது மடமை. மாபெரும் தூய உணர்விற்குத்தான் உலகம் மதிப்பளிக்கும். முன்னைய புண்ணிய வாசனையால் முருகனை வலம் வருகிறது இது"

"பழைய தீய பாவத்தால், மங்கிய மனிதன், கண்ணவிந்து கடவுளை நிந்தனை செய்கிறான். அஃறிணைக்கு இருக்கும் தெளிவுகூட உயர்திணைக்கு இல்லை. பாவக் கலியின் பண்பு என்பது இதுதானா?" என்று, ஆத்திரத்தால் பொரிந்து கொட்டினார் அந்த அன்பர்.

ஒரு கூட்டமே இந்த விவாதத்தில் கூடி விட்டது.

"நீங்கள் இவர்களைப் போன்றவர்களுடன் பேசவே கூடாது; தீயாரைக் காண்பதுவும் தீது; வாருங்கள் போகலாம்" என்று அந்த அன்பரை மக்கள் அழைத்துச் சென்றனர்.

கோபத்தால் உலகாயதன் கொதித்தான். அப்படியா செய்தியென்று கொக்கரித்துக் கர்ஜித்தான். ஊராருக்கு அறிவு கற்பிக்க வேண்டும்; இதற்கு யாது வழி யென்று தன் சிற்றினத்தோடு நெடு நேரம் சிந்தித்தான். முட்டாள் கூட்டம் மோசமான ஒரு முடிவிற்கு வந்தது.

மறுநாள் இரவு ஒரு மணி. கோயில் வாயிலில் படுத்திருக்கிறது பக்த எருமை. முருக சிந்தனையில் இருந்த அதை முற்றுகை யிட்டனர். கருணை சிறிதும் இல்லாமல், அதன் கண்களை இறுகக் கட்டினர்.

எருமை பதைத்து எழுந்தது. வாயையும் கட்டி வலித்தனர். இடக்கர் செய்த அதை இழுத்துச் சென்றனர். எடுப்பான ஒரு படகில் ஏற்றினர். சிந்தனை மதர்த்துப் படகைச் செலுத்தினர். தயவு என்பதே இல்லாமல் நடுக் கடலில் தள்ளினர். வாயில்லாப் பிராணி மாபெரும் நீருள் மறைந்தது. திரும்பினர் சந்தடி யின்றி; தம் தம் இல்லம் சார்ந்தனர்; அவ்வளவுதான்.

வைகறையில், கோயில் திறப்பாளர் வந்தனர். வழக்கப்படி எருமையை வாயிலில் கண்டிலர். என்ன இது? எங்கே எருமை?

ஏக்கம் மிகுந்து எங்கும் தேடினர். இருந்தால்தானே அகப்படும். எங்கும் பரவியது இச்செய்தி. எவன் செய்த அட்டூழியமோ இது என்று கனிவுமிக்க அன்பர்கள் கண்ணீர் சிந்தினர். எங்கும் இதே பேச்சு எழுந்தது.

ஒன்றும் அறியாதவன்போல், உலகாயதன் வீதிவழி வந்தான். பேசுவார் பேச்சுக்களைக் கேட்டான்.

"அடடா! அப்படியா! எங்கு போயிருக்கும் எருமை? அது போயிருக்கும் இடம் உங்கள் பன்னிருகண் பரமனுக்கும் தெரியாதோ? சகதியும் நீருமான குட்டைகுளம், அதற்கு மாமியார் வீடு போல மகிழ்ச்சியளிக்கும். சீக்கிரம் தேடுங்கள், தேடுங்கள்" என்று சிரித்தான்.

தறுதலையான அவன் தான், ஏதேனும் தவறு செய்தானோ என்று எண்ணி, அஞ்சியது அன்பர் மனம். அதை எப்படி நிரூபிக்க முடியும்?

"வாய்ப்பறை யன்றிச் செயல்முகம் இல்லாப் பாழும் மனிதர்க்கு, வாழும் வழி கற்பித்தது எருமை. அதற்குமா இடையூறு? அடியார்க்கு நீ அருள்கின்ற பேறு இதுவோ அமல!" என்று அலறி அழுதனர் செந்தில் அன்பர்கள். குமுறும் அவர் துயர் கண்டு, அந்தக் கோழிக் கொடியன் பொறுக்குமோ?

ஓ...ஓ...ஓ என்று கடல் பேரிரைச்சலிட்டுப் பொங்குகிறது. ஆகாயத்தை நோக்கி அலைகள் எழுந்து ஆரவாரிக்கின்றன. அவைகளைப் பார்க்கிறபோதே அச்சம் அதிகரிக்கிறது.

"அதோ! அதோ!!" என்ற கூக்குரல் எழுந்தது. என்ன அது? எவர் கண்களும் குரல் வந்த திசையை நோக்கின.

என்ன வியப்பு! கண் கட்டு, வாய்க் கட்டுடன் கடலில் எருமை காட்சியாகிறது. அலைகளில் முக்கி முனகி வருகிறது.

"வா முருகா! வா வா முருக!!" என்று மகிழ்ந்து ஆரவாரிக்கிறார்கள் அன்பர்கள். அதிக சிரமப் பட்டுக் கரையேறி எருமை அறுமுகன் ஆலய வாயிலை அடைந்தது. அன்பர்கள் தொடர்ந்து ஓடி வந்தனர். கட்டுக்களை அவிழ்த்தனர்.

அதற்குள் தெய்வக் கோயில் திருப்பணியாளர் தீனி வைத்தனர். தின்று, நீர் பருகி, பழையபடி கோயிலை வலம்வரத் தொடங்கியது. இதுகண்ட அன்பர்கள், மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். அன்பின் அலைகளில் மிதந்தனர்; அறுமுகன் சந்நிதி யடைந்தனர்.

வலம் வந்த எருமை, முருகன் திருமுன் வந்து நின்றது. பரமன் திருமுகத்தைப் பார்த்தது.

"ம்...மா...அ...அ" என்று வீறிட்டுக் கூவியது. அதன் பொருள் யாதோ; அறிபவர் யார்? அதன் பின், பரமன் திருமுன் படுத்தது. அவ்வளவுதான்; மறுபடி எழுந்திருக்கவில்லை. அன்பொளி மயமான அதன் ஆன்மா, அருள் ஒளி அமலன் அடிநிழலை யடைந்தது. கண்ட அன்பர்கள் கண்ணீர் சிந்தினர்.

இவைகளைக் கண்ட நாஸ்திக நண்பர் நாணினர். குற்றம் குறுகுறுத்தது; குமைந்தது மனம்.

"குமரன் அருளை அறியாத குணக்கேடன் ஆயினேன். எருமைக்கும் பெருமை தந்த இறைவன், பாவியேன் பிழையைப் பொறுப்பானே? நினைக்கிற போதே நெஞ்சம் வேகிறதே! செந்தில் செல்வமே! பரங்கிரிப் பரமா! பழநி வாழ்வே! ஏரகத்து இறைவா! குன்றுதோறுடும் குமரேசா! பழமுதிர் சோலையில் மாமன் உருவாய் மகிழ்பவனே!

மாபெரும் தீவினை செய்த என்னை மன்னிப்பாயோ! பெரும! உம்பரை வருத்திய சூரனை ஊர்தி ஆக்கினாய்; பதுமனைச் சேவல் ஆக்கிய உன் அருமைக் கருணை, எளிய என்னை ஏற்காதோ" என்று கண்ணருவி பொழியக் கதறினார்.

சிறக்க இருந்த தன் செல்வத்தை யெல்லாம், அவர் செந்திலாண்டவன் கோயிலுக்கே சேர்த்தார். நெற்றியில் நீறு; கழுத்தில் உருத்திராக்கம். கையில் ஜபமாலை.

"எருமை என் குரு. அது காட்டிய வழியையே அடியேனும் பின்பற்றுவேன்" என்று, ஓயாது ஆலயத்தை வலம் வந்தார். கோயில் திருப்பணி நிர்வாகிகள், உவந்து உதவிய ஒருவேளை உணவை உண்டார். அடியர்பணி ஆற்றினார். இங்ஙனம் பலகாலம் ஈடுபட்டு, அமைதி யடைந்தது அவர் மனம். இவர் பெயரும் காலப்போக்கில் மறைந்தது. உலகாயதம் ஒழிந்த அன்பர் என்ற பெயரால், உலகம் இன்னும் அவரை உணர்கிறது.

அபிஷேக இளநீர்

ஆலயத்தில் பெருமானுக்கு அபிஷேகம் நடைபெறுகிறது. எடுத்தலோசை, படுத்தலோசை, நடுத்தர ஓசை தவறாமல் அந்தணர் ஓதும் மந்திர நாதத்தில், வேத அதிதேவதைகளின் தெய்வ நிருத்தம் வெளியாகின்றது.

அமுதினும் இனிக்கும் அருந்தமிழால் பாடும் பண்ணிசை, கல் மனத்தையும் கரைத்து, மெய்ம்மயிர் பொடிப்ப, கந்தப் பரமன் திருவுருவைக் கண்முன் கொணர்ந்து, எதிரில் நிறுத்துவதுபோல இருக்கிறது.

'ஓம், ஓம்' எனும் கோயிலின் மணியொலி செவியுள் புகுந்து, உளத்தில் பாய்ந்து, அமைதி உபதேசத்தை அருளுகின்றது. பக்திப்பரவசம் எப்படி இருக்கும் என்பதை அங்கே பார்த்து விடுகிறோம்.

பால், தயிர், தேன் முதலியவற்றை ஒவ்வொன்றாக எடுத்து அபிஷேகிக்கிறார் அர்ச்சகர். அபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்த அன்பர் விறுவிறுப்புடன் சுற்றுமுற்றும் பார்க்கிறார். அவர் கண்கள் எதையோ தேடுகின்றன என்று தெரிகிறது.

ஆம் உண்மைதான். அபிஷேக திரவியங்களுள் ஒன்று இளநீர். எல்லாம் சேகரித்தவர், அதை மறந்திருக்கிறார்.

"ஆஹா! என்ன முட்டாள்தனம். இன்ப அன்பர்களை எண்ணி யெண்ணி, தீரா வெம்மையுறும் திருமேனிக்கு, அவசியம் இளநீர் ஆட்டுதல் வேண்டும். அந்தத் திருமந்திர வெம்மைத் திருவுருவிற்கு அபிஷேகிக்க இளநீர் இல்லையெனில், விதிமுறை பூசனை வீணாகி விடுமே!

" பூசனை வழுவுமாயின், புலானுடன் தன்னைப்போற்றி,
சீசீ யான் இருக்க லாற்றேன்; இறப்பதே திண்ணம் "

என்று அன்றொரு வேடுவன் அலறினனென்று, புனித புராணம் புகல்கிறதே!

"இளநீர் திடீரென்று எங்குக் கிடைக்கும்? வழிபாட்டுக் காலம் தவறி அகப்பட்டால்தான் யாது பயன்? ஐயோ! ஐயோ'' என்று அலறியபடியே விமலன் சந்நிதியிலிருந்து வெளி வந்தார். பேயறைந்தது போல இருக்கிறது அவர் திருமுகம். கண்டவரை யெல்லாம் கைகுவித்துக் கும்பிடுகிறார்.

"ஐயா! இங்கு இளநீர் எங்குக் கிடைக்கும்?"

"எதற்குக் கேட்கிறீர் ?"

"ஆண்டவனுடைய அபிஷேகத்திற்கு ஐயா! அவர் உடலாடுகிறது." குளமந்த சொற்கள் குழறி வருகின்றன.

"அதற்காகவா ஐயா இப்படி அங்கலாய்க்கிறீர்" என்றனர் சிலர். "இவ்வளவு அஜாக்ரதை உமக்கு ஆகாது" என்று சினந்து கடிந்தார் சிலர். "இளநீர்ப் பாவனை செய்துகொள்ளலாம்; அர்ச்சகரிடம் சொல்லும்" என்று முற்றக்கற்றவர் ஒருவர் முடிவு கூறினர். இங்ஙனம் கூறினரைவிட, கல்லாதாரே நனி நல்லர் என்று வருந்துகிறது அன்பர் மனம்.

கோபுர வாயிலுக்கு வெளியே விரைந்து போய்க்கொண்டிருக்கும் **அமணர்** ஒருவர், அன்பர் அங்கலாய்ப்பதை அறிந்தார்.

"என்ன ஐயா! என்ன செய்தி? " என்றார்.

அவரை அறிந்திருக்கும் அன்பர், "ஆ! தாங்களா! தவறு செய்துவிட்டேன்; அபிஷேகத்திற்கு இளநீர் இரண்டு அதிசீக்கிரம் தேவை; உதவ வேண்டும்; என்ன கேட்டாலும் கொடுத்து விடுகிறேன்" என்று கெஞ்சுகிறார். அந்த சமணர் வீடு கோயிலுக்கு அண்மையில் உளது. அவர் வீட்டுப் புழக்கடையில், தென்னை மரங்கள் உண்டு என்று தெரிந்துதான் கேட்கிறார்.

"ஹி, ஹி, ஹி" என்று பல்லிளித்தார் சமணர்.

'வேண்டியபோது அடியர் வேண்டிய போகமது
வேண்ட வெருது உதவும்'

உங்கள் பெருமான், தன் அபிஷேகத்திற்கு இரண்டு இளநீர் தாரானே? கலங்கும் உம்மைக் கண்டு, கருணை காட்டாத கந்தனும் ஒரு கடவுளோ?"

இப்படி அவர் பேசும் ஏளனப் பேச்சுகள் கேட்கச் சகிக்கவில்லை. இது தெய்வ சோதனையோ? இளநீர்க்கு யாது வழி? அபிஷேக காலம் தவறுகிறதே என்று பட படக்கிறது பக்தர் மனம்.

"**குமரா அ அ ஓ!** என்று கோஷிக்கிறது கடல் என்று, குகன் அடியவர் சொல்லக் கேட்டுளேன். அது மெய்யானல், அந்தக் கடலையே கேளும்! இளநீர் இருக்கும் இடத்தை, கனிவுடன் உமக்கு அது காட்டித் தரும்" என்று, நோக நோகப் பேசுகிருர் சமணர்.

"என் அசட்டுத் தனத்தால், இவ்வளவு விளைவு. தெய்வ நிந்தனை, செவி நிரம்பக் கேட்டாயிற்று. தவறு செய்த எனக்கு மரண தண்டனைதான்" தகுதி யென்று ஒரு முடிவிற்கு வந்தது மனம். ஆ! அதோ கடலை நோக்கி ஓடுகிருர் அன்பர்.

அன்பர் அணுக அணுக, ஆரவாரிக்கிறது அந்தக் கடல். ஒன்றன்பின் ஒன்ருய், அலைகள் உருண்டோடி வருகின்றன.

என்ன வியப்பு! இரு இளநீர்கள், அலைகளின் மேல் அசைந்து ஆடி வருகின்றன. மணி புடைத்த பெரிய உருவுள அந்த இரண்டையும் மெய்யன்பர் கண்டார். மெய்ம்மறந்து நின்ருர்.

"முருகா! முருகா!! உன் கருணையே கருணை" யென்று, உரக்கக் கூவினர். அனைவரும் கடலை நோக்கி அதிசயித்தனர்.

அலைகளினல் தள்ளுண்டு, கரையேறி, விரைந்து உருண்டு, உரிய நேரத்தில் சந்நிதி யடைந்த இளநீர் இரண்டையும், தொடர்ந்து ஓடி வந்த அன்பர் கைகுவித்துத் தொழுதார்.

அதை யறிந்தவர் அனைவரும், சொல்லொணு அதிசயம் எய்தினர்.

திருச்செந்தில் துரைக்கு 'அரோஹர' என்ற பேரொலி, எங்கும் விண்ணில் எதிரொலித்தது. இளநீர் அபிஷேகம் அதன்பின் இனிது நடந்தது. அன்றைய சேவை, வெகு அற்புதமாக அமைந்தது.

சால்புடைய இவைகளை யறிந்த சமணருடைய கல்லான மனமும் கரைந்தது. உதறல் எடுத்தது அவர் உடல். கலியில் கண்கண்ட தெய்வம் திருச்செந்தில் தெய்வந்தான் என்று உணர்ந்தார்; அதைத் தம் உள்ளம் குளிர்ந்து ஓதினர்.

அறுமுகனுக்கே தம் பொருள்களை அர்ப்பணித்தார். பரம பக்தரானுர். பல காலம் ஆலயத்தில் பணி செய்தார். பணியின் பயனுக, பரமானந்தம் எய்தினர். **சண்முக பக்த சமணர்** என்பது அவர் திருப்பெயர்.

இரண்டு எருமை, இரண்டு இளநீர், சமண பௌத்த இருவர், யூக லோகாயதர் முதலினேரை முன்னிலையாக்கி நிகழ்த்திய முதல்வன் ஆடலை, பகழிக்கூத்தர் தம் பிள்ளைத் தமிழில் பக்தி பரவசத்தோடு பாடுகிருர். இதோ வருகிறது அப்பாடல்.

"பெருமையுடன் நீள்தலத்து இருவர்பர சமயமும்
பேதம் பிதற்றி விட்ட
பிறைமருப்புக் கரும் பகடு முந்நீரில்
பிழைத்து நீள் கரையில்ஏற;
பொருவரும் சந்நிதியில் எய்துவது போல், மணி
புடைக்கும் இளநீர் இரண்டு
புணரியின் மிதந்துசந் நிதியேற, இந்நாள்
பொருந்த விளையாடி; முன்னுள்
இருதிரை யினில்சந் தனக்கொடி மரத்தினை
இழுத்து வரும் எருமையேற்றை,
எப்பொழுதும் முதியகல் பகடாக உலகத்தில்
யாவரும் காண என்று
திருவுளம் மகிழ்ந்துதிரு விளையாடல் கண்டநீ
சிறுதேர் உருட்டி யருளே!
சேவல் பதாகைக் குமர கம்பீரனே!
சிறுதேர் உருட்டி யருளே!"

இப்பாடலில் உள்ள **இந்நாள் விளையாடி** யென்ற சொற்போக்கால் முதலில் கூறிய இன்ப அருளாடல் இரண்டும், பகழிக்கூத்தர் காலத்தில் நிகழ்ந்தவை என்பதும்,

முன்னுள் விளையாடல் என்ற குறிப்பால், பின உரைத்த திருவிளையாடல், மிகப் புராதனமான ஒரு காலத்து நிகழ்ந்தது என்பதும் இங்கு உணரத்தகும்.

கச்சிப்பதி அற்புதங்கள் போல், கலியாட்சி முதிர்ந்த இன்று, செந்திலில் இருந்த கல்லெருமையும், கண்ணிற்குப் புலனுகாமல் மறைந்தது.

உயர்திணை அஃறிணைகள் மூலம் திருவருள் நுட்பங்களை உணர்கிறவர்கள் நாம். அவைகளைத் திருச்செந்தூர் **துவஜஸ்தம்பம், வெற்றிக் கொடிமரமாகி,** இன்றும் நமக்கு உவகை விளையுமாறு உணர்த்திக்கொண்டே இருக்கிறது.

வாழ்க திருச்செந்தூர் வளம்! வாழ்க உலகம். வாழ்க முருகன் அடியவர்!!

ஓம்.

ஏன்? ஏன்?

மகாவித்வான், சித்தாந்தப் பேராசிரியர்
ச. தண்டபாணி தேசிகர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

அருவிகள் புடை சூழ்ந்த - அழகான மலை சார்ந்த ஆச்சிரமத் தலம் ஒன்றிலே சிவானந்தப் பெரும் போகத்திலே திளைக்கும் சிவஞானி ஒருவர் இருக்கிறார். ஆழமான கடல் போன்ற அமைதியும், பார்ப்பாரை வசப்படுத்தும் ஒளியும், தெளிவும், சாந்தமான பார்வையும் அவர் தகுதியை யளந்து காட்டுங் கருவிகளாக இருந்து அவர் தகுதியை உயர்த்துகின்றன.

உலகப் புயலிற் சிக்கிய சிலர் அவரிடம் அடிக்கடி வந்து போகிறார்கள். வருகின்றவர்கள் முகமோ கவலை சூழ்ந்த நெஞ்சும், குழிந்த கண்ணும், வடுவாழ்ந்த முகமுங்கொண்டு புயலிற் சிக்கிய துன்பக் குறியைத் தோற்றுவிக்கின்றன. வந்துபோகின்ற போதோ தெளிவும், மகிழ்ச்சியும் எதனையும் எதிர்த்து வெல்லும் உறுதியும், கனிவும் உடையவர்களாகப் போகின்றார்கள். இதனைப் பார்க்கின்ற சிலருக்கு "அடிகள் வைத்திருக்கும் அருமருந்தென்ன? அடிகளைக் கண்டவுடனேயே இவ்வண்ணம் மக்கள் இன்பமயமாகின்றார்களே" என்ற எண்ணம் உண்டாகும்.

ஒருநாள், காலை ஆறுமணி யிருக்கும். ஒருவர் பரபரந்து ஓடிவருகிறார் ஆச்சிரமத்திற்குள். அவரது பரபரப்பும் — துடிப்பும் — குறு குறுப்பான பார்வையும் அடிகளார் உள்ளத்தில் மலர்ச்சியை விளைவிக்கின்றன. வந்தவரைப் பார்த்துத் "தம்பி நீ யார்? எதற்காக இவ்வளவு பரபரப்புடன் இந்த இளவேனிற் காலத்து இளங்காலையில் வந்தாய்" என்று வினவுகிறார். வந்தவர் "அடிகாள்! என்னுடைய வாழ்வில் ஏதோ பல தேவைகள் விளைந்துள்ளன. அத்தேவைகளை என் முயற்சியால், விலைகொடுத்து வாங்கி நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை. இங்கே பெற்றுத் தெளிந்து போகலாம் என்று வந்திருக்கிறேன். இவ்வளவு தான் எனது பிள்ளைச் சிறு விண்ணப்பம்" என்றார்.

"அப்பா! தேவையில்லாத மனிதன் உலகத்தில் யார்? எல்லாருக்கும் ஒவ்வொரு விதமான தேவை இருக்கத்தான் செய்கிறது. தேவை ஒருவகைத் தாகம். தாகம் தாபத்தின் விளைவு, தாபம்— வெம்மை. வெம்மை யென்ற சொல்லுக்கு நமது மொழியில் இருவகையான பொருள்கள் உண்டே! உனக்குத் தெரியுமா? ஒன்று வெப்பம். மற்றொன்று விருப்பம். விருப்பமிகுமானால் தாகமாகிறது. ஆகவே

ஒருண்மையை நமது செந்தமிழ் மொழி தெரிவிக்கிறதல்லவா? வெப்பம் தாபமாகித், தாபம் தாகமாகிறது என்று. ஆனல் தாபம் பலவகை. கோடையிலே சுடுமணலில் நடந்து வருகிருன் ஒருவன். அவனுக்கு நா வறள்கிறது; தொண்டை காய்கிறது; அவனுக்குக் கோடைத்தாபம் தாகமாகிறது. அத்தாகம், குளிர் நீர்ச்சுனையில் ஒன்றிரண்டு கைத்தண்ணீரை அள்ளிக்குடிக்கத் தணிகிறது. ஒவ்வொரு வேளையிலும் வயிற்றில் தாகம் விளைகிறதல்லவா? அது உணவருந்தத் தணிகிறது. மனிதன் தெறிகாளையாய்த் தாகங் கொண்டு திரிகிருன். அவன் தாகம் ஒருத்தியை மணந்து கொள்வதால் தணிகிறது. இவையனைத்தும் உடலைப் பற்றிய தாகங்கள். உயிரைப் பற்றிய தாகமும் உண்டு. அது ஞானதாகம். இதிலே அறிந்து கொள்வதால் மட்டும் அகலுந் தாகமும் உண்டு. அறிந்து இருந்து எண்ணி ஆய்ந்து ஆழ்ந்து அனுபவிப்பதால் நிலையாகவே நீங்கிப்போகும் தாகமும் உண்டு. இவைகளில் எந்தத் தாகத்தைப் போக்கும் தேவையைக் கருதி நீ வந்தது?" என்ருர்.

"சாமி! உடல் தாகங்களைத் தணித்துக்கொள்ள எத்தனையோ உபாயங்கள் உள்ளன. அதற்கு இவ்வளவு தூரம் அடிகளாரை நோக்கி வரவேண்டிய அவசியம் இல்லை. உயிர்த் தாகத்தைப் போக்கிக் கொள்ளத் தான் வந்தேன். ஆனல் சுவாமிகள் வார்த்தையிலிருந்து பேசா அநுபூதித் தாகம் ஒன்று புதிதாகப் பிறந்து விட்டது. அதுதான் வேண்டும்"

"அப்பா! அது கையிலே எடுத்துக் கொடுக்கும் பொருளுமல்ல. காது வழியாக நுழைந்து கருத்திலிருந்து மனம் ஒருங்கி மலர வேண்டிய நிலை. அதனை அடியேன் இருந்தபடி இருந்து காட்ட, நீ காணுதே கண்டு நுகராதே நுகரலாமே யன்றி, மேடைப் பேச்சுக்கும்-பத்திரிகை எழுத்திற்கும் முடியாதே! படிப்படியாகப் பழகி வரவேண்டியதல்லவா? தன் முயற்சியால் அனுபவிக்க வேண்டிய தன்னனுபவத்தை என்னிடம் வாங்கிக் கொண்டு போக முடியுமா? தெரிந்து கொண்டு போய்த் தெளிந்து நிட்டை கூடி நித்யானந்தனுகு."

"ஆவதற்குரிய வழிகள் யாவை?"

"முதற்படியாகச் சைவ சாதனங்களிடம் இடையீடில்லாத அழுத்தமான பற்று வேண்டும். பின்னர் ஆலய வழிபாடு வேண்டும். இவ்விரண்டையும் சாதனங்களாகக் கொண்டு பயின்ருல் சாத்தியம் தானே சித்திக்கும். ஏணியைக் கொண்டுதானே அப்பா! ஏறவேண்டும், தோணியைக்கொண்டு தானே கடக்க வேண்டும்?"

"அப்படியானல் சாதனங்கள் யாவை?"

"(விபூதியும்) திருநீறும் கண்டிகையும்"

"அவற்றை என்ன செய்ய வேண்டும்?"

"அணிய வேண்டிய முறைப்படி குறிக்கோள் தெரிந்து அணிதல் வேண்டும்."

"சமய சாதனமாகத் திருநீறு அமைந்தது ஏன் ?"

"தம்பீ ! இப்போதுதான் உனக்கு உண்மையான ஞான தாகத்தின் வாயில் தோன்றுகிற து திருநீறு எப்படி விளைகிறது தெரியுமா ?"

"தெரியும். பசுவின் சாணத்தைச் சுட்டு நீற்றப்படுகிறது. அதனையேன் சாதனமாகக் கொள்ள வேண்டும் என்பதுதான் எனது ஞானத்தேவை"

"நீறு என்பது நீற்றப்பட்டதல்லவா ? அதாவது ஒரு பொருளின் முடிவான நிலை—அல்லது இறுதிநிலை தானே நீறு என்பது. தம்பீ! உலகிலுள்ள எந்தப் பொருளும் நீற்றப்பட்டால் நீருகத்தானே முடியவேண்டும். அந்த நீற்றைச் சுட்டால்?''

"நீறு நீறுதான், அது வேறொன்ருக மாருது''

"தம்பி ! அங்கேதான் உண்மையிருக்கிறது. எந்த நீறு எத்தனை புடம் போட்டாலும், எந்த எந்த வகையில் குழைத்தாலும் அழித்தாலும், தனது வெண்மையும் நுண்மையும் மாறுவதில்லையோ அதனைச் சமயச் சின்னமாகக் கொண்டது ஏன் என்பது உனக்கு இப்போது விளங்கவில்லையா ?"

"விளங்குகிறது; நமது சித்தாந்த சைவம் பல கொள்கைகளை நீற்றப்பட்டதால் விளைந்த முடிந்த முடிவாக—மாற்றமில்லாததாக—நிலைத்ததாக—தெளிவும் செறிவும் உடையதாக அநுபவத்திற்கே யுரியதாக இருப்பதால், அத்தகைய திருநீறு சைவ சாதனமாக அமைந்தது என்று............''

" சாமி ஓரையம் உண்டாகிறது. அதையும் கேட்டுவிடலாமா ?"

"ஒளியாது கேள். ஐயம் என்பது கூடவே கூடாது. தெளிவே உயர்வுக்கு வழி. உண்மைக்கு நிலைக் களன், இன்பத்தின் இருப்பிடம். கேள் ! கேள் !"

"அடிகளே ! 'முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பராவர்.' ஆதலால் உலக நிலையாமை யுணர்த்துவது திருநீறு. அடிக்கடி நமக்கு நிலையாமை ஞானம் உண்டாகத் திருநீறு அணிகிருேம், இதனை யுணர்த்தவே திருநீறு சாதனமாக அமைந்தது என்கிருர்களே ; அதைக் கேட்டதிலிருந்து என் மனத்திலே குழப்பம். நாம் திருமணக்கோலம் கொள்கிருேம். அப்போது பெரியவர்கள் அனைவரும் வாழ்த்தித் திருநீறளிக்கிருர்கள். நமது ஆண்டவன் அம்மையப்பராக இருந்து யோகியாயிருந்து உயிர்க்குப் போகத்தை நல்குகிருர். நாமும் யோகியாயிருந்து இன்பவாழ்வு வாழ்கிருேம். பெரியவர்களும் எல்லா இன்பங்களையும் பெற்று இனிது வாழ்க என வாழ்த்திக் கொடுக்கின்ருர்கள். இந்த நிலையில் பிடி சாம்பராவர்

என்ற நிலையாமை யுணர்ச்சி உண்டாகலாமா ? இன்பந் தருவது நீறு, செல்வந் தருவது நீறு, என்றெல்லாம் சிவஞானியர்கள் சொல்லியிருக்கிறார்களே ! விபூதி, பெருந்திரு, செல்வம், மங்களம், என்றெல்லாம் திருநீறு சிவாகமங்களில் அழைக்கப்படுகின்றதே. இதை அழிவை அறிவிக்குங் கருவியாகக் கொண்டு அணிந்து கொள் என்று சொன்னால் யார் அணிவார்கள் ? என்பது தான் அந்த ஐயம்"

" நல்லது உலக நிலையாமையை யுணர்த்த எழுந்தது அத் திருப்பாடல். அதிலே **பிடி சாம்பராவர்** என்ற சொற்றொடர் எழுத்தாளர்களுக்கும், மேடைப் பேச்சாளர்களுக்கும் ஒரு கற்பனை யுணர்ச்சியைக் கற்பித்தது. அவர்கள் அதனையும் இதனையும் இணைத்து விட்டார்களேயன்றித் திருநீறு - உயர்ந்த மங்கலப் பொருள்தான். மங்கலம் தருவதுதான், தூய்மையும், வெண்மையும் மாற்றமின்மையும் கருதியே சாதனமாக அமைந்தது. இதில் ஐயமே வேண்டாம் அப்பா!''

"அமைந்தது சரி; நாம் அணிவது ஏன் ?"

"ஒளிதானே இருளை யோட்டும்!? அறிவுதானே அறியாமையை நீக்கும்! தூய்மைதானே அஃதின்மையை அகற்றும். வெண்மைதானே கருமையைப் போக்கும்! அதுபோல வெண்ணீறு உண் மலத்தைப் போக்குகிறது. மும்மல வாதனை யற்றமைக்கு அறிகுறியாக மூன்று வரைகளாக அணியப் படுகிறது."

"சாமி! நமக்கு மலம் உண்டு. அவை நீங்க நாம் அணிய வேண்டியதவசியம். இறைவன் 'வெண்ணீறு சண்ணித்த மேனியன்' 'பவழம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்' என்றெல்லாம் பாராட்டப் படுகின்றாரே. அவரணிவது ஏன் ?"

"உண்மைதான் ; இயல்பாகவே மல மற்றவராகிய மகேசன் அணிய வேண்டாம் தான். அவர் மேனியில் ஒட்டிய வெண்ணீறு பேரூழிக் காலத்து எல்லாம் சக்தியுள் ஒடுங்க அதனையும் தன்னகத்தாக்கித் தானொருவனே அழிவிலாப் பரம்பொருள் என்பதே அனைவரும் அறிந்து கடைத்தேற ஞான நடம் புரிகின்றார். அவர் மேனியில் ஒட்டிய வெண்ணீறு ஒன்றாய்ப் பலவாய் விரிந்த உலகம் மீட்டும் ஒன்றாய் நுண்ணிய அணுவாய், முடிவான சார்பிடமாகிய இறைவனையே சென்று சார்வன என்ற அடிப்படைத் தத்துவத்தை அறிவிப்பதேயாகும். அன்றியும் அவரணிய நாம் அணிகிறோம். அவரிருக்க நாமிருக்கிறோம். ஆதலாலும் அவரணிய வேண்டியதாயிற்று. ஆகவே அவர் அணிவது நாம் அணிந்து மலநீங்கி உய்யவே யன்றித் தன் பொருட்டன்று என்று தெளிவாயாக."

"திருநீற்றைப் பற்றித் தெரிய வேண்டிய தேவைகள் பலவுண்டு. ஆனாலும் அவசரமாக ஒன்று கேட்டுக்கொள்கிறேன். கோயிலுக்குப் போகும்போது தேங்காய், பழம், கற்கண்டு கொண்டு போகிறோமே ஏன்?"

“ தம்பி! நமக்குள்ள அன்பு மூன்றுவகை. தேங்காய் அன்பு, வாழைப்பழ அன்பு, கற்கண்டு அன்பு என்று. அவற்றுள் எந்த வகையான அன்பையுடையவன் நீ என்பதை நீயே அறிந்து கொள்வாயா? உன் அன்பை ஏற்கின்ற இறைவனல்லவா உன் நிலையை யுணருவார்; உணர்ந்து ஆட்கொள்வார். அதற்காக இந்த மூன்றையும் கொண்டு போனால் எந்தத் தரத்தில் வைத்து இறைவன் ஏற்பாரோ ஏற்கட்டும் என்றுதான் கொண்டு போகிறோம்.”

“ மூன்று வகையான அன்பு சொன்னீர்களே, அது விளங்க வில்லையே!”

“ஓ அதுவா, தேங்காய் அன்பு என்பது, தேங்காயின் உள் பருப்பாகிய சுவைப் பொருளை அடைய வேண்டுமானால் மட்டையை உரித்து, நாரைப் பிய்த்து, ஓட்டை உடைத்து அடையவேண்டும். அதுபோல மிக வருந்தி வெளிப்படுத்தப்படும் அன்பு தேங்காய் அன்பு. இதனை நாளிகேர பாகமான பக்தி என்பர் வடநூலார். வாழைப்பழ அன்பு, தோலை யுரித்தால் போதும் விழுங்கலாம். அதுபோலச் சிறுதடை விலக வெளிப்படும் அன்பு. இதனை கதலிபாகம் என்பர். கற்கண்டு அன்பு, அப்படியே எடுத்து வாயில் போடவேண்டிய கற்கண்டைப் போன்ற முழு அன்பு. இவற்றுள் நான் இந்த அன்பு வகையை யுடையவன். என்னை நீ இன்ன தரத்தில்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்ல உரிமை ஏது?”

“ சரி. தேங்காயை உடைப்பதேன்?” உடைப்பது என்பது, முளைக்குந் தன்மையைக் கெடுப்பது. அவ்வண்ணம் கெடுப்பதற்குத் தடையாக இருப்பன மட்டையும், நாரும், கொட்டாங்கச்சியும். அந்த மூன்று தடைகளையும் அகற்றினால் தேங்காய் மீண்டும் அங்குரியாது. அதுபோல உனக்கும் ஆணவம், மாயை, கன்மம் என்ற மூன்று மலங்கள் திரும்பத் திரும்ப உன்னை முளைக்கச் செய்கின்றன. அவைகளை நீக்கி விட்டால் நீயும் பிறவாப் பேரின்பத்தில் இருக்கலாம் என்பதற்காகவே தேங்காயை உடைக்கிறோம். நம்முடைய ஆலயங்கள், ஆலயங்களில் இயற்றப்படும் கிரியைகள், பூசை முறைகள், விழாக்கள் அனைத்தும் தத்துவ அடிப்படையில் சமயஞான அநுபவ சாதனமாக அமைந்தன. அவற்றைத் திரும்பவும் ஓய்வான காலத்தில் வருவாயாயின், திருவருள் துணைசெய்யுமாயின் உணர்ந்துய்யலாம். சென்று வா. தம்பி!”

“காட்டாதன வெல்லாம் காட்டி, தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேனூட்டிய குருநாதரே! தாகம் உண்டானபோதெல்லாம் வருவேன் ஏற்றருள் புரிக” என்று வந்தவர் போகிறார்.

‘யானைக்கும் கலங்கார்’

கி. வா. ஜகந்நாதன்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற திருமுறை மகாநாட்டிலே கலந்து கொள்வதற்காகப் போயிருந்தேன். மூன்று ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த செய்தி இது. மகாநாட்டுக்கு இலங்கையின் கிழக்குப் பகுதியாகிய மட்டக்களப்பில் வாழும் தமிழர்களில் பலர் வந்திருந்தனர். திருக்கோணமலை என்ற சிவத்தலம் அந்தப் பகுதியில் தான் இருக்கிறது. அவர்கள் என்னை மட்டக்களப்புக்கு வந்து பேசவேண்டும் என்று அழைத்தார்கள்; ஒப்புக்கொண்டேன்.

மட்டக்களப்புக்குப் புறப்பட எண்ணிய அன்று அமாவாசை. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நீர்வேலி என்னும் இடத்தில் கந்தசுவாமி கோயில் ஒன்று உண்டு. அந்தக் கோயில் பூசகராகிய திரு இராசேந்திரக் குருக்கள் என்பவர் என்னிடம் பேரன்புடையார். அவர் வீட்டில் உணவு கொண்டு காரில் புறப்பட்டேன். என்னுடன் யாழ்ப்பாணத்துப் புலவராகிய திரு பொ. கிருஷ்ணப் பிள்ளை என்பவரும் மட்டக்களப்பு அன்பர்களும் வந்தார்கள். அன்பர் கிருஷ்ணப் பிள்ளை நன்றாகப் படித்தவர்; படித்தவர்களிடம் அன்பு கொண்டு அவர்கள் கூறுவதைக் கேட்டு இன்புறுவர்.

கார் போகும்போது நாங்கள் இலக்கிய சம்பந்தமான பலவற்றைப் பேசிக்கொண்டே போனோம். பகல் பதினொரு மணிக்கு நீர்வேலியிலே புறப்பட்டவர்கள் மாலை ஏழுமணி யளவுக்குப் பொலன்னருவா என்ற இடத்தை அடைந்தோம். அதுவரைக்கும் இடையே பல ஊர்களும் நகரங்களும் இருந்தன. அதற்கப்பால் பல மைல்களுக்கு ஒரே காடு. இருமருங்கும் வானளாவிய மரங்கள் சுவர் வைத்தது போல நெருங்கி அடர்ந்திருக்கும். அந்தச் செறிவினிடையே கார் போகும் சாலை ஒரே நேர் கோடாகச் செல்கிறது.

பொலன்னருவா வந்ததும் எங்கள் காரை ஓட்டி வந்தவர், “இரவு இங்கே தங்கி விடியற்காலையில் எழுந்து மட்டக்களப்புக்குப் போகலாமா?” என்று கேட்டார். என்னை அழைக்க வந்தவர்களுக்கு எப்படியாவது அன்று இரவே ஊர் போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்று ஆசை. “அங்குள்ளவர்கள், இவர்கள் வருவார்களோ வரமாட்டார்களோ என்று ஐயமுற்று வழி பார்த்திருப்பார்கள். சிரமத்தைப் பாராமல் நேரே மட்டக்களப்புக்குப் போய்விட்டால் அங்கே இளைப்பாறிக் கொள்ளலாம்” என்றார்கள். “அப்படியே செய்யலாமே!” என்று நான் சொன்னேன். பொலன்னருவாவில் சிற்றுண்டி அருந்தி விட்டு மறுபடியும் புறப்பட்டோம்.

தமிழ்ச் செய்யுட்களையும் அவற்றின் நயங்களையும் எடுத்துப் பேசி அளவளாவினோம். கார் காட்டைக் கிழித்துக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தது. மெல்ல மெல்லப் பேச்சு முருகனுடைய திருவருளைப் பற்றியதாக மாறியது. அப்போது நான் சில திருப்புகழ்ப் பாக்களைப் பாடினேன். பிறகு கந்தர் அலங்காரப் பாடல்களைச் சொல்லத் தொடங்கினேன். அதற்குமுன் பாட்டும் பொருளும் பேச்சுமாக விரவி வந்தது எங்கள் உரையாடல். அலங்காரப் பாடல்களைச் சொல்லத் தொடங்கியபோது அவை யாவும் நின்றன. நான் உணர்ச்சியோடு அலங்காரப் பாடல்களை ஒன்றன் பின் ஒன்றாகச் சொல்லிக் கொண்டே வந்தேன். உடன் இருந்தவர்கள் அவற்றைக் கேட்டுக்கொண்டே வந்தார்கள். அந்த இருளிடையே காட்டுச் செறிவினூடே கார் படுவேகமாகப் போய்க் கொண்டிருந்தது. நாங்கள் அலங்காரப் பாடல்களில் உள்ளத்தைச் சிக்கவிட்டு மற்ற ஒன்றிலும் சிந்தையைப் போக்காமல் அமர்ந்திருந்தோம்.

கார் வரவர வேகமாகப் போவது தெரிந்தது. அதைப்பற்றிச் சிந்திக்கவோ, பேசவோ, அப்போது தோன்றவில்லை. முருகனுடைய நினைவிலே மிதந்தோம். இரவு பதினொரு மணிக்கு மட்டக்களப்பு வந்து சேர்ந்தோம். அலங்காரப் பாடல்களை இடையீடின்றிப் பாடி வந்தமையால் எனக்கு ஒரு விதமான இன்பக் கிளர்ச்சி உண்டாகியிருந்தது.

மட்டக்களப்பு அன்பர்கள் நான் தங்க வசதியான இடம் ஒன்றைத் திட்டம் செய்திருந்தார்கள். அங்கே இறங்கிய உடன் கை கால் கழுவிக்கொண்டு விபூதிப் பையை எடுத்துத் திருநீறு இட்டுக் கொண்டேன். சொல்லவொண்ணாத ஆனந்தம் உள்ளத்தே நிலவியது.

அப்போது, காரை ஓட்டி வந்தவர் என் அருகே வந்து நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கி எழுந்து, ‘திருநீறு வேண்டும்’ என்று கையை நீட்டினார். “நான் என்ன தம்பிரானா? பண்டாரச் சந்நிதியா? என்னை ஏன் வணங்குகின்றீர்கள்?” என்று கேட்டேன். அவர், “உங்கள் கையால் திருநீறு தாருங்கள்; அப்புறம் சொல்கிறேன்” என்றார். நான் திருநீறு தந்துவிட்டு, “என்ன சொல்லப் போகிறீர்கள்?” என்று கேட்டேன்.

“இன்று உங்களால் நாம் எல்லோரும் பிழைத்தோம்” என்றார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

“நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?”

“ஆம்; முருகன் திருவருள்தான் நம்மைக் காப்பாற்றியது.”

“நாம் ஓர் ஆபத்திலும் அகப்பட்டுக் கொள்ளவில்லையே! அப்படியிருக்க நீங்கள் ஏதோ பெரிய விபத்திலிருந்தும் தப்பியது போலப் பேசுகிறீர்களே!”

“ இரண்டிடங்களில் ஆபத்து நெருங்கியது ” என்று அவர் சொன்னவுடன் எல்லோருமே அவரை நோக்கி, “ என்ன, என்ன ?” என்று கேட்டார்கள்.

“ இப்படி ஏதாவது வரும் என்று எண்ணியே நான் பொலன்னருவாவில் தங்கி வரலாம் என்று சொன்னேன். ஆனால் இவர்களுக்கு இருந்த ஆர்வத்தைக் கண்டு புறப்பட்டு விட்டேன்.”

“ என்ன ஆபத்து வந்தது ?” என்று யாவரும் சேர்ந்து கேட்டோம்.

“ இந்தக் காடுகளில் யானைகள் மிகுதி என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவை இரவிலே சஞ்சாரம் பண்ணும். ஒரு காட்டிலிருந்து மற்றக் காட்டுக்குப் போகும். அப்போது அருகில் காரில் யாராவது வந்தால் காரைக் காலாலே தள்ளி நசுக்கிவிடும். அதனால் பெரும்பாலும் இராக் காலங்களில் இந்தச் சாலை வழியே நாங்கள் காரில் போவதில்லை. அப்படிப் போக நேர்ந்தாலும் யானைகள் நடமாடுவது தெரிந்தால் அவை சாலையைக் கடக்கு மட்டும் நெடுந்தூரத்திலேயே காரை நிறுத்தி விளக்கை அவித்துவிட்டு வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு காத்திருப்போம். தெளிவாக யானைகள் போய்விட்டன என்று தெரிந்த பிறகே காரை நகர்த்துவோம்.”

ஏதோ துப்பறியும் கதையைக் கேட்பதுபோல நான் அவர் வாயையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

“ நான் காரை நாற்பது மைல், ஐம்பது மைல் வேகத்தில் ஓட்டினேன். பிறகு அறுபது, எழுபது, எண்பது என்று முடுக்கினேன். நீங்கள் அதைக் கவனிக்கவில்லையோ ?” என்றார்.

“ நாங்கள் கந்தர் அலங்காரத்தில் மூழ்கியிருந்தோம் ” என்று புலவர் கிருஷ்ணப் பிள்ளை சொன்னார்.

“ நாங்கள் கவனித்தோம் ; விரைவில் ஊருக்குப் போவதற்காக வேகமாக ஓட்டுகிறீர்கள் என்று எண்ணினோம் ” என்றார்கள் சில அன்பர்கள்.

“ இரண்டிடங்களில் யானை வந்தது.”

“ என்ன ! யானையா ? நான் பார்க்கவில்லையே !” என்றேன்.

“ நாம் பார்க்கும்படி வந்திருந்தால் கார் தப்பியிருக்குமா ? அருகில் ஐந்தடி தூரத்தில் காட்டுக்குள் கிளையை ஒடித்துக்கொண்டிருந்தது ஒரு யானை. அது காரின் ஒலியைக் கேட்டுச் சாலைக்கு வந்திருந்தால் ஆபத்து நேர்ந்திருக்கும். அந்த ஒலியைக் கேட்டபோது எனக்குச் சிறிது நடுக்கம் உண்டாயிற்று. பிறகு தைரியம் பெற்று மிக்க வேகமாகக் காரை ஓட்டலானேன்.”

“ ஆகவே, உங்கள் சாமர்த்தியத்தால் நாங்கள் தப்பினோம் என்று சொல்லுங்கள் ” என்றேன் நான்.

“இல்லை, இல்லை; அதைத்தானே சொல்ல வருகிறேன். யானை மரத்தை ஒடிக்கும் ஓசையைக் கேட்டவுடன் எனக்கு அச்சம் உண்டாயிற்று; கை நடுக்கமெடுத்தது; அப்போது நீங்கள் முருகனைப் பாடிக் கொண்டிருந்தீர்கள். பாட்டை நானும் கேட்டுக் கொண்டுதான் வந்தேன். அச்சம் உண்டானபோது நீங்கள் உருக்கமாகப் பாடினீர்கள். அதைக் கேட்டு, முருகன் காப்பாற்றுவான் என்ற உறுதி உண்டாயிற்று; காரை வேகமாக ஓட்டினேன். ஆனால் சிறிது நேரங்கழித்துப் பின்னும் பெரிய ஆபத்து வந்தது.”

கேட்டுக்கொண்டிருந்த எங்கள் ஆவல் மிகுந்தது.

“இந்த முறை ஆணும் பெண்ணுமாக யானைகள் வந்தன. அதை வாசனையிலிருந்து கண்டு கொள்ளலாம். அவை சேர்ந்திருக்கும்போது சிறிய தடை உண்டானாலும் சும்மா விடுவதில்லை. சாலைக்கு மிகவும் அருகில் அவை இருந்ததை நான் உணர்ந்தேன். அப்போது என் கை மிகுதியாக நடுங்கியது. இப்போது தப்புவது அரிதென்றே எண்ணிவிட்டேன். அப்போது.........”

“ஒன்றுமே எங்களுக்குத் தெரியாதே!” என்று அன்பர் ஒருவர் கூறினர்.

“தெரிந்து என்ன செய்ய முடியும்? வீண் கலவரந்தான் உண்டாகும். தெரியாமல் இருந்ததே நல்லது. எனக்கு அப்போது இருந்த நிலையை இப்போது எடுத்துச் சொல்ல முடியாது. அப் போது நீங்கள் சற்றே உரத்த குரலில் பாடினீர்கள். முருகன் திருநாமம் பாட்டில் வந்தது. அது காதில் விழவிழ மறுபடியும் எனக்குத் துணிவு பிறந்தது. காரின் வேகத்தை அதிகமாக்கினேன். அத்தனை வேகத்தில் நான் ஓட்டுவதே இல்லை. ஆபத்திலிருந்து தப்பிவிட்டோம். அதற்குக் காரணம் உங்கள் பாட்டு. என் மனத் தளர்ச்சியையும் உடல் தளர்ச்சியையும் அந்தப் பாட்டுப் போக்கியது” என்று கூறி முடித்தார் காரோட்டி.

உடன் இருந்த அன்பர் ஒருவர், “எதிரே வந்த கார்க்காரரிடம் எலியா என்று ஏதோ சொன் னீர்களே!” என்று கேட்டார்.

“ஆமாம்; அதைக் கவனித்தீர்களா? காட்டின் கடைசிப் பகுதி வந்தபோது எதிரே ஒரு கார் வந்தது. அவன் காட்டின் வழியே போகிறவன். அவனிடம் யானை இருக்கிறது என்று எச்சரித்தேன். ‘எலியா’ என்பது சிங்கள மொழியில் யானையைக் குறிக்கும் சொல்” என்று அவர் விளக்கினர்.

நான் முருகன் திருவருளை நினைந்து உருகினேன்; அதற்கு மேலாக அருணகிரிநாதப் பெரு மானுடைய அருள் வாக்கை எண்ணி விம்மிதம் அடைந்தேன். கார் ஓட்டியிடம் பேசலானேன்; “நீங்கள் முருகன் அருளால் நாம் ஆபத்திலிருந்து நீங்கினேம் என்று சொன்னதுதான் உண்மை. அருணகிரிநாதர்

திருவாக்கின் பெருமையை இன்று நானும் உணர்ந்து கொண்டேன். ஒரு பாட்டின் உண்மைப் பொருளை இன்று தெளிவாகத் தெரிந்து கொண்டேன்."

புலவர் கிருஷ்ணப்பிள்ளை, "என்ன பாட்டு?" என்று ஆவலோடு கேட்டார்.

"கந்தர் அலங்காரத்தைப் பாராயணம் செய்தால் இன்ன பயன் கிடைக்கும் என்று ஒரு பாடல் பாடியிருக்கிறார். அலங்காரத்தில் ஒரு பாட்டைச் சொன்னாலும் வேந்தரால் பயம் உண்டாகாதாம்; யமனுக்கும் பயப்பட வேண்டாம். கரடி, புலி, யானைகளுக்கும் பயப்பட வேண்டாம் என்று பாடுகிறார் அருணகிரியார்.

சலங்காணும் வேந்தர் தமக்கும்அஞ்
சார்;யமன் சண்டைக்கஞ்சார்;
துலங்கா நரகக் குழிஅணு
கார்;துட்ட நோய்அணுகார்

கலங்கார் புலிக்கும் கரடிக்கும்
யானைக்கும்; கந்தன் நன்னூல்
அலங்காரம் நூற்றுள் ஒருகவி
தான்கற்று அறிந்தவரே

என்பது அந்தப்பாட்டு. கலங்கார் யானைக்கும் என்பதை இப்போது நன்றாகத் தெரிந்தேன். இதை எந்நாளும் மறவேன்" என்று சொல்லும்போது எனக்கு மேலே பேச வாய்வரவில்லை.

அதுமுதல் கந்தர் அலங்காரம் சொல்லி இந்தப் பயனைச் சொல்லும் போதெல்லாம் என் கண் முன் இலங்கைக் காடும் அதனிடையே காரை ஓட்டிய சாரதியின் தோற்றமும் நிற்கின்றன. அருணகிரியார் வாக்கு உண்மை வாக்கு என்பதில் சிறிதும் ஐயத்துக்கு இடமின்றி, முருகன் திருவருளால் தெளிய வைத்ததை எண்ணி உருகுகிறேன்.

முருகன் வழிபாட்டின் தொன்மை

(பி. கே. சண்முகநாதன்)

முருகன் வழிபாடு மிக மிகத் தொன்மை வாய்ந்தது. முருகனைப்பற்றிய முதற் குறிப்பு இறையனுர் அகப்பொருளுக்கு நக்கீரனுர் எழுதிய உரையில் காணப்படுகிறது. ஆங்கு,

'தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூவகைப்பட்ட சங்கம் இரீஇயனுர் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்க மிருந்தார் அகத்தியனுரும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும்' எனக் காணப்படுகின்றது. இச் சங்கம் "நாலாயிரத்து நானூற்று நாற்பத் திற்றியாண்டு" இருந்தது என்றும் அதன் பின் கடைச்சங்கம் நிறுவப்பட்டதென்ப. இது ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையல்ல வாதலின் இக்கூற்றை ஐயம் திரிபற சர்ச்சை செய்ய முற்பட்டோமில்லை. கடைச்சங்க நூற்களாய் கருதப்படும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பன வற்றிற்கு அநேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முருகனைப்பற்றிக் குறிப்பு இருக்கிறது என்பதற்காக மட்டும் இங்கு இறையனுர் அகப்பொருள் உரை மேற்கோளாகக் காட்டப்பட்டது.

இனிக் கடைச்சங்க நூல்கள் என்று தீர்மானிக்கப்பட்ட நூல்களில் மிகப் பழமையானது தொல் காப்பியம். இது இடைச்சங்க நூலாகவும் கருதப்படுகின்றது. இதில் ஐந்திணை யென்று நிலத்தை ஐவகையாகப் பிரித்து மலை, மலை சார்ந்த நிலமாகின்ற குறிஞ்சி நிலத்துக்கு "சேயோன் மேய மைவரை உலகம்" என்று காட்டப்பட்டிருக்கின்றது. தற்கால மேனுட்டுத் தொல்கலை ஆராய்ச்சியாளர் மலைகளிலேயே முதன் முதலில் மனித வர்க்கம் உண்டாகியது என்கின்றனர். இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் உண்டாதல் வழக்காதலின், இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் "சேயோன்" என்று முருகன் குறிக்கப் படுவதால் அதற்கு முன்பே இலக்கியத்தில் அவன் புகழ் பரப்பப்பட்டிருக்க வேண்டும்.

இனி எட்டுத்தொகை என்ற தொகுதியில் உள்ள அகநானூறு, புறநானூறு, கலித்தொகை குறுந்தொகை, ஐங்குறுநூறு இவற்றிலும் முருகனைப்பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. சிறப்பாக பரிபாடலில் முருகனைப் பற்றிய பாடல்கள் எட்டு இருக்கின்றன. குறுந்தொகையின் துவக்கத்தில் பாரதம் பாடிய பெருந்தேவனுர் முருகனையே காப்புச் செய்யுளில் வைத்துப் பாடியுள்ளார். கலித்தொகையில் மருதக் கலியில் "ஆலமர் செல்வன் அணிசால் மகன் விழா" கூறப்படுகின்றது.

யாகசாலை பூஜை

மூலஸ்தான கோபுர கும்பாபிஷேகம்

தர்மகர்த்தர் குழு



திரு. S. V. வேதமூர்த்தி முதலியார்

திரு. S. சங்கிலி, M. L. A.



திரு. V. K. R. சுப்பிரமணிய ஆதித்தன்

திரு. A. சின்ன அழகிரிசாமி நாயுடு

ஆகவே மக்களுக்கு இறையறிவு தோன்றிய காலத்திலேயே முருகனும் அவன் வழிபாடும் செந்தமிழில் பாலொடு தேன்போல கலந்துவிட்டன என்னலாம். சங்கம் மருவிய ஐம்பெருங் காப்பியங்களிலும் முருகனைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. அமண முனிவராகிய திருத்தக்கத் தேவர் எழுதிய ஜீவக சிந்தாமணியில் ஜீவகனது வீரத்தை, முருகன் கிரவுஞ்ச மலையைத் துளைத்தமைக்கு உவமித்துப பேசுகின்றார் என்றால் புறச்சமய ஆசிரியர் கற்பனையிலும் முருகன் எவ்வளவு பதிந்துவிட்டான் என்பதை ஓரளவு முடிவு கட்டலாமன்றோ? இது போன்று ஜீவக சிந்தாமணியில் கோவிந்தையா ரிலம்பகத்தில் ஜீவகனை கோவிந்தையை மணம் செய்து கொள்ளுமாறு கூறும்போது "கொழுங் கயற்கண் வள்ளி நலன் நுகர்ந்தானென்றே நறுந்தார் முருகன்" என்று கூறி குலத்தைப் பற்றி ஆலோசிக்க வேண்டாம் என்று கூறுகிறார். இதுவேயன்றி ஜீவக சிந்தாமணியில் பல இடங்களில் முருகனைப் பற்றிக் கூறியுள்ளார். பதுமையா ரிலம்பகத்தில் பதுமையை நாகம் தீண்ட ஜீவகன் அவளை உயிர்ப்பித்தான். அவளும் அவனும் ஒருவரை ஒருவர் கண்ணுற்றனர். அப்போது பதுமையார் ஜீவகனைக் கண்டு காமுற்றாள். அதைக் கூற வந்த கவி,

"நோக்கினுள் நிறையும் நாணு மாமையுங் கவினும் நொய்திற்
போக்கினுள் வளையும் போர்த்தாள் பொன்னிறப் பசலை மூழ்கிற்
றூக்கினுள் அநங்க னம்புத் தூணியை அமருள் ஆனது
ஒக்கிய முருகன் வைவேல் ஓரிரண் டனைய கண்ணாள்"

இவைகளேயன்றி நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படைக்கு ஓர் தனிச் சிறப்புண்டு. அது சங்க நூலாகப் பத்துப் பாட்டில் ஒன்றாகவும் சமய நூலாக பதினோராம் திருமுறையில் ஒன்றாகவும் இரண்டு இடத்திலும் எடுத்துக் கையாளப் படுகின்றது. ஆதிகாலம் தொட்டே தமிழர் முருகனே முதற் கடவுள் என்ற கொள்கையை உடையவராய் இருந்தனர். நமக்குக் கிடைக்கும் நூல்கள் தொல்காப்பியமும், சங்க நூல்களும், சங்கம் மருவிய பெருங்காப்பியங்களுமேயாகும். இவற்றை ஆராய்ந்தால் முருகன் வழிபாடு தொடக்கநிலை என்று சொல்லாமல், முதிர்ந்து வளம்பட்ட நிலையில் இருந்தது என்னலாம். சிலப்பதிகாரத்தில் முருகனுக்குக் கோவில் (கோட்டம்) இருந்ததாகவும் தெரிகின்றது. முருகன் கோவிலேயன்றி "வேற் கோட்டம்" என்றும் குறிக்கப்படுவதால் வேலை மட்டும் வைத்து முருகனை வழிபட்டார்கள் என்றும் காணக் கிடக்கின்றது. முருகனைப் பற்றிய புகழ்ப் பாக்களும் சிலப்பதிகாரத்தில் பல உள.

மனிதவர்க்கம் பூமியில் தோன்றிய உடனே மனிதனுக்கு இறையறிவு தோன்றியிருக்க முடியாது. அவனும் மற்ற விலங்கினங்கள் போன்று திரிந்து கொண்டிருந்தான். அநேக ஆண்டுகள் கழிந்தே வளம்

பெற்ற ஓர் நாகரீகத்தை அடைந்திருத்தல் கூடும். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அக்காலத்து மக்களின் வாழ்க்கைத் தரம் நல்ல சீரும், சிறப்பும், ஒழுக்கமும் நிறைந்த வாழ்க்கையாக இருந்தது என்று கூறலாம்.

முன்கூறியபடி பரிபாடலிலும் திருமுருகாற்றுப்படையிலும் முருகனின் சிறப்பு விரிவாகக் கூறப் படுகின்றது. தொல்காப்பியம் முருகனைக் குறிஞ்சிக் கடவுள் என்று கூறினாலும், நக்கீரர் தமது திருப்பரங்கிரிப் பதிகத்தில் கடல், கடல் சார்ந்த இடம்; வயல், வயல் சார்ந்த இடம்; காடு, காடு சார்ந்த இடம்; மலை, மலை சார்ந்த இடம் — இந் நான்கினையும் நயம்படப் பாடி எங்கும் முருகனையே காண்கின்றார். தாம் வணங்கிய கடவுளுக்கு ' முருகன் ' என்று பெயரிட்டதாலேயே அக்காலத்தவரின் கூர்த்த மதி புலனாகிறது. 'முருகு' என்ற தனித் தமிழ்ச் சொல் அழகு, மணம், இளமை, கடவுட்டன்மை என்ற பல பொருள் கொண்ட ஒரு சொல். அவற்றை யுடையவன் முருகன். இத்தன்மைகள் எச்சமயத்தாராலும், தத்தம் தெய்வத்துக்கு ஏற்றிப் பரவிப் புகழும் தன்மைகள் அல்லவா? எச்சமயத்தவரும் தமது தெய்வத்துக்கு இந்நான்கு தன்மைகள் இருக்காது என்று கூற முற்படுவார்களா? திருப்பரங்கிரிப் பதிகத்தில் நக்கீரர் பலர் புகழ் ஞாயிறு கடலில் தோன்றுதலிலும், தண்ணருங் கானத்து இருள்படப் பொதுளிய பராரை மராத்தும், வானுயர் நிவந்த சேணுயர் வெற்பிலும், இருஞ்சேற் றகல் வயல்களிலும், கண்போல் மலர்ந்த காமற் சுனைமலரினும் இம் முருகைக் கண்டார். இயற்கையே இறைவனின் உடல். அவன் இயற்கையின் உயிர். இவ்வாறு இயற்கைக் காட்சிகளில் கடவுளைக் கண்டவர் தமிழர் என்பது நன்கு புலப்படுகின்றது. சம்பந்தப் பெருமான் பாடிய தேவாரப் பதிகங்களில் இயற்கையழகு எவ்வளவு நயம்படப் பாராட்டப்பட்டிருக்கின்றது என்பதைச் சிவநேயச் செல்வர் யாவரும் அறிவர். பழந்தமிழர் இயற்கையில் கடவுளைக் கண்டதோடு மட்டுமே யல்லாமல், தம் வாழ்க்கையையும் இயற்கையோடு சிவணி வாழ்ந்தனர் என்பதுவும் தொல்காப்பியத்தில் அறியலாம். பரிபாடல் பாட்டுகளிலும் இவ்வாறு இயற்கை அழகில் கடுபட்டுக் கடவுளை அனுபவித்தனர் என்பதைக் காணலாம்.

முருகனையடைய வேண்டுமானால் ' சேவடி படரும் செம்மல் உள்ளமும், ' ' நலம்புரிக் கொள்கையும்', 'புலம் பிரிந்து உரையும் செலவும்', 'நன்னர் நெஞ்சமும்' தேவை என்பதையும் நக்கீரர் காட்டுகின்றார். இச் சாதனைகளே பிற்காலத்தவரால் "சாதன சதுட்டயம்" என்று வகுக்கப்பட்டது. விரிக்கிற் பெருகும். அம்மட்டேயன்றி முருகனுக்கு உருவ வழிபாடும் அமைத்திருந்தனர் என்பது திருச்சீரலைவாய்ப் பதிகத்தில் தெரிகின்றது. ஆறுமுகமும் பன்னிரு கைகளும் உடையவனாய், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் என்ற ஐந்தொழில்களையும் செய்வதோடு ஐந்தொழிற் கப்பாலாய் அருட்சக்தியோடு இருக்கும் நிலையையும் புலவர் காட்டியுள்ளார். இவ் வாறு முகங்களும் எத்தகையவை என்பதற்கு

"தாவுஇல் கொள்கைதம் தொழில் முடிமார்
மனநேர்பு எழுதரு வாணிற முகனே"

என்று கூறுமாற்ருன், குற்றமற்ற கொள்கைகளையுடைய சாதகர்களால் அனுபூதியாகக் காணப்பட்டவை என்பதை அழகாகக் கூறி விடுகின்ருர்.

இனி அவனே முழுமுதற் கடவுள் என்பதை திருவாவினன்குடிப் பதிகத்தில் திருமாலும், சிவனும், இந்திரனும், முப்பத்து முக்கோடி தேவர்களும், பதினெண் கணங்களும் தத்தம் தொழிலைச் செய்ய முருகன் அருளை நாடி ஆவினன்குடி வருகின்றனர், அவன் தன்னை விட்டு என்றும் பிரியாத அருள் சக்தியோடு அருவமாய் இருக்கின்ருன், என்ற தத்துவமும் கூறப்படுகின்றது. இயற்கையில் அருவுருவாய் நின்று திருப் பரங்கிரியில் காட்சி யளிக்கின்ருன். உருவமாய் நின்று திருச்சீரலைவாயிலில் பஞ்ச க்ருத்யங்களையும் செய்கின் ருன். ஆவினன்குடியில் அருவநிலையில் அருட்சக்தியோடு அமர்ந்து மற்ற தேவர்கள் செய்யும் தொழிலுக்கு ஆதரவு கொடுக்கின்ருன். இதுவே அவன் தொல்லுரு. மணிவாசகப் பெருந்தகையார் கூறுவது போல:—

"தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!" என்று

நக்கீரர் காலத்தில் மந்த்ர வழிபாடும் இருந்தது என்பதை திருவேரகப் பதிகத்தில் பார்க்கின்ரோம். ஆனல் இம் மந்த்ர உபாஸனையை அக்காலத்தில் அந்தணர்களே செய்தார்கள் என்று திருவேரகப் பதிகத்தில் காண்கின்ரோம்.

இந் நான்கு நிலைகளோடு நிற்காமல் மலையில் வாழ் குறவர் வழிபாடும் குன்றுதோருடலிலும் பழமுதிர் சோலையிலும் கூறப்படுகின்றது. உயிர்கள் ஆன்ம பரிபக்குவத்தில் வெவ்வேறு நிலையில் இருப்பன. அது முந்திய வினையின் பயனல் ஆவது. எந்த நிலையில் இருந்தாலும் முருகன் அந் நிலையில் நின்று காட்சியளிக்கின்ருன். அதிலும் குன்றுதோருடலில் அவன் குறவரோடு ஒன்றி அவர்கள் வழிபாட்டில் ஈடுபட்டு அவர்களோடு அவனும் ஒருவனய்ச் சித்தரிக்கப் பட்டிருக்கும் அழகு சொல்லொண்ணுததோர் உணர்ச்சி.

இனி ஆர்வலர் எவரும் எங்கெங்கும் எந்த எந்த நிலையில் வழிபடுகிருர்களோ அங்கெல்லாம் முருகன் வந்து அருள் பாலிப்பான். அவர்கள் முருகனுடைய சரணுவிந்தங்களையே அடைய விருப்ப முடைய " நசையினராயினும்," தாபத்ரயங்களால் பீடிக்கப்பட்டு அல்லல்களைத் தவிர்த்துக் கொள்ள வழிபடும்

" அலர்ந்தோராயினும், " இம்மைப் பயனுகிய மண், பெண், பொன், முதலிய ஏடனைகளை விரும்பி வழிபடும் " பரிசிலராயினும் " இம் மூவகை அடியார்கட்கும் வேண்டியதை வேண்டியபடி அருளும் பரம கருணமூர்த்தி என்று நக்கீரர் கூறுகின்ருர்.

பிற்காலத்திய சமயநூல் பலவற்றிலும் முருகன் குறிக்கப்படுகின்ருன். விநாயகருக்குக் குறிப்பே யில்லாத திருவாசகத்தில் " நல்வேலன் தாதை " என்று இறைவனை மணிவாசகர் அழைக்கின்ருர். திருமுறைகள் மட்டுமேயன்றி முருகன் மீது இருக்கும் புகழ்ப் பாக்கள் போல் வேறு எந்தத் தெய்வ முகூர்த்தத் திற்கும் இல்லை யென்னலாம். பிற்காலத்திலே தோன்றிய அருணகிரியாரின் நூல்கள் முருகானந்த அனுப வத்தைப் புகட்ட வல்ல அருட்பாசுரங்கள். இராமலிங்க அடிகள், சுப்பிரமணிய பாரதியார் போன்ற சமீப காலக் கவிஞர்களும் பாடியுள்ளனர்.

ஆகவே முருகன் ஓர் ஆதியும் அந்தமும் இல்லாப் பரம் பொருள். உயிர்கள் மீது கொண்ட கருணையினல் உருவங்கொண்டு கல் தோன்றி மண் தோன்ருக் காலம் முதல் இந்நாள் வரையில் தமிழர் உள்ளத்தில் " குஹப்ரம்மமாய் " அமர்ந்து ஆட்சி புரிகின்ருன்.

அருவமு முருவமாகி யநாதியாய்ப் பலவா யொன்ருய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனி யாகிக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய

— கந்த புராணம்

உ

இடும்பன் கோவில்

(ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை, இலஞ்சி)

முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்று திருச்செந்தூர்த் திருப்பதி. அது மிக முதன்மையான பதியுங்கூட. அங்கு முருகவேள் கடற்கரை யோரத்தில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கிறார். எல்லா முருகன் ஆலயங்களிலும் இடம் பெற்றிருப்பவரும், அவருடைய முற்றடியாருள் ஒருவருமான இடும்பனுக்கு, செந்திலம்பதியில் ஒரு ஆலயம் இதுவரை இல்லாதது ஒரு குறையாக இருந்தது. இந்தக் குறைபாடு இப்போது நீக்கப்படுவதைக் கண்டு அடியார்கள் உள்ளம் மகிழுமென்பதற்கு ஐயமில்லை. இந்த நிகழ்ச்சியை யொட்டி இடும்பன் வரலாற்றையும், தத்துவத்தையும் அடியார்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, இக்கட்டுரை எழுதலானேன். "ஆலயத்தின் உட்பொருள் விளக்கம்" என்ற நூலின் ஆசிரியர் உயர்திருவாளர் A. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் எனக்குக் கொடுத்த குறிப்பு மிகவும் உதவிற்று.

உலகம் உய்யும் பொருட்டு ஒரு காலத்தில் அம்மையும் அப்பருமாகிய பரமசிவனும் பார்வதி தேவியாரும் திருமணஞ் செய்யத் திருவுளங் கொண்டார்கள். அந்த வைபத்தைக் காண, எண்ணிறந்த தேவ கணங்களும், பூத கணங்களும் மனிதரும் பிறரும் வடக்கே இமயத்தில் வந்து கூடினார்கள். அது காரணமாக பூமியானது வடதலை தாழ்ந்து, தென்தலை உயர்ந்தது. கலியாணக் கூட்டத்தில் மிகுந்த பரபரப்பும் பயமும் ஏற்பட்டன. உடனே சிவபெருமான் அகத்தியரை அருகிலழைத்து, 'நீ ஏழு கடலையும் உண்டமையால் கொஞ்சம் பாரம் பொறுத்தவன். ஆகவே நீ தெற்கே சென்று "பூமியை சமன் செய்வாயாக" என்று கட்டளையிட்டருளினார். அது கண்டு அஞ்சிய அகத்தியனார் "பல யுகங்களாக இந்தத் திருமணத்தைக் காணத் தவஞ்செய்து கொண்டிருந்த என்னை இப்போது வெளியே அனுப்புவது முறையாகுமா?" என்று முறையிட்டனர். அப்போது இறைவன் அகத்தியர்க்கு தெற்கே பொதியமலைச் சாரலில் தனது திருமணக் காட்சியை அருளிச் செய்வதாகக் கூறி, அங்கிருந்த இரண்டு குன்றுகளைக் காட்டி, இமயத்தின் ஞாபகார்த்தமாக வேண்டுமாயின் அவற்றையும் கொண்டு செல்லும்படி விடை கொடுத்தனர். இந்த இரு குன்றுகளும் சிவகிரி, சக்திகிரி என்னப்படுவன.

அகத்தியர் தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தனர். விந்தியகிரியின் அடிவாரத்திலுள்ள தண்டகாரணியத்திருந்த அரக்கர் எல்லோரும் கெட்டொழிந்து போயிருந்த காலம் அது. அங்கு அரக்கர் குரவருள்

ஒருவனுயிருந்த இடும்பன், அரக்கர்களின் சீரழிவைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு, வனத்தில் திரிந்து வருகையில், அகத்தியர் வருகையைக் கண்டான். உடனே அவர் பாதத்தில் விழுந்து பணிந்து, தன் வரலாறு முழுவதையுங் கூறி, தன்னை ஆட்கொள்ளும்படி பிரார்த்தித்தான். அகத்தியரும் அவனுடைய பரிபாகத்தைக் கண்டு, அவனுக்கு உபதேசம் செய்து தமது சிஷ்யனுக ஏற்றுக் கொண்டனர் குருவிற்குப் பாத காணிக்கையாக இமயத்திலிருந்த இரு குன்றுகளையும் தெற்கே தன்னிடம் கொண்டு வந்து சேர்க்கும்படி உத்தரவிட்டனர்.

இடும்பன் இமயம் சென்று காட்டு மூங்கிலொன்றை வெட்டி, அதன் அடிப்பாகத்தில் ஏழு கணுவுடைய ஒரு பாகத்தை முறித்து அதன் இரு நுனிகளிலும் இரு குன்றுகளையும் கட்டித் தூக்கிக்கொண்டு தெற்கு நோக்கி வந்தான். வரும் வழியில் பழநி வந்து சேர்ந்தபோது, இளைப்பாற வேண்டிச் சுமையைக் கீழே யிறக்கி வைத்துவிட்டுச் சற்று உறங்கினுன். இடும்பன் உறங்கி விழித்துச் சுமையை எடுக்க முயன்றபோது அது நகரவில்லை. தன் முழு பலத்தையும் கொண்டு முயன்றும், குன்றுகளிரண்டும் அசையாமை கண்டு வெஞ்சினத்தோடு — அகந்தையோடு — மேலே ஏறிட்டு நோக்கினுன். அங்கே சிவகிரியின் மேல் பாலமுருகன், இளஞ் சூரியன் போன்று புன்முறுவலோடு நிற்பதைக் கண்டான். அகந்தை நீக்கி ஆனந்தப்பேற்றை அடைந்தான். அவன் சுமந்து வந்த காட்டுக் கம்பும் (காவடியும்) குன்றுகளுமே இன்றையக் காவடிகளுக்கு மூலம். அது முருகன் அருள் பெறுவோர்க்கு முக்கியமான சாதனமாயிற்று.

"வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்பது அருள் வாக்கு. ஆகவே எந்த இறை சாதனமும் இகலோக வாழ்க்கைக்கும் பரலோக வாழ்க்கைக்கும் பயன்படுத்தப்படலாம் என்று விளங்குகின்றது. 'இடும்பு' என்னும் சொல், அகந்தை, துன்பம், தேக உபத்திரவம் எனப் பொருள்படும். அகத்தியர் உபதேசத்தால் இடும்பன் முதலில் மனத் துன்பமும் தேக உபத்திரவமும் நீங்கப் பெற்றிருத்தல் வேண்டும். பின்னர்க் காவடி சுமந்து, முருகனைத் தெரிசித்து, அகந்தையும் நீங்கிப் பேரின்பம் பெற்றிருத்தல் வேண்டும். ஆனல் இன்றையக் காவடிகள் யாவும் உடல் நலம், மன நலங் கருதியும் கிரகபீடைகள் நீங்கவும் எடுக்கப்படுகின்றனவேயன்றி, பேரின்பப் பேற்றிற்கும் அவை உதவும் என்ற எண்ணம் அறவே ஒழிந்து போயிற்று. முருகன் தலங்களை யெல்லாம் சுற்றி வந்தவர் அருணகிரிநாதர். அவ்விடங்களில் பல்லாயிரக்கணக்கான காவடிகளை அவர் பார்த்திருத்தல் கூடும். அவை யாவும் வெறும் அன்னக் காவடிகளாகவே இருப்பதைக் கண்டுதான் மனம் நொந்து,

> 'புத்தியை வாங்கி நின்பாதாம் புயத்தில் வைத்து அன்பாய்
> முத்தியை வாங்க அறிகின்றிலேன்'—

என்று பாடினரோ என்னவோ?

பாதாம் புயம் — காவடி — காத்தருளும் சேவடி

இனி, அகத்தியர் சித்த புருஷன். யோக நெறியில் பூரண சித்தியும், அதன் மூலம் முத்தியும் பெற்ற மகான். அவர் இடும்பனுக்கு உபதேசித்தது காவடி மந்திரம். மூங்கில் முதுகுத்தண்டம். மூங்கில் நடுவே குழலாக உள்ளது. முதுகுத் தண்டத்தின் நடுக் குழலில் ஓடுவது சுழுமுன நாடி. முதுகுத் தண்டத்தின் அடியிலுள்ளது மூலாதாரமும், அங்கு சுருண்டு கிடக்கும் குண்டலினி சக்தியும். அதுவே பராசக்தி உறையும் சக்திகிரி. முதுகுத் தண்டத்தின் மேல் நுனியிலுள்ளது புருவ நடுவிலுள்ள ஆக்ஞா சக்கிரம். அது சிவ ஸ்தானம்—சிவகிரி. யோகாப்பியாசத்தால் குண்டலினி மேலேறிப் புருவம் அடையும்போது நடைபெறுவது அம்மையப்பர் திருமணம். அதன் பின்னர் அடையப்படும் பேரின்பப் பேறு தலே உச்சியிலுள்ள சகஸ்ராரம் என்னும் கயிலேயில் நடைபெறுவது.

நமது ஆலயங்களில் கொடிமரமே மூங்கில் தண்டம். அதன் அடியில் பலி பீடம் சக்திகிரி. சிவ லிங்கம் உச்சியிலுள்ள சிவகிரி. அதனுலேயே சிவலிங்கத்திற்கும் பலிபீடத்திற்கும் குறுக்காகக் கடக்கக் கூடாது என்பர். அது முத்தி சாதனத்திற்கு இடையூருக முடியும். ஆலயங்கள் அந்த யோக முறைகளேயே காட்டுவன.

ஆகவே முருகன் ஆலயங்களில் வழிபடுவோர் இடும்பனேத் தரிசிக்கும் போது, வெறும் அன்னக் காவடிகளாகத் தங்கிவிடாமல், காவடியின் உயர் பொருளேயும், சாதனே முறைகளேயும் அறிந்து முருகன் திருவடியாகிய பேரின்ப நிலேயை அடைவாராக.

திருச்செந்நூரில் இன்று ஸ்தாபிக்கப்பெறும் இடும்பனும், இதை அடியார்களுக்கு இடைவிடாது அறிவுறுத்திக் கொண்டிருப்பாராக!

வாழ வைப்போன்

அ. காமாட்சி குமாரசாமி, M. A.
தமிழ்ப் பேராசிரியர், சேலம் கல்லூரி.

பிறவா இறவாப் பெம்மானுய முருகன் போலல்லாது மக்களனைவரும் தோன்றி மறைகின்றவர்களே யாவர். பிறப்பும் நம் கையிலில்லை; அதேபோன்று இறப்பும் நம் வசமில்லை. இவ்விரண்டிற்குமிடையேயுள்ள 'வாழ்தல்' நம் கையிலுள்ளது. பிறந்த உயிர்களத்தனையும் வாழத்தான் விரும்புகின்றன. சின்னஞ்சிறு குழந்தையும், தோளினின்றும் சற்று நெகிழ விட்டாலும் பற்றிக்கொள்வது இயல்பாயெழும் இவ்வாழ்வுணர்ச்சியேயாகும். ஏனைய உயிர்களும் பச்சிளம் பருவத்தே தாய்மையின் பாதுகாவலைப் பற்றியே வாழும். இவ்வாறு வாழ விரும்பும் உயிரினங்கள் இன்பமாய் வாழவே விரும்புகின்றன. இதில் கருத்து வேறுபாடு இருக்கவே முடியாது. எனினும் மக்களிடையே "எது இன்ப வாழ்வு?" என்ற கேள்வி எழும்போது தான் எண்ணிறந்த கருத்து வேறுபாடுகள் எழுகின்றன.

வயிறார உண்டு, வாயாரப் பேசி, உளமார உறங்குவதே இன்ப வாழ்வு என எண்ணுகின்றனர் பெரும்பாலோர். இவர்களை விடச் சற்றுப் பண்பால் உயர்ந்தவர்கள், ஊண், உடை, உறையுள் ஆகியவற்றுடன், அறிவு, கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை எய்துதலே இன்பமெனக் கருதுவர். இவைகளத்தனையும் நிலைத்த இன்பந் தாரா; இறையருள் ஒன்றே ஒப்புயர்வற்ற இன்பந் தருவது என்று நினைக்கும் ஒரு சிலரும் நம் நாட்டில் என்றென்றும் உண்டு. ஏனைய இன்பத்தினின்றும் இதைப் பிரித்துக் காட்டவே இவ்விறையின்பத்தைப் "பேரின்பம்" எனப் பிரித்துக் காட்டினர். எனவே, பிறந்துவிட்ட நாம் இறந்துவிடு முன்னர் உயர்ந்த வாழ்வையே வாழ்தல் வேண்டும்.

*"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"*

என்று வான்வரை உயர்த்தினர் வான்புகழ் வள்ளுவப் பெருந்தகையும்.

உலகமோ மிகமிகப் பெரிது. அதனிடத்து வாழும் உயிரோ மிகமிகச் சிறிது. இந்நிலையில் எங்ஙனம் வாழ்வது எளிய உயிர் என ஏங்கினர் பெரியோர்.

"இருநில மீதில் எளியனும் வாழ எனதுமுன் ஓடி வரவேணும்"

எனப் பாடுவர் அருணகிரியார்.

சான்ருேர் காட்டும் உயர்வாழ்வினை அரிய அடைமொழிகள் கொடுத்தழைப்பது அடியார் மரபு. "பெருபுவியி லுயர்வரிய வாழ்வு", "பரகருணைப் பெருவாழ்வு", "பதிஞான வாழ்வு" என்றெல்லாம் புகழ்வார் அருணகிரிநாதர். இத்தகையப் பெருவாழ்வினைப் பெறுதற்குத் துணைபுரிபவை அவ்விறைவனது திருவடிகளே யாகும் என்பதையும் குறிக்க

"தாளிணைக ளூற்று மேவியப தத்தில்
வாழ்வொடு சிறக்க அருள்வாயே"

என்று முருகனிடம் வேண்டுவார்.

இறைவனது இணையடிகளை உறுதற்குரிய வழிகளை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நான்காய் வகுத்துக் காட்டுவர் பெரியோர். இவற்றுளெல்லாம் அடங்குவதும், எளியதும் அவன் மீது மனமுருகப் பாடுவதுதான். இதனை எவரும் எவ்விடத்தும், எப்போதும் எளிதிற் செய்யலாம். தமிழ் நாட்டின் தனிப்பெருங் கடவுளாய முருகப்பெருமானை வழுத்துதற்கு முத்தமிழே முழுமுதற் கருவியா யமைவது. அவன் புகழ் பாடுதற்கு இயற்றப்பட்ட எண்ணிறந்த இயற்றமிழ்ப் பாடல்கள் நந்தம் மொழியாகிய செந்தமிழிலே நிறைய உண்டு. சந்தம் மிக்க திருப்புகழ் போன்றவற்றை இசையோடு பாடுங்கால் இசைத் தமிழ் இனிக்கின்றது. பாடிய வண்ணம் காவடியாட்டம் போன்று மெய்ம்மறந்து ஆடுங்கால் மூன்ருந் தமிழும் முற்றுப்பெற முத்தமிழ் முழக்கம் முருகனுக்கு ஒத்ததாகி விடுகின்றது.

தமிழ் வேறு, முருகன் வேறு என்ளுது "முருகா! முத்தமிழ் வேளே!" என்றும் "குறு முனிவன் ஏத்துமுத் தமிழோனே!" என்றும் அழைப்பர் அருணகிரிநாதர். விநாயகப் பெருமான் தனது கொம்பொசித்துப் பாரதத்தை இமயமலைச் சாரலிலே எழுதினர் எனச் சமய இலக்கியங்கள் கூறும். ஆனல் அன்று அங்கு எழுதியது பாரதமல்ல, முத்தமிழே என முழங்குவர் முத்தமிழ் வித்தகரான அருணகிரிநாதர்.

"முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே!"

என விநாயகர் வணக்கம் பாடினர். அத்துடன் நின்றதா அவரது தமிழ்ப் பற்று! மேலும் ஒரு படி சென்று தமிழ் மொழி படைக்கப்பட்டதே முருகனை வாழ்த்தி வணங்கத்தான் என்பர்.

"அருணதள பாதபத்மம் அனுதினமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த - மயில்வீரா"

என்று பாடுவர். இத்துணைத் தமிழ்ப் பற்றுடைய அருணகிரியார் இத்துணை வடசொற்களைப் பயன் படுத்துகின்றனரே என்ற ஐயம் எழலாம். எனினும் வடமொழி வெறுப்பும், தனித் தமிழ்மொழி விருப்பும் தோன்ருக் காலம் அவர் வாழ்ந்த காலம் என விடுக்கவேண்டும்.

போற்றப் பயன்படும் தமிழ்மொழி தூற்றவும் பயன்படுமல்லவா? அடுக்கு மொழியொடு மிடுக்கு நடையில் இறைவனை வைகின்றவர்கள் நாத்திகர்தாம் என்று நினைத்தல் கூடாது. மனம் நொந்த நிலையில் மெய்யடியாரும் இறைவனை வைவதுண்டு. வைய உரிமையுமுண்டு.

"பாழ்வாழ்வு எனுமிப் படுமா யையிலே
வீழ்வாய் எனஎன் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதாம் உளவோ
வாழ்வாய்! இனிநீ! மயில்வா கனனே"

என்று கந்தர் அநுபூதி பெற்றுப் பாடிய கந்தரநுபூதியிலே அருணகிரியார் முருகனை வைகின்றனர். தாழ்வான நிலையில் என்னை வீழ்த்திவிட்ட நீ மட்டும் வாழ்வாயா? என்பது போன்றும், என்னைப் பாழ் படுத்திய நீ வாழ்ந்துபோ! என்பது போன்றும் வைகின்றார். சிவனடியாருள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனாரும் கண்ணிழந்து கதறிய நிலையில் "வாழ்ந்து போதீரே" என்று பத்திடங்களில் கூறிப் பதிகம் பாடினர்.

பச்சிளங் குழந்தை இனிய மழலையால் தம்மை வைதல் பெற்றோர்க்கும் பெருமகிழ்ச்சி யளிப்பது போல், முத்தமிழால் வைதல் முருகனுக்கும் இனிக்கும் போலும். எனவேதான் அருணகிரிநாதரும் இதனை

"மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையும் அங்கு வாழவைப்போன்"

என்ற அலங்கார அடிகளில் அணிபடக் கூறினர்.

தன்னைப் போற்றுவாரும் தூற்றுவாரும் ஆகிய உயிர்களத்தனையும் இன்பமாய் வாழ எல்லா நலங்களையும், வளங்களையும் அவர்தம் வாழ்க்கையில் கூட்டிவைப்பான் கருணையங் கடவுளாய முருகப் பெருமான் என்பதை "வாழ வைப்போன்" என்ற அரிய தொடர் அழகுற விளக்கும். எனவே தான் அருணகிரிநாதர் கடைக்கணியல் வகுப்பில் "பெருத்த பாருளீர்!" என்று நம்மைப் பார்த்து அறைகூவி

"மயிலையும் அவன்திருக்கை அயிலையும் அவன்கடைக்கண்
இயலையும் நினைந்திருக்க வாருமே!"

என அழைத்து, அங்ஙனம் வந்து வழுத்தினால்

"அலைகடல் வளைந்துடுத்த எழுபுவி புரந்திருக்கும்
அரசென நிரந்தரிக்க வாழலாம்"

என்றும் உறுதி கூறுவர்.

அலைகடல் சூழ்ந்த இவ்வுலக வாழ்க்கையும் இடையருது துன்ப அலைகள் மோதிக்கொண்டே யிருக்கும் அமைதியற்ற வாழ்க்கைதான். ஆனாலும் அவ்வலைகளிடையேயும் அமைதி யளிப்பது அவனது திருவருள்தான். ஆறுமுகப் பரமனது அறு படைவீடுகளுள் ஒரு படைவீடான திருச்செந்திலில், அமைதியே வடிவான அருட்கடலின் ஆலயத்தின் மதிற் சுவர்மீது அலைகள் ஓயாது மோதிக்கொண்டே இருக்கின்றன. ஆனால் ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னர் — அன்றிருந்தது போன்றே இன்றும் இலங்குகின்றது அவ்வாலயம். வாழ்க்கையில் துன்ப அலை வாயிடத்தும், திருவும் சீரும் கொடுப்பது என்ற பொருளில் " திருச்சீரலைவாய் " என்ற பெயரும் ஏற்றது அப்பதி. செந்திலம்பதியின் செம்மைதான் என்னே !

வாழ்க! நம்மை யெல்லாம் வாழ வைப்போன் !

"உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ் வே"

உ

திருச்செந்திலாண்டவன் துணை

கந்தபுராண உண்மை விளக்கம் (தத்துவம்)

சித்தாந்த சைவப் புராணிகரும், கந்தபுராண அருள்மணியுமாகிய

ச. முத்துக்குமாரசாமி பிள்ளை

'தமிழகம்' குலசேகரன்பட்டினம்.

கந்த புராணம் என்பது "கந்தக் கடவுளைப் பற்றிக் கூறும் பழமையான வரலாறு." கந்தம் என்றால் மணம் என்று பொருள்படும். மணம் பூவினில் உண்டு; பூ மொட்டாக இருக்கும்பொழுது மணம் வெளிப்படுவதில்லை. மொட்டு விரிந்து மலரத் தொடங்கியவுடன், அதுகாறும் வெளிப்படாதிருந்த மணம் அஃதாவது கந்தம் வெளிப்பட்டு, எங்கும் பரந்து வியாபித்துத் தன் வியாபகத்துள், பூவின் வடிவத்தை அடக்கிக் கொள்கிறது. இதனைப்போல், இறைவன் உயிர்தோறும் மறைந்து நின்று, பக்குவமுற்ற உயிர்களினிடம் விளங்கித் தோன்றி, அப் பக்குவமான உயிர்களைத் தன் வியாபகத்துள் நிறுத்துவன்; அதனால் அப் பக்குவமுற்றவர்கள், எங்கும் இறை செயலையே கண்டு, கொண்டு ஒழுகும் சீலர்களாவார்கள். அவர்கள் வாக்கு, கடவுள் வாக்கெனவே போற்றப்படும். நமது சமயாசிரியர்கள் முதலியோர் இந்த நிலையில் நின்று தேவாரம், திருவாசகம் அருளியதால், அந் நூல்களைக் கடவுள் வாக்கெனவே ஆன்றோர் கூறுப. வேதங்களையும் இவ்வாறே சொல்லுவதுண்டு.

"பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது"

என்பது திருமந்திரம். ஆதலால், உயிர்தோறும் இருந்து உயிர்களின் மலத்தை அஃதாவது அறியாமையை அரித்துக்கொண்டே வருதலால் "அரன்" என்றும், உயிராகிய குகைக்குள் இருப்பதால் "குகன்" என்றும், உயிரின் பக்குவங் கண்டு வெளிப்பட்டு "குருவாக" வந்து அருள் புரிதலால் "நம் குரு" என்றும், மலரின் மணம் போறலின் "கந்தன்" என்றும் கடவுளுக்கு இயற் பெயரிட்டு வழங்கினர்.

அக் கடவுளைப் பற்றிய பழய வரலாறு ஆதலால் "கந்த புராணம்" என்ப.

உலகம் தோன்றி அளவில் காலம் கடந்ததனால் மாறுபாடுகள் பல உற்றன. தமிழ் நாடே பழம்பதி என்ப. முதலில் தோன்றிய மொழியும் தமிழ் மொழியே என்ப. சான்றுகள் பல உள. "கந்தன்" பழந்தமிழ்க் கடவுள் என்பது ஆன்றோர் துணிபு. "கொடிநிலை, கந்தழி, வள்ளி" என்ற பெயர்கள் பழந்தமிழ் இலக்கணத் தொல்காப்பியச் சான்று. உயிர்களாகிய பசுக்களைத் தன்னிடம் கட்டிப் போற்றுபவன் என்ற நயம் அமைந்த பொருளும் அறிவுடையோர் கண்டு மகிழ்கின்றனர்.

நன்ருக ஆக்கப்பெற்ற மொழியாகிய வடமொழி என்னும் சமஸ்கிருதத்தில், தமிழ் நூல்களெல்லாமே தமிழ்ச் சான்ருேர்களாலேயே மொழிபெயர்க்கப் பெற்று, வடவர்களுக்கும் மற்றும் உலகினர் யாவர்க்கும் பயன் படும்படி செய்யப் பெற்று, போற்றப்பட்டு வந்தது. பின்னர், தமிழ் நாடுகள் கடற்கோளில் பட்டதாலும், இன்னும் பல இன்னல்களாலும் தமிழ் நூல்கள் பல கடல் வாய்ப்பட்டும், தீ வாய்ப்பட்டும், சிதள் வாய்ப்பட்டும் மறைந்து போயின. "பதினெட்டாம் பெருக்கு" விழாவோடு போயின பல ஏடுகள். "ஏதிலாக் கற்பம் எண்ணில சென்றன" என்று கந்த புராண ஆசிரியரே அவையடக்கத்திற் சொல்லுவது போல மாறுபாடுகள் பல நூற்பொருள்களில் காணப்பட்டன. ஆதலால், வடமொழியிலுள்ள நூல்களை மொழிபெயர்க்கும்போது, கடவுள் அருளினை நாடித் தவமிருந்து, இறைவன் கருணையிற்ருேய்ந்து, கல்வியறிவு ஒழுக்கம் நிறைந்த சான்ருேர் நூல் செய்ய முற்படுவர்.

இந்நூலை அஃதாவது இக் கந்த புராணத்தை மொழி பெயர்த்தவர், காஞ்சி குமரகோட்டத்து எழுந் தருளியுள்ள அறுமுகப் பெருமானை வழிபட்டுப் பூசையாற்றி வந்த ஆதி சைவ மரபினில் வந்த "கச்சியப்ப சிவாசிரியர்" ஆவார். காளத்தியப்ப சிவாசிரியருடைய திருமகனர். வடமொழி, தென்மொழி வல்லுனர். ஒழுக்கம் வாய்ந்தவர். முருகப் பெருமானே கனவிற்ருேன்றி, "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்று அடியெடுத்துக் கொடுத்துப் பாடுக எனப் பாடியது. அரங்கேற்றும் பொழுது, புலவர்கள் நிகழ்த்திய இலக்கணக் குறிப்பிற்கு "வீர சோழியம்" என்ற இலக்கண நூலைத் தானே நேரிற் கொண்டுவந்து, பேரவையிற் காட்டி, மெய்ப்பித்து, ஆசிரியரிடம் கொடுத்து மறைந்தனர்.

இக் கந்த புராணம் தத்துவ உண்மையைத் தெளிவுற விளக்குவது. உலக நீதிக்கு எடுத்துக்காட்டாக அஃதாவது ஆதாரமாகத் "திருக்குறள்" எப்படி அறிவுடை உலகம் கொள்ளுமோ, அதைப்போல உலக வொடுக்கம், தோற்றம் முதலிய தத்துவ உண்மைகளை மெய்ப்பிக்கும் ஆதார நூலாக இக் கந்த புராணத்தை அடிப்படையிற் கொண்டு போற்றுவர் ஆன்ருேர்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற நமது அம்மையினம்மை ஔவைபிராட்டியார் போற்றியதும்,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

என்று நமது செந்நாப் புலவரும் வரையறுத்துக் கூறியவற்றையே, "Science & Literature" (சையன்ஸ் அண்ட் லிட்டரச்சர்) என்று ஆங்கில நூலாராய்ச்சி நுண்புலவர்கள் சொல்லுகின்ருர்கள். ஆதலால், "கந்த புராணத்தை"த் தத்துவ விளக்கு நூல் அஃதாவது "சையன்ஸ்" என்றும் "எண்" என்றும், திருக்குறளை — உலக நீதி நூல் அஃதாவது "லிட்டரச்சர்" என்றும் "எழுத்து" என்றும் மெய்ம்மை யுணர்ந்தோர் கூறுப.

சமயங்கள் பலவற்றுள்ளும் கடவுளை உண்மையிற் கண்ட சமயங்கள் "சைவம்", "வைணவம்" என்ப. "சைவம்" அம்மையப்பரைப் போற்றுவது; "வைணவம்" அம்மையைப் பிரித்து ஆண் வடிவம் கற்பித்து வழிபடுவதாகும். பழங்காலத்தில், தமிழ் மக்களிடையே சைவ, வைணவ என்ற மாறுபாடின்றி, ஒத்த உணர்ச்சியுடன் "சிவபெருமானையே" முழுமுதற் கடவுளாகக் கொண்டு, திருமாலை — ஆண்மைச் சத்தி அஃதாவது "புருஷ சத்தி" என்று சிவபெருமானுக்குரிய சத்தி நான்கனுள் [(1) இறுதி செய்யும் சத்தி (ஐயை) (2) சீற்றமிக்க சத்தி (காளி), (3) இன்பம் நல்கும் சத்தி (உமை), (4) ஆண்மைச் சத்தி (திருமால்)] ஆண்டன்மைக்குரிய சத்தியாகக் கொண்டு வழிபட்டு வந்தனர்.

பிற்காலத்தில் சில காரணங்களால் சைவ வைணவ வேற்றுமை வளரத் தொடங்கிற்று. அவ்வேற்றுமைப் பயிரைக் களையும் பொருட்டும், சைவ-வைணவ ஒற்றுமை வளரும் நோக்குடனும், "கந்த புராணம்" தோன்ற ஏதுவாயிற்று. கந்த புராணம், கச்சியப்ப சிவாசிரியரால் மொழி பெயர்க்கப் பெற்று, அரங்கேற்றிய காலம், சாலிவாகன—சகாப்தம்—எள (700). தமிழ் மக்கள் யாவரும், சைவ-வைணவ இருதிறத்தார்களுமே "முருகன்" வழிபாட்டில் ஈடுபட்டுக் கந்த புராணத்தைப் பெரிதும் பாராட்டிப் பயின்று பயன் எய்தி வந்தனர். வேற்றுமை யுணர்ச்சியும் குன்றத் தொடங்கிற்று. இருப்பினும் உள் வேற்றுமைகளும், பூசல்களும் அங்கங்கு இடையிடையே தலைதூக்கிக் கொண்டே யிருந்தன. அவ் வேற்றுமைப் புயல் சிறிது சிறிதாக வளர்ந்து, ஒரு நூற்றாண்டு கழிந்து தமிழ்ப் பெரும் புலவர் "கம்பர்" என்ற மதக் களிற்றினால் பொழியப் பெற்ற "இராமாயணம்" என்ற காவியத்தால் அவ் வேற்றுமைப் புயல் "சூறாவளிக் காற்றாக" மாறி வைணவ உணர்ச்சியைத் தூண்டி, தமிழ் மக்களிடையே பெரும் பிளவை உண்டு பண்ணியதோடும் மட்டும் நின்று விடவில்லை. சைவர்களையுங் கூடத் தூண்டி விட்டுக் "கந்த புராணம்" வெறும் பொய்யாகக் கட்டப்பட்ட கதை யென்று யாவரும் நாடோடியாகச் சொல்லும் பழக்கத்துக்கு வரும்படியாக, "**இந்தப் புளுகு கந்த புராணத்திலும் இல்லை**" என்று பரவும் படியுமாயிற்று.

ஆனால், உண்மையாக உலகத்தில் அப்பொழுது கந்த புராணத்தைப் பற்றிப் பரவி வந்த ஆன்றோர் மரபுப்படி "காந்தத்தில் இல்லாத பொருள் எந்த நூலிலும் காணமுடியாது என்ற உண்மை தோன்ற "**இந்தப் பொருள் காந்தத்திலும் இல்லை**" என்று வழங்கி வந்தது. அதனைத்தான், திரித்துப் "பொருள்" என்ற இடத்தில் "புளுகு" என்று பெய்து, மக்களிடையே புகுத்தி, வேற்றுமை யுணர்ச்சியை வளர்த்து, நேர் மாறுபடும் பொருளில் பரப்பப்பட்டது என்பது தேற்றம்.

வைணவர்கள் இராமயாணத்தைப் போற்றுவதைப் பற்றி எவரும் குறை கூறுவது இயல்புமன்று; முறையுமன்று. எவர் எவர் எந்த எந்த சமயத்தில் பிறக்கும் ஊழ் பெற்றார்களோ, அவரவர்கள் அந்தந்தச்

சமயங்களையே போற்றவும் வேண்டும், அந்தச் சமய ஒழுக்கத்தைக் கைக்கொண்டு ஒழுக வேண்டுவதும் இன்றியமையாததாகும். அவ்வாறு அச் சமயநெறி வழுவினால், மறுமையில் இறைவனால் தண்டனை கிடைப்பது உறுதியாயினும், இம்மையில் அரசன் அச் சமயநெறியில் வழீஇனாரைத் தண்டிக்க வேண்டுமென்பது வழக்கு; இதனை,

" தத்தம் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகமநூல் நெறி
எத்தண் டமுஞ்செய்க அம்மையில் இம்மையில்
மெய்த்தண் டஞ்செய்வது வேத்தன் கடனே "

என்று திருமூலர் திருமந்திரம் வற்புறுத்தி உணர்ச்சியூட்டுகிறது.

"சைவராயினும் சரி, வைணவராயினும் சரி " முருகன் " வழிபாட்டில் மட்டும் வேற்றுமை இல்லை. " சூர சம்மார " விரதம் எல்லாரும் நோற்பார்கள்; திருச்செந்திலாண்டவன் திருவடியில் வந்து, ஆறு நாட்களும் அமர்ந்து, நோன்பு நோற்று, சூர சம்மார விழாக் காட்சி கண்டு, தகடும் அணிந்து, அவரவர்கள் எண்ணங்களின்படி " செந்திலாண்டவன் " அருளையும் பெறுகின்றார்கள். அவரது " கந்த புராணத்தை " மட்டும் நம்புவதில்லை. ஏது " இராமாயண நூல் " தோற்றமேயாகும். இராமாயணம், கம்பரால் அரங்கேற்றப் பட்ட காலம், சாலிவாகன சகாப்தம் அ௱எ (807) அஃதாவது கந்த புராணம் தோன்றி நூற்றி ஏழு ஆண்டுகட்குப் பின் என்பது தேற்றம். கம்பர் தனது கவிநயத்தாலும், கச்சியப்பரைப் பின்பற்றியே அவரது காவிய முறையினையே கைக்கொண்டு, காண்டங்கள், படலங்கள், பாத்திரங்கள் செய்யுளின் எண்ணிக்கை முதலிய எல்லாவற்றாலும் ஒரு புரட்சி வழியூட்டி, தமிழ் மக்களைத் தனது காவியமாகிய " இராமாயணத்தில் " ஈடுபடச்செய்துவிட்டனர்.

அயோத்தி மன்னன் "தசரத–இராமரைக்" கடவுளாக, அஃதாவது கதாநாயகனைக் கொண்டு, 10,500 செய்யுட்களால், ஆறு காண்டங்களாகப் பெரும்பிரிவுட்படுத்திக் கந்த புராணம் போலவே அமைத்து விட்டனர். கந்த புராணத்தில், "முருகன்", இராமாயணத்தில் "இராமர்"; அங்கு "சூரபன்மன்", இங்கு "இராவணன்"; அங்கு சூரபன்மன் தங்கை "அசமுகி"; இங்கு இராவணன் தங்கை "சூர்ப்பனகை" போர் நிகழ ஏது. இவ்வாறு ஒவ்வொன்றினையும் ஒத்துநோக்கின் நன்கு புலப்படும்.

கடைசியாக ஒன்று சொல்லி, இதனை நிறைவிக்கின்றேன். சூரபன்மன் "முருகனின்" பாரமேச்சுர வடிவத்தில், தன்னை மறந்து தானே போற்றியது போல, இராவணனும், "இராமரை"ப் போற்றுகின்ற போது, இராமரைக் கடவுளாகவே காண்கின்ற தன்மை காண்க —

கந்த புராணம்

"கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்திலேன் யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி யன்றோ? (சூரபன்மன் புகழுதல்)

என்பதுபோல,

இராமாயணம்

"சிவனோ அல்லன் நான்முகன் அல்லன் திருமாலாம்
அவனோ அல்லன் என்மெய் வரமெல்லாம் அடுகின்றான்
தவனோ என்னில் செய்து முடிக்கும் தானல்லன்
இவனோ யோதான் வேதமுதற் காரணன் என்றான்." (இராவணன் புகழுதல்)

சிவ புராணங்கள் கற்றவர்கட்கு ஆதரவின்மையால் கற்பார் அருகி விட்டனர். சிவ புராணம் கற்றவர்களும், அதனைச் சொற்பொழிவாற்றும் வன்மையாளர்களும் கிடைப்பதே அருமையாயிற்று. அதிலும் கந்த புராணத்தைக் கற்றவர்கள் கிடைப்பது அரிதினும் அரிது.

இக் குறைபாட்டை நீக்குவான் வேண்டி, "திருச்செந்திலாண்டவன்" திருக்கடைக்கண் நோக்கம் எழுகின்ற தென்பதற்கு ஏதுவாய், இப்பொழுது அதாவது விகாரி ஞு ஆனி மீ 24-ம்வ நடக்கப் போகும் "குடமுழுக்காட்டு விழா" (கும்பாபிஷேக விழா)வில் மலர் வெளிவருகின்றது. இதற்கு ஏதுவாக இருக்கும் கோயில் ஆணையாளர் உயர்திரு K. V. சுப்பையா பிள்ளை அவர்கட்கும், அவரது உள்ளக் கருத்திற்கியைய மாகாணக் கோயில்களுக்கெல்லாம் மாதலைவராய் விளங்கும் சென்னை கமிஷனர் உயர்திரு A. உத்தண்டராம பிள்ளை B. A. B. L., I. A. S. அவர்கள் ஆதரவளித்துப் போற்றுவது செந்தில் ஆண்டவன் திருவருளே.

இம்மலரில் எனக்கும் இடம் கொடுத்து உதவியதற்கு நன்றி செலுத்திக் கொள்ளுகின்றேன்.

ஒன்று எழுத மறந்தேன்! இக்கோயிலில் கந்தபுராண விளக்கம் முறையாக 1132 துன்முகி ஞு தை மாதப்பிறப்பு முதல் தொடங்கி இன்று வரை நடைபெற்று வருகின்றது.

அடியனேன் நீண்ட நாளாய்ச் செந்திலாண்டவனை வேண்டி வேண்டி இரந்து கொண்டிருந்த விண்ணப்பம் வெற்றி முழக்கத்தோடு தோன்றுவது கண்டு எனது உள்ளம் பூரிப்படைகின்றது.

நம் செந்திலாண்டவன் கருணை மல்கி வளர்வதாக.

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி - 8-'59.

௨

செந்தி வாழ்வு

(பேராசிரியர். கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., பி. எல்.,)

"முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே — ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்."

கந்தப் பெருமான் உவந்து வந்திருந்து சிந்தை குளிரும் முந்தைப்பதி செந்திப்பதியாகும். ஆதலால் செந்திப்பதியைத் தம் சொந்தப்பதியென நிந்தையில் அடியார் நினைந்து போற்றுவர். சிவபெருமானையன்றி மறந்தும் பிற தெய்வம் போற்றாத திருநாவுக்கரசு நாயனார் சிவனைக் குறிப்பிடும் பொழுது 'நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்' என்றும், 'சமரசூரபன்மாவைத் தடிந்தவேற் குமரன் தாதை' என்றும் இனம் சுட்டிக் கூறினார். அந்தக் குமரன் எங்கிருக்கிறான் என்று கூறும்பொழுது, 'நம் செந்தில் மேய வள்ளி மணாளன்' என்று அடையாளம் காட்டிப் பாடினார். வள்ளி மணாளன் உறைவதால் செந்திற்பதி அப்பருக்குச் சொந்தப் பதியாகி விட்டது. அத்தகைய சொந்த உரிமையை அவர் தமக்கு மட்டும் வைத்துக் கொள்ளாது நம்மனோரையும் சேர்த்து உளப்படுத்தி, என் செந்தில் என்று பாடாது, நம் செந்தில் என்று பாடியிருக்கும் கருத்தை நோக்கும் பொழுது நாம் மெய்மறந்து மகிழ்கின்றோம். 'நம்' என்ற அடை, செந்திலாகிய ஊரை மட்டும் சாருமா அல்லது நம் வள்ளி என வள்ளியம்மையாரைச் சாருமா அல்லது நம் வள்ளிமணாளன் என முருகனைச் சாருமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது, நம் என்பது மூன்று பெயரையும் தனித் தனி சார்ந்தும் நமக்கு உரிமைப்படுத்துகிறது. ஒருசேர மூன்றைக் கூட்டியும் உரிமைப்படுத்துகிறது. எனினும் முதற்கண் தான் அடுத்து நிற்கும் பெயராகிய செந்தில் என்னும் ஊரையே

முதன்மையாகச் சொந்தம் காட்டித் தழுவுகிறது. ஆகவே உண்மை அடியார்கள் திருச்செந்தூரைத் தம் சொந்த ஊராகவே மதித்துப் போற்றி அன்பு செலுத்துவார்கள்:—

“ கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் தோலாய் கண்டாய்
புலியுரி சேராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளி மிளிர்பிறை முடிமேற்சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய் நஞ்செந்தில் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே ”

தந்தையின் புகழைவிட மகன் புகழ் மலையென ஓங்கி மாண்புற்று யாவராலும் அறியப்பட்டதால், மகனைக்கூறி அவன் தந்தையை அடையாளம் சுட்டுவாராயினர். இத்தேவாரப் பாடலைத் தாண்டக வேந்தர் திருமறைக் காட்டில் உள்ள சிவன் கோயிலில் வைத்துப் பாடினர். அங்கிருந்த பொழுதும் தொலைவிலுள்ள திருச்செந்தூர் முருகனே அப்பர் உள்ளத்தைக் கவர்ந்து முன்னால் நின்றிருக்கிறான். மறக்கலாற்றாது அவரும் பாடினர். நம்மையும் மறக்க விடாது சேர்த்துப் பாடினர் என்பதை நாம் மறத்தல் கூடாது.

திருச்செந்தூர் கத்துந் தரங்கம் முற்றிவந் தெற்றும் ஒரு கடற்கரைப் பட்டினம். அலைவாய் என்றும், திருச்சீரலைவாய் என்றும் திருமுருகாற்றுப்படை தெரிவிக்கின்றது. அலைக்கும் அலைகளின் அருகில் உள்ளதால் அது அலைவாய் என்னப்பட்டது. அலைவாய், அலைவாய் என்னும் பெயர், ‘நீ செந்தில் முருகனை மறந்தால் பல் பிறவியிலும் அலைவாய்! அலைவாய்!’ என்று அறிவுறுத்துவது போன்றிருக்கிறது. இதற்குச் செந்தி என்றும் பெயர் உண்டு. திருச்செந்தூர் என்று நாம் இப்பொழுது அழைக்கின்றோம். திருச்செந்தூரை நினைத்தவுடன் ஓங்கியுயர்ந்த கோபுரமும், தேங்கித் திளைக்கும் திருக்கடலும், பாங்கில் வளரும் பால் மணலும் நம் மனக்கண் முன்னே வந்து நிற்கும். அங்குச் சென்று முருகனையும் அவன் தேவியரையும் காணாத கண்ணைப் புண் என்று தான் சொல்ல வேண்டும் :—

“வெள்ளி மணற்குன்றும் வேலா யுதனிருப்பும்
தெள்ளு திரைக்கடலும் தோன்றுமே - வள்ளியுடன்
தேனாறு பாயுந் திருச்செந்தூர்ச் சேவகனைக்
காணாத கண்ணென்ன கண்.”

ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பாற்குடங்களும் காவடிகளும் எடுத்துச் சென்று செந்தி வாழ்வினை வந்தித்து வழிபடுகின்றனர். கண்கவர் சன்னிதியான சண்முக விலாசத்தில் விசனம் தீர வசனம் இருப்போரும், கேடு நீங்கப் பாடுகிடப்போரும், அறங்கள் புரிந்து அரற்றி உருள்வோரும், நோன்பிருந்து நோய் களைவோரும் எண்ணற்றோர் ஆவர். பல மைல்களுக்கு அப்பாலிருந்தே கோபுரக் காட்சி நம் கண்ணைக் கவர்கிறது. கிட்ட நெருங்க நெருங்கக் கடல் அலைச் சத்தம் காதை அடைக்கிறது. மணல் மேட்டை ஏறிச் சென்றால், பால் நுரை கொழிக்கும் வெள்ளிய அலைகள் துள்ளிக் குதித்துக் கோயில் மதில்வரை வீசி வருகின்றன. கடலின் கரைமேல் திடலான வரை போல் மணல் மேடு சலியாமல் நிலை நிற்கிறது. அதன் தாளடியிலே தரங்கத்து அலைகள் தத்தித் தவழ்ந்து தள்ளாடும். இது இன்று நேற்று நிகழ்வது அன்று. நெடும் பண்டைக்கால முதல் நிலவி வருகிறது. இந்த மணல் மேடானது ஊழிக்காலத்தே தோன்றிய சண்ட மாருதச் சூருவளிகளாகிய பெரும் புயற்காற்றினால் திரட்டி வைக்கப்பட்ட மணற் குவியலாகும். இப்பொழுது அடிக்கும் காற்றினால் அதனகத்தே சிறுசிறு குழிகள் தோன்றித் தழும்பு பட்டதுபோற் காட்சியளிக்கும். அதன் அருகே வெள்ளை நிறத் தலைகளையுடைய அலைகள் ஆடும் கடல் அமர் புரிவதுபோற் காட்சியளிக்கும். சங்கப் புலவராகிய மருதனிளநாகனார் ஒரு பாண்டிய மன்னனை வாழ்த்தும்பொழுது, 'நீ திருச்செந்தூர் மணல் மேட்டிலுள்ள மணலைக் காட்டிலும் பல நாள் வாழ்வாயாக!' என்று புறநானூற்றுப் பாடல் ஒன்றில் கூறுகின்றார்:—

"தாழ்நீர், வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்றுறைக்
கடுவளி தொகுப்ப ஈண்டிய
வடுவாழ் எக்கர் மணலினும் பலவே."

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கூறியவை இன்றும் உண்மையாய் அங்கு விளங்குவதைக் கண்டு மகிழலாம்.

இவ் வழகிய முருகன் திருப்பதிக்குச் செந்தில் என்ற பெயரே அதன் தொன்மை வாய்ந்த பெயராகத் தோன்றுகின்றது. சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள் குன்றக்குரவையில் எவ்வாறு போற்றுகிறார் பாருங்கள்:—

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே."

இங்கு முருகன் உறையும் திருப்பதிகளைக் கூறவந்த புலவர் முதற்கண் செந்திற்பதியைக் கூறினார். ஏனைப் பதிகளை வாளா கூறிய புலவர் செந்திலுக்குச் சீர்கெழுசெந்தில் என்று அடை கொடுத்துக் கூறினார். ஏனைப்

பதிகளுக்கு இல்லாத சிறப்பு செந்திற்பதிக்கு முதன்மையாக உண்டு. அங்குள்ள முருகன் கோயில் கடற்கரையில் அமைந்த மலேக்குகையுள் உள்ளது. அந்த மலே கந்தமாதன பர்வதம் என்றும் சுகந்தசைலம் என்றும் பெயர் பெறும். செம்மல் முருகன் நம் விம்மலேப் போக்க அம்மலே வந்து அமரலானுன். அதன் குகையுள் உறைவதால் குகன் என்றும் பெயர் பெற்ருன். அந்த மலேயானது புறத்தார்க்குத் தோன்ருதபடி இரகசியமாய் இருப்ப தொன்று. அந்த மலேயிலுள்ள குகையும் மிக மிக இரகசியமானது. அவ்விருண்ட குகையினுள்ளே முருகன் தன் இயற்கைப் பேரொளியைச் சுடர்விட்டுச் சுவலிக்கச் செய்து கொண்டு தன்னேத் தொழும் அடியார் மன இருளேயும் போக்கி நிற்கிருன். கடல் ஒளித்த சூரன் உடல் கிழித்த நாள் முதல் முருகன் வெற்றி வாகைசூடி அங்கு விளங்கலானுன். அதனுல் அது சயந்திபுரம் என்றும் வழங்கப் பெறும். அன்று முதல் அமரர் கோனிலிருந்து ஆதிசேடன் வரை அமரர் யாவரும் அங்கு வந்து வணங்குவராயினர். கயிலே மலேயை ஏறிச் சென்று கண்ணுதற் பெம்மான் கழலடிவணங்கி அரிதிற் பெறுகின்ற பேறு யாவும் இச்செந்திற் கோயிலே வந்து தொழுது அடியார்கள் எளிதிற் பெறவேண்டியே செந்தி முருகன் இச் சுகந்த கிரிக்கு உகந்து வந்தான். இம் மலேயை ஏறி முருகனே வழிபட்டால் எம் மலேவும் ஏகி விடும். பேரா இடர்களும் பேர்ந்தொழியும். தீரா நோய்களும் தீர்ந்து விடும். ஆதி சங்கராச்சாரியார் இத்தலத்தை வந்து சேவித்துக் காசநோய் தீரப்பெற்ருர். ஊமையாய் இருந்த குழந்தை குமரகுருபரர் பேச்சுத்திறனும், தமிழ்ப் புலமையும், ஞானமும் பெற்ருர்.

திருச்செந்தூர்க் கடலில் கிளம்பும் அலேகள் மிகப்பெரியவை. ஆண் அலேயென்றும் பெண் அலே யென்றும், ஒன்றன் பின் ஒன்ருய், அடுக்கடுக்காகக் கடலின் நடுவிலிருந்து மலே போலச் சுழன்று வீசிச் சுருட்டிக் கொண்டு கரையை நோக்கிச் சீறிப் பாய்கின்றன கரைக்கு வந்ததும் ஒன்றும் இல்லேயாய், நீரொடு நீராய் மறைந்து விடுகின்றன. அதுபோல், தன் சன்னிதிக்கு வந்து சேவிக்கும் அடியார்களின் துயரங்களும் வேரோடு கெட்டு வெறுமிதாய்விடும் என்ற உண்மையைக் காட்டவே செந்திவாழ்வாகச் செவ்வேள் முருகன் இங்குக் கோயில் கொண்டான்.

ஞானபண்டிதன் கோயிலேச் சுற்றி வேதங்களே பன்னீர் மரங்களாய் முளேக்கின்றன. அவற்றின் இலே ஒவ்வொன்றும் ஒரு மந்திர ஏடாகும். முருகனுக்கு அபிடேகமாகும் திருநீற்றை அப் பன்னீர் இலேயில் வைத்து வணங்கி வாய்க்கொண்டும் மெய்க்கொண்டும் வடிவேலனே வந்திப்பவருக்கு எல்லாவித நோய்களும், பிறவிப் பிணியும் தீர்ந்துவிடும். இராமனேக் கொண்டு பெண்ணுன தாடகையைக் கொன்ற பாவத்தால் விசுவாமித்திர முனிவன் குன்ம நோயால் பீடிக்கப் பட்டான். பின்னர்ச் செந்தி வாழ்வின் இலே விபூதியைத் தரித்த பின்னரே

குணமடைந்தான். இலைவிபூதியின் பெருமையைப்பற்றி மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடியுள்ள பாடலையும் இங்கு நினைவு கூரத்தகும்:—

"இலையமில் குமரவேள்முன் வணங்குவார்க் கென்றுந்துன்பம்
இலையடு பகைசற்றேனும் இலைபடு பிணிநிரப்பும்
இலையளற் றுழன்றுவீழ்தல் இலைபல பவத்துச்சார்பும்
இலையென இலைவிபூதி யெடுத்தெடுத் துதவல் கண்டார்."

செந்திவாழ்வாக வாழ்கின்ற வாள் ஒளிப்பொருளே நம் வாழ்வு, நமக்கு வாழ்வைத் தருபவன் என்பதை நாம் உணர வேண்டும். இக் கலியுகத்தில் செந்திவாழ்வே நம் கண்கண்ட தெய்வம். அவனையின்றி நமக்கு வேறு போக்கும் இல்லை, புகலுமில்லை. அவனை நம்பி வாழ்ந்தோர் கெடுவதில்லை. ஓங்காரத்துள் ளொளிக்குள்ளே தேங்கிக் கிடக்கும் முருகன் உருவைத் திருச்செந்தூர்க் கோயிலின் குகைக்குள்ளே கண்டு நாம் கும்பிடுதல் கடனாகும். ஆறு தலையோடும் முருகன் நம்மை அணுகிவந்து ஆறுதலை யளிப்பான். ஞானம் நிறைந்த அவன் வேலை வணங்குவது நமக்கு வேலையாய் மோனம் கொள்வோம். நம் ஊனம் தீர்ப்பது அவன் வேலை. அவனையே நம்புவோம்.

"உன்னை யொழிய வொருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன் — பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே."

HILAL PRESS
TIRUNELVELI